பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5.00 Registered as a News Paper in Sri Lanka பக்கம் 8

# வலம்புரி
# VALAMPURI

மங்கையர் மனம் கொள்ளை
கொள்ளும் தங்க நகைகளுக்கு
சாரங்கா
நகைமாடம்
177 4. கஸ்தூரியாா வீதி,
யாழ்ப்பாணம்.
TP;- 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 3 திங்கட்கிழமை (19-8-2002) தொலைபேசி 3378 ஒலி 243

# தேசிய அரசு அமைக்கும் எண்ணம்
# ஐ.தே. முன்னணிக்குக் கிடையாது!

## அமைச்சர் மகிந்த விஜயசேகரா தெரிவிப்பு

(கொழும்பு நிருபர்)

**நெருக்கடி மிக்க அரசியல் சூழ்நிலை காணப்படுகின்ற போதும் தேசிய அரசொன்றை அமைக்கும் எண்ணம் ஐக்கிய தேசியமுன்னணி அரசுக்கு அறவே இல்லை.**

**இவ்வாறு கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் மஹிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.**

மின்னேரியாவில் நடை பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையி லேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில்;

அரசியலில் நெருக்கடி நிறைந்த இன்றைய சூழ்நிலை யில் தேசிய அரசு அமைப்பதே பொருத்தமானதெனசிலர்கரு

(8 ம் பக்கம் பார்க்க)

# 4 படகில் 150 புலி உறுப்பினர்கள்
# நேற்று வாகரைக்குச் சென்றனர்

## கண்காணிப்புக்குழுவினரும் சென்றனர்

(மட்டக்களப்பு)

முல்லைத்தீவுக்கும் மட்டக் களப்புக்கும் இடையில் விடு தலைப்புலிகளின் முதலாவது கடற்பயணம் நேற்று ஆரம்ப மானது.

நேற்றுக்காலை 8 30 மணியளவில் 150விடுதலைப் புலி உறுப்பினர்களுடன் புறப் பட்ட நான்கு படகுகள் பிற் பகல் 1.30மணியளவில் மட் டக்களப்பு வாகரையைச் சென்றடைந்தன

நேற்றுக்காலை 7மணியள வில் கடற்பயணத்தை ஆரம் பிப்பதாக இருந்த போதிலும் படகுகளின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரண மாக சுமார் ஒருமணிநேரம் தாமதித்த பின்னரே கடற் பயணம் ஆரம்பமானது விடு தலைப்புலிகளின் நான்கு படகுகளிலும் தலாஒவ்வொரு சர்வதேச யுத்தநிறுத்த கண் காணிப்புக்குழு உறுப்பினர் கள் பயணம் செய்தனர்.

விடுதலைப்புலிகளின் கடற் பயணத்தைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் இலங்கைக் கடற்படையின் இரண்டு டோறாப் படகுகள் சேவை யில் ஈடுபட்டிருந்தன

(8 ம் பக்கம் பார்க்க)

## நிதிவழங்கியும் மலசலகூடம் அமைக்கப்படவில்லை

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள முள் ளிப் பகுதியில் மலசலகூடங் கள் அமைப்பதற்கு நிதி வழங்கப்பட்ட போதும் அவ் வேலைகள் இன்னமும் பூரணப் படுத்தப்படவில்லை, என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிராம சேவையாளர்களின் சிபார்சிற்கு அமைவாக 23 குடும்பங்கள் தெரிவு செய்யப் பட்டு அவர்களுக்கு மலசல கூடம் அமைப்பதற்குத் தேவையான மூலப் பொருட் கள் வழங்கப்பட்டன எனி னும் மக்களின் அக்கறையீனம் காரணமாக இவ் வேலைகள் பூரணப்படுத்தப்படாமல் உள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

இப்பகுதியில் உள்ள மக்கள் மலசல கூட வசதிகள் இல்லை என எடுத்துக்கூறியதை

(8ம் பக்கம் பார்க்க)

அன்புவாசகர்களே,
நாளை வெளிவர வேண் டிய உங்கள்

**சங்குநாதம்**

தவிர்க்கமுடியாத கார ணத்தால் நாளை மறு தினம் புதன்கிழமை வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம்.

(ஆ-ர்)

# அரசு-புலிகள் பேச்சுவார்த்தையில் கதிர்காமரும் பங்குபற்ற வேண்டும்!

## பொது.ஐ.முன்னணி கோரும்!

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுத தலைப்புலிகளுக்கும் இடை யில் அடுத்த மாதம் தாய்லாந் தில் நடைபெறவுள்ள சமா தானப் பேச்சுவார்த்தையில் எதிர்க்கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணியை யும் பங்குபற்ற அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கை தகவல் வெளியாகியுள்ளது.

தாய்லாந்துப் பேச்சுவார்த் தையில் இடம்பெறப்போகும் விடயங்களை எதிர்க்கட்சி யென்றவகையில் அதனைத்

டக்களப்பு வாகரையைச் சென்றடைந்தன

நேற்றுக்காலை 7மணியள வில் கடற்பயணத்தை ஆரம் பிப்பதாக இருந்த போதிலும் பயணத்தைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் இலங்கைக் கடற்படையின் இரண்டு ரோறாப் படகுகள் சேவை யில் ஈடுபட்டிருந்தன

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுத தலைப் புலிகளுக்கும் இடை யில் அடுத்த மாதம் தாய்லாந் தில் நடைபெறவுள்ள சமா தானப் பேச்சுவார்த்தையில் எதிர்க்கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணியை யும் பங்குபற்ற அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாக பொது ஜன ஐக்கிய முன் னணி வட்டாரங்களிலிருந்து தகவல் வெளியாகியுள்ளது.

தாய்லாந்துப் பேச்சுவார்த் தையில் இடம்பெறப்போகும் விடயங்களை எதிர்க்கட்சி யென்றவகையில் அதனைத் தெரிந்து கொள்வதற்கும் சிங் கள மக்களின் உரிமைகளை

(8ம் பக்கம் பார்க்க)

# பேச்சு நடைபெறும் இடத்தை உடனடியாக அறிவிக்க முடியாது

## தாய்லாந்து அமைச்சர் தெரிவிப்பு

(பாங்கொங்)

இலங்கை அரசாங்கத்திற் கும விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை தாய்லாந்தில் எந்த நகரில் இடம்பெறுமென்ற விபரத்தை உடனடியாக வெளியிட முடி யாது.

இவ்வாறு தாய்லாந்தின் வெளிவிவகாரஅமைச்சர் தெரி வித்துள்ளார்.

அடுத்தமாதம் நடுப்பகுதி யில் தாய்லாந்தில் பேச்சு வார்த்தை ஆரம்பமாகவுள்ள போதிலும், அவை தாய்லாந் தின் எந்த நகரத்தில் இடம் பெறுமென்ற விபரத்தைவெளி யிட வெளிவிவகார அமைச்சர் மறுத்துவிட்டார்.

இதேவேளை சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதற் குரிய இடங்களாக தாய்லாந் தில் புக்கற்தீவு, சியாங்ராய், சியாங்மாய், சோன்புரி மற் றும் பாங்கொங் ஆகிய நகரங் கள் தெரிவு செய்யப்பட்டுள் ளமை இங்கு குறிப்பிடத்தக் கது. (இ)

# சமாதானப் பேச்சுக்கு முன் முஸ்லிம் தலைவர்கள் பிரதமரைசந்திக்கவேண்டும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலி களுக்கும் அரசாங்கத்திற்கு மிடையிலான நேரடிப் பேச்சு வார்த்தை தாய்லாந்தில் ஆரம்பிக்கப் படுவதற்கு முன் னர் முஸ்லிம் தலைவர்கள் பிரதம மந்திரி ரணில் விக் கிரம சிங்காவை சந்திக்க வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரி யல் அஸ்ரப் கோரிக்கைவிடுத் துள்ளார்.

வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் நிலை என்ன என்பது குறித்து இதுவரை எவரும் தெளிவான பதில்

(8ம் பக்கம் பார்க்க)

கையில் இருக்கும் நகைகளுக்கு

**கச்சிதமான கைமாற்று**

**ஹற்றன் நஷனல்**

**அடகு வைக்கும் வசதி**

ஒரு பவுணுக்கு ரூ. 5500/- அடகுப்பணம்!
மாதாந்த வட்டி 1.83% மட்டுமே!

- அதிகூடிய அடகுப்பணம்
- மிகக் குறைந்த வட்டி
- விரைவான சேவை
- தவணை முறையில் மாதாந்தம் மீளச் செலுத்தும் வசதி
- அடகு நகைகளுக்கு இலவச காப்புறுதி
- கணனி மூலம் மதிப்பீடு செய்யப்படுவதால் தங்கநகைகளுக்கு சேதம் ஏற்படாது
- உயர் பாதுகாப்பும் கொடுக்கல் வாங்கல்களில் பூரண இரகசியம் பேணப்படும்

மேலதிக விபரங்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி யாழ் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்

**ஹற்றன் நஷனல் வங்கி**

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

(சி-4634)

சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ் நகர, சைவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய் குற்றமற்ற தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் 32வயது மண மகனுக்கு பெற்றோர் படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல. 302 வலம்புரி 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்

(5832)

# சைவசித்தாந்த நோக்கில் கந்தன் வழிபாடும் காவடியாட்டமும்

சங்ககாலத்தில் 'முருகன்' என்ற பெயரில் வணங்கப்பெற்ற கடவுளையே தேவார காலம் தொடக்கம் 'கந்தன்' என்ற நாமத்திலும் மக்கள் வழிபட்டனர். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரின் தேவாரத்திலேயே கந்தன் என்ற பெயரைக் கண்டு கொள்ளமுடிகிறது. 'பெற்று உசந்தது கந்தனையே' என்பது திருஞானசம்பந்தரின் தேவாரம். பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் 'கந்து' என்ற சொல்லடியிலேயே கந்தன் என்ற சொல் தோன்றியிருக்கலாம் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். தொல்காப்பியம் குறிப்பிடும் 'கொடிநிலை கந்தழிவள்ளி' என்ற சொற்றொடரில் வரும் கந்தழி என்பது பற்றுக்கோடில்லாதது என்று பல பொருள் கூறினும் அது கந்தன் சொல்லையே சுட்டி நிற்கின்றது: அந்தவகையில் கந்தனை வந்தனை செய்யும் அடிப்படையில் தோன்றிய ஒரு சமய வழிபாட்டு முறையே காவடியாட்டமாகும். இவ்வாறு தனித்துவம் பெற்று விளங்கும் காவடியாட்டத்திற்கு ஒருசமயப்பின்னணி மட்டுமன்றித் தத்துவ விளக்கமும் உண்டு.

காவடியிலும் காவடியாட்டக்காரரின் கைகளிலும் காணப்படும் வேலானது ஆழ்ந்து அகன்று நுண்ணியனாக விளங்கும் சைவசித்தாந்தக் கடவுட் கொள்கையினை சுட்டி நிற்கின்றது. கடவுளை எப்பொழுதும் பற்றிப் பிடிக்க வேண்டும் என்ற பேருண்மையினையும்கையிற் காணப்படும் வேல் உணர்த்துகின்றது ஆணவமுனைப்புடைய அவுணர்களை அழித்து விண்ணோர் சிறைமீட்ட திருக்கை வேலின் குறியீடாகவே காவடியாட்டக்காரரின் கைவேல் விளங்குகின்றது. தீயவர்களை அழித்து நல்லோரைக் காப்பாற்றும்கடவுள் தத்துவத்தை காவடிவேல் காட்டி நிற்கின்றது காவடியில் காணப்படும் மயிலின் தோகையானது பிரணவமாகிய ஓங்காரம் குறிக்கும் உயர் தத்துவத்தைக் குறித்து நிற்கின்றது. காவடியில் கட்டப்பட்டிருக்கும்மயில் இறக்கைகள் ஆணவம் அழியாது வலிகுன்றி மலபரிபாசப் பட்டிருக்கும் என்ற சைவசித்தாந்த அணிவுக் கொள்கையினையும் சுட்டிநிற்கின்றது.

ஆணவம் அடங்கும்

காவடியில் மயில் இறக்கையானது சூரபன்மனின் ஆணவம் அடங்கி அவன் மயிலானதை உணர்த்துகிறது. ஒரு சாரார் பக்தன் ஒருவன் ஒரு ஆண்டில் ஒருமுறை தன் ஆணவத்தை அடக்கி முருகன் முன்னிலையிற் காவடியுடன் திருவடியில் வந்து தன்னை ஒப்புவிப்பதாகவும் அத்துடன் வேலைப் பாய்ச்சி முள்ளு மிதி அடியில் நடந்து வருவர் அப்பனே உன்னால் உண்டாக்கப்படுவது இந்த உடல் அதனை உன்பெயரைச்சொல்லிவருத்தி உன்னை நினைத்து உருகி ஆடிப்பாடி வருகின்றேன் என நினைக்கின்றான். இதுவே செடிக்காவடியின் மெய்ப்பொருள். ஆகவே சைவசித்தாந்தம் கூறும் ஆணவம் கன்மம் என்ற கோட்பாடுகளை விளக்கும் வழிபாட்டு முறையாகக் காவடியாட்டம் நிகழ்த்தப்படுகின்றது. காவடி எடுப்பவர் சைவசித்தாந்தம் கூறும் ஆ[illegible]வை சுட்டி நிற்கின்றன எனலாம் இவ்வான்மாவானது ஆணவம் கன்மம் முதலான பாசங்களை விட்டுநீங்கி ஆன்மீக விடுதலையினை அவாவி நிற்றலே காவடியாட்டத்தின் உட்பொருளாகும். கடினமான தூக்குகாவடி பத்மாசனகாவடி வழிபாட்டு முறைகளை நிகழ்த்துகின்றவர்களின் வாழ்க்கையினை நோக்குகின்றபோது ''அவரவர் செய்ததை அவரவரே அனுபவிப்பர்'' என்ற சைவசித்தாந்த கன்மக்கொள்கையின் ஓர் உண்மை தெளிவாகின்றது. இவ்வாறாக காவடியிலும்காவடிவழிபாட்டுமுறையிலும் சைவககொள்கையும் சைவசித்தாந்த மெய்யியல் அடிப்படைகளும் நன்கு எதிரொலிப்பதைக்கண்டுகொள்ள முடிகிறது.

ஈழத்திற் காவடியாட்டம்

கந்தவனக்கடவை முதற் கதிர்காமம் வரையிலும் காவடியாட்டத்தின்மூலமாகக் கந்தனை வழிபடும் மரபு காணப்படுகின்றது. அன்னதானக்கந்தன் என்று அன்புடன் அழைக்கப்படும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் ஆண்டு தோறும் ஆவணி மாதத்தில் நிகழும் திருவிழாக் காலங்களில் தூக்குக் காவடி, துலாக்காவடி, முள்ளுமிதிக் காவடி, பறவைக் காவடி எனப் பலவகையான காவடிகளை எடுத்து கந்தனுக்குக் காணிக்கை செலுத்துவர். இதனால் சந்நிதிக் கந்தனை காவடிக் கந்தனாகவும் விளங்கும் மாட்சி குறிப்பிடற்பாலதாகும்.

கதிர்காமக் கந்தன் ஆடி மாத திருவிழா நாட்களில் வேலவனின் வீதியெங்கும் வேற்காவடி, செடிக்காவடி, அன்னக் காவடி முதலான காவடிகளைஎடுத்து வந்தனை செய்வதைக் காணமுடிகின்றது.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் ஆவணி மாதத்தில் வரும் தேர், தீர்த்தத் திருவிழாத் தினங்களில் வேலவனின் வீதிகளில் பாற்காவடி, பறவைக் காவடி சர்க்கரைக்காவடி என்பன எடுத்து கந்தனை வழிபடுகின்றனர்.

இவ்வாறு திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் காணப்படும் கந்தன் கோயிகளிலும் காவடி வழிபாட்டுமுறை காணப்படுகின்றது.

ஈழத்தில் உள்ள முருகன் ஆலயங்களில் மட்டுமன்றி சிவன்கோயில்கள்சக்திஆலயங்கள் போன்றவற்றிலும்காவடியாட்டம் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடற்பாலதாகும்.

பக்தியுடன் ஆரம்பித்த காவடியாட்டம் மனவைராக்கியம் உள்ளவர்களும் காவடியாடலாம் என்ற நிலையில் விளங்குகின்றது. ஆறுமுகனின் அருள்கடாட்சம் வேண்டி நிகழ்ந்த காவடியாட்டம் அவைக்காற்றுக் கலையாக அரங்குகளில் ஆடப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். கந்தக் கடவுளின் வழிபாட்டு முறையின் தோற்றம் பெற்ற காவடியாட்டம் கிராமிய நடனம் எனக்கூறும் கலைமரபு பெற்றுச் சிறப்புடன்திகழ்கின்றது. □


## திருமதி ஞானசக்தி கணேசநாதன்

(யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி)


## வெற்றி இலக்கை நோக்கி முன்னேறும் முத்தையா முரளிதரன்

(கொழும்பு)

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 300விக்கெட்டுக்களை கைப்பற்றிய முதலாவது இலங்கைப் பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இன்னமும் 15விக்கெட்டுக்களை மட்டுமே கைப்பற்ற வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் தற்போது மொறொக்கோவில் இடம் பெற்றுவரும் ஒரு நாள் முக்கோண கிரிக்கெட் போட்டியில்முரளிதரன் இவ் இலக்கை எய்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

194சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடிய முரளிதரன் 23.87 என்ற சராசரியில் 285விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளதும் 76டெஸ்ட் போட்டிகளில் 430விக்கெட்டுகளை கைப்பற்றியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் சிரமதானம்

(தென்மராட்சி)

நுணாவில், பருத்தித்துறை வீதியின் இருமருங்கும் வளர்ந்து காணப்பட்ட செடி கொடிகளை நேற்றையதினம் 50க்கு மேற்பட்ட பொதுமக்களும், சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களும் சிரமதானம்மூலம் துப்புரவுசெய்தனர்.

இப்பாதையின் இருமருங்கும் வளர்ந்துநின்ற செடி கொடிகள் வாகனங்களின் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாக கடந்த சில மாதங்களாக இருந்து வந்துள்ளது.

நேற்றைய சிரமதானப் பணியில் சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினர்களான க. சிவராசா க.மார்க்கண்டு, செயலாளர் எம். எஸ். சரவணபவ, சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் மற்றும் மட்டுவில் தெற்கு கலைமகள் சனசமூகநிலைய உறுப்பினர்களும் பங்குகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

## 762 ஆம் இலக்க பஸ் சேவையை மீளவும் ஆரம்பிக்க கோரிக்கை

(மந்திகை)

பருத்தித்துறையில் இருந்து வடமராட்சி கிழக்கிற்கான 762 ஆம் இலக்கப் பேருந்துச் சேவையை ஆரம்பிக்குமாறு அப்பகுதி மக்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையைக் கோரியுள்ளனர்.

கடந்த காலங்களில் வடமராட்சி பிரதேசத்திற்கான பஸ் சேவை பருத்தித்துறை நகரிலிருந்து சிவன்கோவில் வீதி, தும்பளை, கற்கோவளம் பகுதி ஊடாக வல்லிபுரக் கோவிலடியை அடைந்து அங்கிருந்து வடமராட்சி கிழக்கிற்கு இடம்பெற்றது.

தற்போது பருத்தித்துறை நகரிலிருந்து புறப்படும் பஸ், மந்திகை ஆலடிச்சந்திஉட்பட கதிர்காமம் வீதி ஊடாக வல்லிபுரக் கோவிலை அடைந்து வடமராட்சி கிழக்குக்குச்செல்கின்றது.

இதனால் தும்பளை, கற்கோவளம் ஆகிய பகுதி மக்கள் சுமார் 2கிலோமீற்றர் தூரம் சென்றே பஸ் சேவையினை பெறவேண்டியுள்ளது.

எனவே முன்பு சேவையில் ஈடுபட்டது போன்று 762வது இலக்கப்பாதை ஊடான பஸ் சேவையினை ஆரம்பிக்குமாறு இலங்கை போக்குவரத்து சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-23)

## பஸ் பள்ளத்தில் பாய்ந்தது 27 பேர் படு காயம்

(கொழும்பு)

மாத்தளை மாவட்ட உடகப்புவிற்ற பகுதியில் தனியார் பஸ் வண்டியொன்று மலைச் சரிவில் இருந்து பள்ளத்தை நோக்கி பாய்ந்ததில் அதில்பயணம் செய்த 27 பிரயாணிகள் படுகாயமடைந்துள்ளனர்.

களிநுவரவிலிருந்து மாத்தளை நோக்கிச் சென்ற இந்த வண்டி மற்றோர் வாகனமொன்றுக்காக வீதியை ஓரப்படுத்தி சென்றபோதே பஸ் பள்ளத்தில் வீழ்ந்துள்ளது

படுகாயமடைந்தவர்கள் அனைவரும் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற போதிலும், 10 பேரின் நிலை கவலைக்கிடமாகஉள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க-08)

## தி.மு.க.தலைவர்களின் வீடுகள்மீது தமிழக காவல்துறையினர் சோதனை

### சொத்து விபரங்கள் பலவும் கண்டுபிடிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் திராவிட முன்னேற்ற கழகத்தின் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் தலைவர்களின் வீடுகளில் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புகுழு காவல்துறையினர் நேற்றுமுன்தினம் காலை திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இந்ததிடீர் சோதனைகளின் போது தி.மு.க,வின் தலைவர்களும் உறுப்பினர்களும் வருமானத்துக்கு அதிகமான சொத்துக்கள் சேர்த்திருப்பதற்கான ஆவணங்கள் கிடைத்துள்ளதாக காவல்துறைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தி.மு.க,வின் முன்னாள் வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்சுமார் 59இலட்சம் ரூபாமதிப்புக்கு சொத்துக்கள் சேர்த்திருப்பதாகவும்.

மாநில முன்னாள் மீன்வள அமைச்சர் திருமதி ஜூமித்த சந்திரன் சுமார்42 இலட்சம் ரூபா மதிக்கத்தக்க சொத்துக்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் 1996ம்ஆண்டு மேமாதம்முதல்2001ம்ஆண்டு மே மாதம் வரைஅமைச்சர்களாக இருந்தபோதே இந்த சொத்துக்கள் யாவும்சேர்க்கப்பட்டதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. அதுதவிரதற்போதுமாநிலசட்டசபை உறுப்பினராகவுள்ள பி. ரங்கநாதன் வீட்டில்நடத்திய சோதனையின் போது சுமார் ஒன்றரை கோடிரூபா அளவுக்கு பல்வேறு முதலீடுகளை செய்துள்ளார்.

மேலும் அ இ அ.தி.மு.க. அரசு ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்து தற்போது தி மு. கவில் உள்ள தலைவர் ஒருவரும் சுமார் 1கோடி42இலட்சம் ரூபா அளவுக்கு சொத்துசேர்ந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக இலஞ்ச ஒழிப்புத் துறையின் குறிப்பு தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இந்த சோதனைநடவடிகையானது தி.மு.க.தலைவர்கள்தொண்டர்கள் இடையே அச்சஉணர்வை ஏற்படுத்தும் முகமாகவே தமிழக அரசு மேற்கொண்டு வருவதாக தி.மு.க.வின் தலைவர் மு.கருணாநிதி கருத்து வெளியிட்டுள்ளார். (க-8)

# சமாதானப் பேச்சுக்கு ஆதரவாக

# தலைநகரில் எழுச்சிப் பேரணி

### செப் 9இல் நடத்த ஆளும் தரப்பு ஏற்பாடு

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு ஆதரவு தெரிவித்து தென்னிலங்கை மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கொழும்பு நகரில் பிரமாண்டமான எழுச்சிப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் செப். 9ஆம் திகதி இவ் எழுச்சிப்பேரணியை நடத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளது.

'மக்கள் சக்தி' என்னும் பெயரில் நடத்தப்படவுள்ள இவ் எழுச்சிப்பேரணிக்கான ஆரம்ப நடவடிக்கைகளில் தொழில் அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளரும் ஈடுபட்டுள்ளார்.

இவ் எழுச்சிப்பேரணியில் சமாதானத்தை விரும்பும் அனைவரையும் இன, மத பேதங்கடந்து கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக நாடளாவிய ரீதியில் பெரும் எடுப்பில் பிரசார நடவடிக்கைகள் மேற்கொண்டு பெரும்பான்மை மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது (உ)

# பதவிக்குரிய நியமனம் இன்னமும் இல்லை

### பிறப்பு. இறப்பு பதிவாளர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் எல்லாமாக 42 பதிவாளர்கள் உள்ளனர். அவர்களில் 13 பேருக்கு 10 வருடங்களுக்கு மேல் சேவையாற்றியும் கூட இன்னமும் தங்கள் பதவிக்குரிய நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

யாழ். செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பிறப்பு, இறப்பு பதிவாளர்களுக்கான கணனி மயப்படுத்தப்பட்ட புள்ளி விபரப்பட்டியல் தொடர்பான பயிற்சிப் பட்டறையில் மேற்கண்டவாறு தகவல் தெரிவிக்கப்பட்டது.

பதிவாளர் நாயகம் எல்.கே. ரட்ணஸ்ரீ தலைமையில் இடம்பெற்ற மேற்படி பயிற்சி வைபவத்தில் குறிப்பிட்ட 13 பதிவாளர்களும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தற்காலிக நிலையிலேயே உள்ளனர் இவர்களுடைய பதவி நிரந்தரமாக்கப்பட வேண்டியது அவசியமாகும் என சுட்டிக்காட்டப்பட்டது.

பதிவாளர்களின் இதர பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட பதிவாளர் நாயகம் அடங்கிய குழுவினர் கடந்த 16 ஆம் திகதி சட்டத்தரணிகள் சங்க பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-06)

# தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கில் ஏழாம் நாளான இன்று தர்சனா நவவேந்திரனின் பாட்டுக் கச்சேரி பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளது. (க-(3)

# தெய்வீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில் வடபிரதேச இந்துப் பேரவை, 63 நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்திவரும் தெய்வீக நிகழ்ச்சிகளில் இன்று சைவப்புலவர் நித்தியசரீதரன் 'நேத்திக்கடன்களும் வழிபாடும்' என்ற பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். (க-3)

# குறைந்த லீவு பெறும் ஆசிரியரின் சேவைக் காலம் ஒருவருடத்தால் நீடிப்பு

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எட்டு வருடங்களில் குறைந்தளவு லீவு பெற்ற ஆசிரியர்களின் சேவைக்காலம் ஒரு வருடத்தால் நீடிக்கப்படும்.

இதன் பொருட்டு ஆசிரிய சேவை ஒரு வருடத்தால் அதிகரிக்கப்பட்டு, அவற்றுக்குரிய சம்பள பிரமாணங்களில் அதிகரிப்புகள் ஏற்படுத்தப்படும் என கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற இலவச சீருடையைப் பெற்றுக் கொடுப்பதற்குபுதிய நடைமுறை அடுத்தவருடம் அமுலாகும் எனவும் கூறியுள்ளார். (க-03)

# விரிவுரையாளர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்கள் அனைவரையும் இன்று காலை 10 மணிக்கு கலாசாலைக்கு தவறாது சமுகம் தருமாறு அதிபர் கு. சதாசிவமூர்த்தி கேட்டுள்ளார். (ந-5)

### இந்து கலாசார அமைச்சர் தி- மகேஸ்வரன்

# இந்திய சுதந்திர தினத்தை ஒட்டி வாழ்த்துச் செய்தி அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் சார்பாகவும் மற்றும் வரலாற்று கலாசார பொருளாதார ரீதியாக பாரத நாட்டு மக்களுடன் உணர்வு பூர்வமான பிணைப்பைக் கொண்டுள்ள இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் சார்பாகவும் இந்திய சுதந்திர 55 ஆவது நிறைவு நன்னாளில் எனது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் 55 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்து சமய விவாகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன், இலங்கைக்கான இந்திய நாட்டின் புதிய தூதுவர் ஸ்ரீ நிருபன் சென்னுக்கு அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் வாழ்த்துச் செய்தியில் இந்திய சுதந்திரமானது மிகப் பாரிய அளவில் தமது சொந்த நலன்களை அளப்பரியதியாகம் செய்த அதி உன்னத தேசியவாதிகளின் தலைமையில் நடந்த மிக நீண்ட போராட்டத்தின் மூலம் பெறப்பட்டது. யான் பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் பாரதத்தின் தேசியத்தந்தை மகாத்மா காந்திஜி மற்றும் அவரது வலக்கரமாக விளங்கிய பண்டிட் ஜவகர்லால் நேருஜி உட்பட இந்தேசியத் தலைவர்கள் எமது நாட்டுக்கு விஜயம் செய்த வரலாற்றை அன்றைய மூத்த தலைமுறையினர் எமக்கு எடுத்துச் சொல்வார்கள். மேலும், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி ஸ்ரீமதிவிஜயலட்சுமி பண்டிட் ஸ்ரீமதி சறோஜினி நாயுடு ஸ்ரீ சத்தியமூர்த்தி முதலானஇந்தியதேசியத்தலைவர்களும் எமது நாட்டுக்கு வந்து சுதந்திரபோராட்டத்ன் உணர்வினை எமக்கு எடுத்து ஊக்கப்படுத்தினார்கள்.

இந்திய நாட்டின் பிரதம அமைச்சர் மேதகு ஸ்ரீஅடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் ஒரு தடவைக்கு மேல் இலங்கைக்கு விஜயம் செய்துஎமது மக்களின் அபிலாஷைகளை சரியான வகையில்இனங்கண்டுள்ளார். அவரது காத்திரமான தலைமையில் நாடுபொருளாதார அபிவிருத்தியில் என்றும் இல்லாதவாறு முன்னேற்றமடைந்ததைநாம் மனமகிழ்வோடு காண்கின்றோம். இன்று இந்திய நாடு சுதந்திர உலகில் இந்தியா சர்வதேச ரீதியில் வேண்டிய எல்லாத் தகைமைகளையும் கொண்டுள்ள பொருளாதார வல்லரசாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் பாரதத்தின் ஜனாதிபதி மேதகு ஸ்ரீ ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களுக்கும்பிரதம அமைச்சர் ஸ்ரீ ஏ.பி.வாஜ்பாய்அவர்களுக்கும் இந்திய மக்களுக்கு உங்கள் மூலமாக எனதுநல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். வருங்காலங்களில் இந்தியா மேன்மேலும் வலிமையுள்ள நாடாக விளங்கும் என்பதில் ஐயமில்லைஎன்றுகுறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

## நல்லூரான் திருவடிக்கு - 7



### காக்கவே வந்திடுவாய்

சேவற் கொடியாட செங்கையில் வேலிருக்க
காக்கவே வந்திடுவாய் நல்லூரின் வீதியிலே
நாவற் பழத்தாலே நல்லறிவு புகட்டியே
ஔவையை ஆட்கொண்ட அழகுத் தெய்வமே.

சுன்னாகம், கு.சிவகுமார்.

### இன்னலைப் போக்க எழு

தேவர்கள் சேனாபதியாய் இருந்தசுரர்
கேவலக் கெடழித்த கேகயா—ஆவலுடன்
உன்னையே நம்பி இருக்கின்றோம் எங்களின்
இன்னலைப் போக்க எழு.

நயினைச் சோதி

### கந்தனுக்கு அரோஹரா!

நல்லூர் முருகனுக்கு அரஹரா! பழநி
நாதனான குமரனுக்கு அரஹரா!
வெல்லும்கூர் வேலனுக்கு அரஹரா! போர்
வீரனான கந்தனுக்கு அரஹரா!

பரமன் இளவலுக்கு அரஹரா! ஞான
பண்டிதனாம் குரவனுக்கு அரஹரா!
பிரமன் தலைவனுக்கு அரஹரா! எங்கள்
பிறவி நீக்கும் குருகுஹனுக்கு அரஹரா

நிவேதிதா

### அமைதி நிலவிட தந்திடு அருளே!

கோபங்கள் தணிக்கும் குமரனே! எங்கள்
சாபங்கள் போக்கும் சரவணனே! எங்கள்
சோகங்கள் போக்கும் சரவணனே! -சுக
போகங்கள நல்கும் பார்வதி மைந்தனே!
துயரங்கள் நீக்கும் முருகனே! -வாழ்வின்
உயரங்கள் காட்டும் குமரனே! எல்லாப்
பாட்டிலும் நிறைந்திடும் பொருளே! -இந்த
நாட்டிலும் அமைதி நிலவிட அருளே!

வதிரி, த. அஜந்தகுமார்

### அற்புதமே தருவாய்

ஆறு முகமாகி நின்று அருளும் மெய்ப் பொருளே
வீறு கொண்ட சூரனை வதைத்து நின்ற அருளே
அப்பனுக்கு உபதேசம் செய்ய வந்த குருவே
ஒப்புயர்வு இல்லாத அற்புதமே திருவே
நல்லையம் பதியினிலே நாளும் உறைவோனே
எல்லை யிலாப் பேரின்பம் எமக்குத் தருவாயே.

எஸ். துரைமகள்

### அல்லல் அகற்றிடையா!

விக்கினங்கள் தீர்ப்பவனின் சோதரனே!
மூவிரு முகம் கொண்ட முருகனே!
அசுரரை வதை செய்த ஆறுமுகனே!
நாமங்கள் பல கொண்ட நாயகனே!
நல்லை பதி வாழும் குமரனே -உன்
திருவடி பணிகின்றோம் - எம்
அல்லல் அகற்றிடையா!

எஸ். கவிதரன், சண்டிலிப்பாய்

### அருள் நாடினோம் கந்தா

நல்லைக் கந்தனின் நல்லருள் நாடியே கந்தா
நாம் ஓடி வந்தோம் கந்தா
நம் குறைகளைத் தீர்த்தருளும் கந்தா
நலமோடு வாழவே கந்தா
நல்வழி வகுத்திடுவாய் கந்தா
நமக் அருள் நாடிடுவாய் கந்தா

இ. பிரதாயினி, நல்லூர்.

### அழகனே உனைநாடி

உன் அழகை காண்பதற்கு
ஓடி வந்தோமையா
நம் குறை போக்கிடுவாய்
நல் அருள் மலரவைப்பாய் முருகா

இ. கார்த்திசன், நல்லூர்.

## கிளை முகாமையாளர், பணியாளர் தாக்கப்பட்ட சம்பவத்தை

# வன்மையாக கண்டிக்கிறோம்

### வட-தெ, பனம் பொருள் சமாசத்தினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நாரந்தனை கிழக்கில் உள்ள 103ம் இலக்கிளையில்கடந்த 16ம் திகதி அன்று பிற்பகல் 2.30மணியளவில்சிவில்உடையுடன் தவறணையில் புகுந்து கிளைமுகாமையாளரையும், எமது பனம் தொழில் வல்லுநர்களையும் கண்மூடித்தனமாக மனித நேயமற்ற முறையில் தாக்குதலை நடத்திய நாரந்தனை புளியங்கூடல் கடற்படை முகாமைச்சேர்ந்த கடற்படையினரின் மிலேச்சத்தனமான செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். வடமாகாணபனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்சமாசம்கடந்த 16ஆம் திகதி நாரந்தனை கிழக்கில்103ம் இலக்ககிளையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1990ஆம் ஆண்டளவில் புலம் பெயர்ந்து தொழிற் பாதிப்பிற்குள்ளாகி பத்து ஆண்டுகளுக்கு மேலாக மிகுந்த துன்ப துயரங்களை அனுபவித்து வந்த மக்களை தற்போது தோன்றியுள்ள இயல்பு நிலைச்சூழலில் மீளத் தங்கள் பிரதேசத்திற்கு வருகை தந்து தம் வாழ்வியலை ஊர்காவற்றுறைப.தெ வ.அபி கூ.சங்கத்திற்கூடாக மேம்படுத்தும் நோக்குடன், மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் செயற்பட்டுவரும் சங்கத்தின் அங்கத்தவர் பணியாளர்களுக்கு அவர்களின் வாழ்வு மேம்பாட்டைச் சீர்குலைக்கும் முயற்சியாக இச் செயற்பாட்டைக் கருதுகின்றோம்.

மனிதநேயமற்ற முறையில் கடமையிலிருந்த பணியாளரை மிகக் கொடூரமாகக் தாக்கியுள்ளமையையும், அங்கத்தவர்களைத்தாக்கி அவர்களின் தொழிற்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமையையும் பாவனையாளரைத் தாக்கி விற்பனை மேம்பாட்டைப் பாதிக்கச் செய்தமையும் இந் நிறுவனங்கள் சார் மக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பால்இருந்த எதிர்பார்ப்புக்களை மேற்குறித்த சம்பவமானது நம்பிக்கையற்றதாக்கியதுடன், குடாநாட்டு மக்களுக்கு தொடர்ந்தும் ஓர் அச்சநிலையை தோற்றியுள்ளது. மேலும் ஓர் தீவக புரிந்துணர்வு ஒப்பந்தமீறல் சம்பவமாக இது உருவெடுத்துள்ளதெனக் கருதுகின்றோம்.

எனவே எமதுசொந்தமண்ணில் நாம் சுதந்திரமாக வாழமுடியாதநிலைக்கு இராணுவ அச்சுறுத்தல்கள் தொடர்ந்து கொண்டிருப்பதும், எமது வளப் பயன்பாடுகளுக்கு தடைகள் ஏற்படுவதும்,எமது உடைமைகள் அழிக்கப்பட்டு சூறையாடப்படுவதும் தொடராவண்ணம் இருக்ககுறித்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைநடத்தி, உண்மைநிலையை உலகறியச்செய்ய மனித நேய அமைப்புகளும், போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவினரும் முயன்று செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

எமது துறைசார் நிறுவனத்திற்கும், அங்கத்தவர்கள், பணியாளர்கள், பாவனையாளர்களுக்கும் இந்நிலைமை தொடருமானால் இவ்வாறான அறிக்கையோடு அல்லாமல் கூட்டுறவுத்துறை சார்ந்தமக்கள் போராட்டம் நடத்தவேண்டியமை தவிர்க்கமுடியாததாகும் என்பதை நாற்பதினாயிரம் பனம் தொழிலில் ஈடுபடும் குடும்பங்களின் சார்பில் மிகுந்த மனவேதனையுடன் உணர்வுபூர்வமாகத் தெரியப்படுத்துகின்றோம். (க)

## அரச ஊழியரின்

# ஓய்வு பெறும் வயதுஎல்லை 55 இலிருந்து 57ஆக உயர்வு

(கொழும்பு)

அரசாங்க சேவையில் உள்ளோரின் ஓய்வு பெறும் வயது எல்லை 55 இல் இருந்து 57 ஆக உயர்த்துவதற்கு பொது நிருவாக அமைச்சு செய்த சிபார்சுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை அடுத்தவாரம் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

இதேவேளை ஏற்கனவே அமுலில் உள்ள திட்டத்தின்படி அரச ஊழியர்களுக்கான சேவை நீடிப்பு வயது எல்லை 60 வயது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-3)

## பேச்சு வார்த்தைக்காக

# முக்கிய நகரங்களை தாய்லாந்து அரசு தெரிவு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில்எதிர்வரும் மாதம் இரண்டாம் வாரத்தில் இடம்பெறவுள்ள முதல் கட்ட பேச்சுவார்த்தைக்காக தாய்லாந்தில்உள்ளபலநகரங்களின் பெயர்களை தெரிவு செய்து வைத்திருப்பதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பாங்கொக், சியாம்ராய், சியாம்மாய், உகைட், பட்டாபா ஆகியநகரங்களில் ஏதாவதொன்றில் பேச்சுவார்த்தையைநடத்தலாம்என தாய்லாந்து அரசு, இலங்கை அரசுக்கும்தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அறிவித்துள்ளது.

மாதத்துக்கு இருதடவைகள் இடம்பெறவுள்ள இச்சமாதானப் பேச்சுவார்த்தைக்குரிய நிகழ்ச்சி நிரல் மற்றும் பேச்சுவார்த்தைக்கான ஆயத்தங்கள்செய்வதற்குமுன்பேச்சுவார்த்தைக்கான இடத்தை தெரிவு செய்ய வேண்டும் எனவும் தாய்லாந்து அரசுஅறிவித்துள்ளது. (உ)

# நூலக ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி

(கொழும்பு)

பாடசாலைகளில் நூலகங்களுககு பொறுப்பாக கடமையாற்றும் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வி அமைச்சு துரித நடவடிக்கையை மேற்கொண்டுவருகிறது.

இவர்கள் பற்றிய விபரங்களை தமக்கு அறிவிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

உலக வங்கியின் உதவியுடன் இப் பயிற்சி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை பயிற்சியின் பின் குறைந்தது மூன்று வருடங்களாவது தாம் முன்னர் கடமையாற்றிய அதே பாடசாலையில் கடமையாற்ற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இலங்கையில் முதலீடு செய்வது குறித்து ஆராய

# அமெ. நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடுத்த ஆண்டில் வரவுள்ளனர்

(கொழும்பு)

அமெரிக்கவாணிப சம்மேளனத்தைச்சேர்ந்த 100 நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடுத்த வருடம் மார்ச்மாதம் இலங்கை வரவுள்ளனர்.

பிரதமரின் அமெரிக்க விஜயத்தை அடுத்து இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பாகஆராய்வதற்கே இப்பிரதிநிதிகள் வரவுள்ளனர்.

மின்சக்தி,வீதிகள் அமைப்பு விமான நிலைய அபிவிருத்தி, ரயில்வே அபிவிருத்தி தொலைத்தொடர்புகள் அபிவிருத்தி,நீர் விநியோகம்,வடிகால் அமைப்பு ஆகியவை தொடர்பான அபிவிருத்தி திட்டங்களில்முதலீடுசெய்வது கடல்வள ஆய்வுகப்பல்கட்டும் தொழில் ஆகியவற்றில் முதலீடு செய்வது தொடர்பாகவும் இவர்கள் ஆராயவுள்ளனர்.

இதேவேளை இலங்கையின் அபிவிருத்திக்கு அமெரிக்கா உதவ வேண்டும் என்று ஐக்கியநாடுகள் சபையின்செயலாளர்நாயகம் கோபிஅனான் வேண்டுகோள் விடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

## செய்தித் துளிகள்

### யாழ்.பல்கலை அணி சாம்பியன்

(சுண்டுக்குளி)

யாழ். கூடைப் பந்தாட்ட சங்கம், ஹற்றன் நஷனல்வங்கி யாழ்.கிளையின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட ரீதியில், கழக அணிகளுக்கு இடையே நடத்திவந்த கூடைப்பந்தாட்டப்போட்டித் தொடரின் பெண்கள் பிரிவு, இறுதியாட்டத்தில், யாழ். பல்கலைக்கழக அணி வென்று சாம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டது.

கடந்த புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஆட்டத்தில், யாழ்.பல்கலைக்கழக அணி 48:21 என்ற புள்ளிகள் கணக்கில் எதிர்த்தாடிய, யுத்காமல் விளையாட்டுக்கழக அணியை வெகு இலகுவாகத் தோற்கடித்தது.

இப்போட்டித் தொடரில் ஆண்கள் பிரிவு ஆட்டம் கடந்த வியாழக்கிழமை, இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றபோது, யாழ். பல்கலைக்கழக அணி, அதனை எதிர்த்து ஆடிய, யாழ் ஜொலிஸ்ரார் அணியை 109:51 என்ற புள்ளிகள் கணக்கில் சுலபமாகத் தோற்கடித்தது.

இவ் ஆட்டங்களுக்கு நடுவர்களாக ஏ.எஸ்.பி. அல்பிறட், எஸ்.ஏ. டிலான் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

(க-110)

### பொன்னாலையில் சோதனைகள் தீவிரம்

(காரைநகர்)

பொன்னாலை கடற்படையினரின் சோதனைச்சாவடியில் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக தெரியவருகிறது.

காரைநகர் செல்லும் பிரதான பாதையில் அமைந்துள்ள இச்சோதனைச் சாவடியில் பயணிகளின் அடையாள அட்டை பரிசோதிக்கப்படுவதோடு பொதுமக்கள் தீவிரமான உடற்பரிசோதனைக்கும் உட்படுகின்றனர். அத்துடன் வாகனங்களில் எடுத்துவரப்படும் பொருட்கள் அனைத்தும் இறக்கப்பட்டும் பரிசோதிக்கப்படுகின்றன.

இந் நடவடிக்கையினால் காரைநகரில் வணிகம் செய்யும் வர்த்தகர்கள் பொருட்களை கொண்டு செல்லும் போது பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

(இ-246)

### மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி மேற்கு கீச்சியம்புலம் ஸ்ரீஞான வைரவசுவாமி கோவில் மகாகும்பாபிஷேகம் எதிர் வரும் 21 ஆம் திகதி காலை 6 55 மணிமுதல் முற்பகல் 11 00 மணிவரை இடம்பெறும்.

20 ஆம் திகதி மாலை எண்ணைக்காப்பு சாத்துதல், யாகபூசை என்பனவும் இடம்பெறவுள்ளன. (க)

### சிறுவன் படுகாயம்

(திருநெல்வேலி)

மர்மப் பொருள்வெடித்ததில் படுகாயமடைந்தநிலையில் 12 வயதுச் சிறுவன்ஒருவன்யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரியாலை புங்கன்குளம்பகுதியில் நேற்றுமுன்தினம்இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஒஸ்மன் ராஜ் பிரகாஷ்ராஜ் என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

குப்பையைக் கொளுத்திய போதே இந்த மர்மப்பொருள் வெடித்துள்ளதாகதெரிவிக்கப்படுகிறது. (க-43)

### விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் சைவ சித்தாந்த பண்டிதர் பட்டம் பெற்றவர்களுக்கான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.11 00மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடி கல்லூரி வீதியில் அமைந்த சைவபரிபாலனசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சைவப்புலவர் வ. கந்தசாமி தெரிவித்துள்ளார். (க)

### சாயி சேவா நிலையத்தில் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் ஓம்காரம், காயத்திரி ஜெயம், பண்ணிசை, பஜனை, சொற்பொழிவு மற்றும் நாராயண சேவையும் இடம்பெறும். (க)

### தார் பரல்கள் வந்து சேர்ந்தன

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு பிரதேசசபைக்கென கொள்வனவு செய்யப்பட்ட தார் பரல்கள் கொழும்பிலிருந்து கப்பல் மூலமாக அண்மையில் கொண்டுவரப்பட்டுள்ளன.

தற்சமயம் 80 தார்பரல்கள் மட்டுமே வந்து சேர்ந்துள்ளமையால் அவசரமாகத் திருத்தப் படவேண்டிய வீதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென பிரதேச சபைத் தலைவர் வே. மகேந்திரன் குறிப்பிட்டார். (உ-232)

### விபத்தில் வாலிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் சைக்கிளில் சென்ற வாலிபர் படுகாயமடைந்தார்.

கொடிகாமத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த இ. ராஜ்மோகன் (வயது 29) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-6)

# ஆலோசனை வழங்க மாதம் 12 இலட்சம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

உலக வங்கியின் தனியார் மயப்படுத்தல் திட்டத்தின் அடிப்படையில்பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சுக்கு ஆலோசனை வழங்க மாதாந்தம் 12 இலட்சம் ரூபா சம்பளத்தில் ஒருவரை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இப்பதவிக்கு பேராசிரியர் சமரஜீவ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தும் இந் நியமனம் உலகவங்கியின் நியமனமாகும் என அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார் இவருக்கான சம்பளத்தை உலகவங்கி வழங்கும்.

(க-3)

# இன்று ஒரு தகவல்

## அக்னி ஹோத்திரம்

ஒரு டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி நடு இரவு நேரம் மணி 1.30 எஸ். என். குஷ்வாஹா என்ற 45 வயது ஆசிரியர், அவரின் மனைவி பெயர் திரிவேணி. வயது 36. அவர் வாந்தி எடுக்கிற மாதிரி ஒரு சத்தம். அந்த ஆசிரியர் விழித்துக் கொண்டார். கொஞ்ச நேரத்தில் அவர்களின் குழந்தைகளும் இரும ஆரம்பித்து விட்டார்கள். கடுமையான நெஞ்சுவலி கண்களில் எரிச்சல், மூச்சுவிட முடியாத ஒரு திணறல் அவர்கள் யாருக்கும் என்னவென்று ஒன்றும் புரியவில்லைவீட்டை விட்டு வெளியில் வந்தார்கள் அங்கே பார்த்தால் ஆயிரக் கணக்கான ஜனங்கள் பீதியுடன் தெருவில் ஓடிக்கொண்டிருந்தார்கள் அப்படிஓடிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் போகும் போதே ஒருவிஷயத்தைச் சொல்லி விட்டு ஓடினார்.

'ஒரு மைல் தூரத்தில் இருக்கிற தொழிற்சாலையில் விஷ வாயுக்கசிவு ஏற்பட்டிருக்கிறது. இங்கு இருந்தால் உயிருக்கு ஆபத்து அது தான் ஓடுகிறோம்' என்றுசொல்லிவிட்டு ஓடி விட்டார் உடனே சரி--- நாமும் புறப்பட்டுஓடிப்போய் விடவேண்டியது தான் என்று அந்த ஆசிரியர்முடிவு பண்ணினார். ஆனால் அவருடைய சம்சாரம் இன்னொரு யோசனை சொன்னார். 'நாம் ஏன் ஓட வேண்டும்? அக்னி ஹோத்திரத்தை ஆரம்பித்தால் என்ன? என்றார்? தீயை உண்டாக்கி அதில் என்னென்னவோ போட்டு எரித்து ஹோமம்' வளர்க்கிறார்களே. அது தான் அக்னிஹோத்திரம்!

அது ஏற்கனவே அந்தக் குடும்பத்துக்குப் பழக்கமான ஒன்று உடனே அவர்கள் ஹோமத்தீயை வளர்க்கஆரம்பித்தார்கள் ஆரம்பித்து ஒரு இருபது நிமிஷத்துக்குள் விஷ வாயுப்பாதிப்பு அந்தவீட்டை விட்டு விலகிப்போய்விட்டது.

எம்.எல்.ரதோரே என்ற ஒருவர் வயது 33 அவர் அவரின் மனைவி, நாலு குழந்தைகள், அவரின் தாயார், சகோதரர் கோபால் புகையிரத நிலையத்துக்குப் பக்கத்தில் அவர்களுடைய வீடு ஐந்து வருட காலமாக அவர் அக்னி ஹோத்திரத்தை ஒரு தினசரி நியமமாகச் செய்துகொண்டு வருகிறவர். அன்றுஇரவில் அதைச் செய்தார். அதைத் தொடர்ந்து 'த்ரயம்பக' ஹோமத்தையும் பண்ணினார். அந்தக் குடும்பமும் அதைச் சுற்றியிருந்தவர்களும் பங்களும் விஷவாயுப்பாதிப்பிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள்.

அக்னிஹோத்திரம்என்றால் என்ன? வேதங்களில் யாகத் தீயைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா. அதே மாதிரி சிறு அளவில் செய்வது இது வெளிநாட்டு விஞ்ஞானிகள் இப்போது இவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறார்கள். 'பார்ரிராத்னா' என்று ஒருவர் அமெரிக்காக்காரர், இவர் ஒரு விஞ்ஞானி, மன இயல் நிபுணர், புனே சர்வ கலாசாலையில் இவர் அக்னி ஹோத்திரம் பற்றி ஆராய்ச்சி பண்ணுகின்றார். அவர்அக்னி ஹோத்திரம்' என்கின்ற சிறு யாகத்தீ நமது சுற்றுப்புறச் சூழலில் குறிப்பிட்ட சில நல்ல பலனை ஏற்படுத்துகிறது. மனித மனநிலையில் குறிப்பிட்ட ஆரோக்கிய விளைவுகளை ஏற்படுத்துகிறது. இந்தமாதிரிக் குணப்படுத்துகிற நற்பலன்கள் நமது பழங்காலத்து ஆயுர்வேதத்திலேயே சொல்லியிருக்கிறது' என்கிறார்.

நமது ஊர்ஆயுர் வேதத்தில் என்னசொல்லியிருக்கிறது என்பதை அமெரிக்காவில் இருந்து ஒருவர் வந்து படித்து விட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது! இன்றைக்கு உலகத்திலே பல இடங்களிலும் இந்த யாகத்தீ வளர்ப்பு சம்பந்தமாகச்சொல்லிக்கொடுத்துக்கொண்டுஇருக்கிறார்களாம். அமெரிக்கா, சிலி என்கின்ற லத்தீன் நாடு, போலந்து, மேற்கு ஜேர்மனியெல்லாம் இது பரவியிருக்கிறது. அமெரிக்காவில் பால்டிமோர் என்கிற இடத்தில் 1978, செப்டம்பர்9ஆம்தேதியில் இருந்து யாகத்தீ தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. அதே மாதிரி வர்ஜீனியாமாநிலத்தில் மாடிஸன் என்கின்றஇடத்தில்ஒருநெருப்புக் கோவில் இருக்கிறது. அங்கும் அக்னி ஹோத்திரம் செய்கிறார்கள். 'அதை வேதத்தீ' என்று சொல்கிறார்கள்.

இன்னைக்கு அமெரிக்காவிலேயே சூழல் மாசடைதல் குறைவாக உள்ள இடம் அது தானாம்.

சிலி நாட்டில் ஆன்டெஸ் மலைப்பகுதியில் ஒரு 'தீ 'கோயில்' இருக்கிறது வேத முறைப்படி அங்கு யாகம் வளர்க்கிறார்கள். ஏராளமானநோயாளிகள் அங்குவந்து தங்கிக் குணமாகிப்போகிறார்களாம். போலந்தில் அக்னி ஹோத்திரத்தை ஒரு விஞ்ஞான அணுகு முறையில் கையாளுகின்றார்கள். 17 இடங்களில் 'ஹோமதெரபி' சென்டர்கள் நிறுவியிருக்கிறார்கள். இந்த யாகத்தீ வளர்க்கிறபோது அதிலிருந்து கிடைக்கும் சாம்பலை எடுத்து ஆராய்ச்சி பண்ணுகிறார்கள். இது பல வெளி நோய்களைக் குணப்படுத்துகிறதென்று மேற்கு ஜேர்மனியில் கண்டுபிடித்திருக்கிறார்கள். பல நாடுகளில் அக்னி ஹோத்திரத்தின் விளைவாக விவசாய அறுவடை 800 சதவீதம் அதிகரிப்பதாகச் சொல்கிறார்கள். நம்புவதற்கே கஷ்டமாகத்தான் இருக்கிறது.

அக்னி ஹோத்திரம் செய்வதற்கு என்னென்ன வேண்டும் தெரியுமா? ஒரு சின்ன பிரமிட்டு மாதிரி அடைப்பு உள்ள, செப்புப் பாத்திரம், அளவு 6 அங்குலம் X 6 அங்குலம் X 3 அங்குலம், பசுஞ்சாணத்தை வெயிலில் காய வைத்துச் செய்த வறட்டிகள், சுத்தமான நெய், கொஞ்சம் அரிசி அவ்வளவுதான். அரிசியில் இருக்கிற சிலஇரசாயனப் பொருள்கள் காரணமாகத் தான் அதை இதற்கு தேர்ந்தெடுத்தார்கள். பசுஞ்சாணத்தில் விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்ட கிருமிநாசினிகள் இருக்கின்றன. சுத்தமான நெய், பசுஞ்சாணத்தை எரிக்கிறபொழுது உண்டாகிற நல்ல விளைவுகளை அதிகரிக்கிற கிரியா ஊக்கியாகச் செயல்படுகிறது. செப்பு உலோகத்தினால் பல நன்மைகள் இருக்கிறது என்பது பழங்காலத்திலிருந்தே அனுபவ பூர்வமாகத்தெரிந்துகொண்ட ஒரு உண்மை.

அக்னி ஹோத்திரம் செய்கிற பொழுது சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் ஆகியவற்றை முக்கியமாகக் கவனத்தில் வைத்துக் கொள்வார்கள். இந்தக்காலத்தில் பலர் மிகவும் சாதாரணமாக நினைக்கிற பல விஷயங்களில் நிஜமாகவே நிறைய அர்த்தம் இருக்கும்போல் இருக்கிறது. ஆனால் நாங்கள் இப்போது எப்படி அக்னி ஹோத்திரம் பண்ணிக் கொண்டிருக்கிறோம்? கட்டடத்திற்கு தீ வைப்பது, காருக்குத் தீ வைப்பது, அப் விச் ஜனங்

( (6ஆம் பக்கம் பார்க்க)

# நாரந்தனைத் தாக்குதல் சம்பவம்

# பிரதமருக்கு அவசர மகஜர்

(யாழ்ப்பணாம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை கிழக்கு 103 ம் இலக்க கிளையில் கடந்த16 ஆம் திகதி இடம்பெற்ற படுமோசமான தாக்குதல் சம்பவத்தில் கிளை முகாமையாளர் ஏனையஅங்கத்தவர்கள், பாவனையாளர்கள் படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். ஒருவர் கிணற்றுள் தூக்கி வீசப்பட்டு உடைமைகள் சேதப்படுத்தப்பட்ட துடன் பணமும் சூறையாடப்பட்டது. இது தொடர்பாக எங்களின் உளத் தாக்கத்தை தங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

வடமாகாண தெங்கு-பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கடந்த 16 ஆம் திகதி நாரந்தனையில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வட மாகாணத்தில் நாற்பத்தி நான்கு ப. தெ. வ. அ. கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச் சங்கங்களில் ஒன்றே ஊர்காவற்றுறை ப. தெ. வ. அ. கூட்டுறவுச் சங்கமாகும். இச்சங்கம் 1990 ல் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் புலம்பெயர்ந்து செயற்பாடின்றி இருந்தது. இதனால் இச் சங்கத்தை நம்பி வாழ்ந்த ஆயிரக்கணக்கான பனம் தொழில் வல்லுநர்கள் (தொழிலாளர்), பணியாளர்கள், மிகுந்த துன்ப துயரங்களுடன் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக வாழ்வைக் கழித்து வந்துள்ளனர்.

தற்போது தாங்களும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும் செய்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் தீவக மக்கள் மீளவும் தங்களுடைய சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர செல்வது தாங்கள் அறிந்ததே.

தங்களின் புரிந்துணர்வு ஒப்பந்தமானது முழுமைபெறாத நிலையில் மீண்டும் தீவகத்தில் மக்கள் அல்லலுற்ற சம்பவம் ஒன்று நடைபெற்றமை மிகுந்த வேதனைக்குரியது. இதன் மூலம் இயல்புநிலைச் சூழலைத் தொடர்ந்து நிரந்தரச் சமாதானத்தை எதிர்பார்த்திருக்கும் மக்களுக்குக் கிடைத்த ஏமாற்றமாகவே கருதுகின்றோம்.

குறித்த தாக்குதலிற்கு உள்ளானஅங்கத்தவர், பணியாளர், பாவனையாளர்கள் தமது பாதுகாப்பு கருதி விடுதலைப் புலிகளின் உறுப்பினரிடம் தேடிச் சென்றிருப்பதும் தீவகத்தில் இராணுவத்தினரின் அச்சுறுத்தல் மேலோங்கி உள்ளமையையே வெளிப்படுத்துகின்றது.

இந் நிலையில் இச் சம்பவம் தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுப்பதுடன் இத் தாக்குதலில் பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருபவர்கட்கு நிவாரணம் கிடைக்கும் வகையிலும், நீதியான விசாரணை ஒன்றின் மூலம் தொடர்ந்தும் இது போன்ற சம்பவங்கள் தொடராதுஇருக்க சம்பந்தப் பட்டபடையினர்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு, மக்களுக்குத்தெரியகூடியவகையில் தண்டனை வழங்கிஉதவ வேண்டுமெனவும், எமது அங்கத்துவ சங்கங்களின் சார்பில் தங்களை மிகவும் வினயமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

குறித்த படைமுகாமை உரிய இடத்திலிருந்து அகற்றி தகுந்த நடவடிக்கை தாங்கள் எடுப்பீர்களென்ற நம்பிக்கை எமக்கு இருப்பதுடன் அவ்வாறு எடுக்கத் தவறும் பட்சத்தில் தங்கள் அரசபடையால் அநீதிகள் தொடரப்படும் எனில் எமது மக்கள் போராட்டத்திற் கூடாக தங்கள்படையின்மனிதநேயமற்ற கொடூரச் செயல்களையும் ஒப்பந்தமீறல் செயல்களையும் உலகறியச் செய்ய வேண்டிய தேவை எமக்கு ஏற்படும் என்பதையும் தங்களது மேலான கவனத்திற்குத்தெரியப்படுத்துகின்றோம், இவ்வாறு அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# இராசி பலன்

19.8.2002

(ஆவணி 3, திங்கள்)

துவாதசி பி இ. 2.45 வரை

பூராடம் பி.இ. 3.12 வரை

ராகுகாலம் 7.35-9.05

நல்லநேரம் 12.05-1.35

**மேடம்**

தொழிலில் நிலை மாற்றம், உடல் சோர்வு, காரிய தாமதம், திடீர் பயணம்.

**இடபம்**

திருடர் பயம், காரியதடங்கல், உறவினர்வெறுப்பு, உடல் நலக் குறைவு.

**மிதுனம்**

நண்பர்கள் சந்திப்பு, இலட்சுமீகரம், நல்ல காரியம், தொழில் வருமானம்.

**கடகம்**

மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும், திடீர் மனஸ்தாபம்.

**சிங்கம்**

புத்திரரால் கவலை, பெரியோர் வெறுப்பு, காரிய தாமதம், சுபசெலவு.

**கன்னி**

தாய்வழிஉறவு, ரோகபயம், காரிய தாமதம், கல்வி மேன்மை.

**துலாம்**

நினைத்த காரியம் கைகூடும், தனவரவு சகோதரர் உதவி, கூட்டு முயற்சி,

**விருச்சிகம்**

தேவையற்ற விவாதம், மாதர் நட்பு, காரியதாமதம், நிலைமாற்றம்.

**தனுசு**

பெரியோர் ஆதரவு, கற்பனைமிகுதி, முயற்சிகைகூடும் போசன சுகம்.

**மகரம்**

அலைச்சல், பொருள் விரயம், தொழில்கஷ்டம், அதிகாரிகள் மனஸ்தாபம்.

**கும்பம்**

காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, குடும்ப சுகம், சிறு ரோகம்.

**மீனம்**

செய்தொழில் விருத்தி, நல்ல சம்பவம், முயற்சி கைகூடும் பணியாளர் உதவி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# முன்னாள் அமைச்சரின் பொருட்கள் அபேஸ்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மங்கள சமரவீரதமது சிறியகணனிமற்றும் காசோலைப் புத்தகம்என்பன காணாமல் போயுள்ளதாக கறுவாக் காட்டு பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

குறித்த பொருட்கள் எவ்வாறு களவு போனது என்பது பற்றிய விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனினும் விசாரணைகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வைத்தியர் பற்றாக்குறை நோயாளர்கள் சிரமம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையில் டாக்டர்களுக்கான தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவி வருவதால், சிகிச்சைக்காக வருகைதரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

இவ் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக வருகின்ற அவசர நோயாளிகளை உடனுக்குடன் கவனித்து சிகிச்சை அளிக்க போதிய வைத்திய நிபுணர்கள் இல்லாமையினால், நோய் உபாதைகளுடன் வருகின்றநோயாளர்கள சிகிச்சைக்காக மணிக்கணக்காகக் காத்திருக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது; யாழ். வைத்தியசாலையில் ஒரு வைத்திய நிபுணரே நூற்றுக்கணக்கான உளளக நோயாளர்களைப் பார்வையிட வேண்டியுள்ளதால், அவசர சிகிச்சைக்காக வரும் வெளிநோயாளர்களை உடனுக்குடன் பார்வையிட்டு சிகிச்சைஅளிப்பதில் தாமதம ஏற்படுகின்றமை தவிர்க்க முடியாததாக உள்ளதாக வைத்தியர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க-77)

# நல்லூர் ஆலய சூழலில்

# அரை, குறை ஆடைகளுடன் இளசுகள் நடமாட்டம்

(துன்னாலை)

அரை, குறை ஆடைகளுடன் நல்லூர் ஆலயச் சூழலில் இளசுகள் நடமாடித் திரிவதாக சைவ அபிமானிகள் மத்தியில் பலத்த அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய சமாதான சூழலைப் பயன்படுத்தி தென்னிலங்கையைச் சேர்ந்த மற்றும் வெளிநாட்டவர் பலரும் நல்லூருக்கு படையெடுப்பதனாலேயே இந் நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-41)

# சவுதி- அமெரிக்க உறவு மறு பரிசீலனை வேண்டும்

## அல்றிடா தெரிவிப்பு

(றியாத்)

அமெரிக்காவுக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையே நீண்டகாலமாக இருந்துவரும் உறவை சவுதி அரேபியா மறு பரி சீலனை செய்ய வேண்டும் என்று அல்றிடா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தீவிரவாதத்துக்கு ஆதரவாக சவுதியரேபியா செயற்படுகிறது என அமெரிக்கப் பாதுகாப்பு அலுவலகம் விடுத்துள்ள அறிக்கைக் குறிப்பும் அப் பத்திரிகையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையைதொடர்ந்து சவுதியரேபியா இது குறித்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது .(க-08)

# இராணுவ சேவையில் அக்கினி ஏவுகணை

## பிரதமர் வாஜ்பாய்தெரிவிப்பு

(புதுடில்லி)

நாட்டின்பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் அக்கினி ஏவுகணைகளுப் சூப்பர்கானிக் (அதிவேக)ரக பிரமோஸ் ஏவுகணைகளும் இராணுவச் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று இந்திய சுதந்திரதின விழாவில் உரையாற்றிய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அறிவித்துள்ளார்.

ரஷ்ய உதவியுடன் தயாரானடி 90 போர்டாங்கிகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உயர் தொழில் நுட்பம் கொண்ட ஹெலி கொப்டர்களும், எல்.எம்.2300 ரகஎஞ்சின் பொருத்தப்பட்ட 2 போர்க்கப்பல்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படும் என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 15ஆம்திகதி இந்தியாவின் 55 வது சுதந்திரவிழா புதுடில்லியில் கோலாகலமாக இடம் பெற்றமைஇங்கு குறிப்பிடத்தக்கது. (க-03)

## பழைய....

டும். சொற்பொழிவு செய்கின்றவன் எப்படி நிற்றல் வேண்டும், எப்படிப்பேசுதல் வேண்டும்என்ற முறையெல்லாம் செவ்வையாக அந் நூலிலே சொல்லப்பட்டுள்ளன. அவ்வாற்றுப்படையை விலைஇல்லாமல் அவர் எல்லோருக்கும் வழங்கினார்.

திருநெல்வேலி நகரத்தார்

அந்நூலை வாங்கிப் பார்த்த திருநெல்வேலி நகரத்தார், அதற்கு எத்தகைய வரவேற்புக் கொடுத்தனர் என்பதை நீங்கள் அறியவிரும்புவீர்கள். சொற்பொழிவு என்ற சொல்லை அவர்கள் மனமார வெறுத்தார்கள். அச்சொல்லை ஆக்கிய ஆசிரியரைப் பழித்தும், இழித்தும் பேசினார்கள். அவருக்கே சொற்பொழிவு என்ற திருப்பெயரைச் சூட்டினார்கள். நன்மைக்கும் தின்மைக்கும் அவர் உறவினர் வீட்டுக்கு வரும்போது 'அதோ சொற்பொழிவு வருகிறது' என்று அவரைச் சுட்டிக் கூறவும் தொடங்கினார்கள். அக்கூற்று அவர் காதிலும் விழுந்தது, ஆயினும் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. அவ்வறிஞர் இறக்கும் வரையில் சொற்பொழிவு என்ற சொல் நம் நாட்டில் சிறப்பாகப் பரவவில்லை. ஆனால் இப்போது யாண்டும் சொற்பொழிவு சளி நடம் புரிந்து வரக்காண்கின்றோம்; பிரசங்கம் போன மூலை தெரியவில்லை. தமிழ் நாட்டிலுள்ள வானொலி நிலையங்களிலும் சொற்பொழிவு சென்று சேர்ந்து விட்டதென்றால் அதனினும் மிக்க பெருமை அச் சொல்லுக்கு வேண்டுமா!

ஆகாஷ் வாணி

சில ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்கள் வழங்கி வருகின்ற அருமையான சொற்களில் வானொலி என்பதும் ஒன்று அச்சொல் பல ஆண்டுகளாக நம் செவியில் விழுந்து பழைய ஓசையய் விட்டது இந்த நிலையில். தமிழ் நாட்டு வானொலி நிலையங்கள் சில காலமாக 'ஆகாஷ் வாணி' என்று சொல்வதைக் கேட்கிறோம், வானொலி என்ற இனிய, எளிய தமிழ்ச்சொல் இருக்க, வேண்டாத வட சொல்லை வழங்குதல் முறையன்று என்பது என் கருத்து. வழக்காற்றில் வந்தசொற்கள் நல்ல சொற்களாக-பொருள் பொதிந்த சொற்களாக-அமையுமேயானால், அவற்றை ஒருகாலும் கைவிடலாகாது. இன்னோரன்ன சிறந்த கொள்கைகளை உள்ளத்திற் கொண்டு, தமிழ் விருந்து அளிக்க வந்துள்ள இக் கலைச் சொல்லாக்கம் வெற்றி பெற மனமார வாழ்த்துகின்றேன்.

# அமெரிக்க விமானங்கள் ஈராக்கில் தாக்குதல்

(பக்தாத்)

ஈராக்கின் தெற்குபகுதியிலுள்ள சில இலக்குகளை குறிவைத்து அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் விமானங்கள் நேற்றுமுன்தினம் இரண்டாவது தடவையாகவும் தாக்குதல் நடத்தியுள்ளன.

ஈராக்கின் தலைநகர் பக்தாத்திலிருந்து தெற்கேசுமார் 375 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள திர்தர் மஹாராத்திலுள்ள சிவிலியன் மற்றும் பொதுக் கட்டடங்கள் மீதே இவ்விமானங்கள் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

எனினும் இத்தாக்குதலின் போது ஏற்பட்ட உயிர்ச்சேதங்கள் குறித்து இன்னமும்விபரங்கள்எதுவும்வெளியிடப்படவில்லை. (க-08)

# வெள்ளை மாளிகைகூட்டம் குர்திஷ்தலைவர்பகிஷ்கரிப்பு

(நியூயோர்க்)

வெள்ளைமாளிகையில்கடந்த வாரம் இடம் பெற்ற ஈராக் எதிர்ப்பாளர்களின் கூட்டத்தில் குர்திஷ் தலைவர் பர்ஸானி பங்குபற்றவில்லை.

இவர் கூட்டத்தில் கலந்து கொள்ளாதது ஜோர்ஜ்புஷ்ஷின் நிர்வாகத்திற்கு கிடைத்த பின்னடைவாகும் என்று கருத்து தெரிவிக்கப்படுகிறது.

பர்ஸானியை துருக்கியிலிருந்துவிமானம்மூலம்அழைத்துவர வாஷிங்டன் ஏற்பாடு செய்திருந்தது.

துருக்கி செல்வதில் உள்ள பிரச்சினைகளும், அமெரிக்க ஏற்கனவே அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமையுமே பர்ஸானி வாஷிங்டன் செல்லாமைக்கான காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுஸைனை பதவிகவிழ்க்க ஈராக்கில் உள்ள அதிருப்தியாளர்களை ஒன்று படுத்துவதில் அமெரிக்கா ஈடுபட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-03)

## அக்னி...

களைக் குடிசையில் அடைத்து அதற்கு தீவைப்பது இவை தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. ஒரு கல்யாண வீட்டில் பெண் வீட்டார், 'மாப்பிள்ளை இப்போது என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார்?' என்று கேட்டார்கள். 'அந்த அறையில் அக்னி ஹோத்திரம் பண்ணிக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள். இவர்களுக்கு மிகவும் பெருமை. சந்தோஷம் ஓடிப்போய் அந்த அறையில் எட்டிப் பார்த்தார்கள். அவர் சொன்னது நிஜம்தான்! அந்த மாப்பிள்ளை சிகரெட்டைப் பற்ற வைத்துப் புகையை விட்டுக் கொண்டிருந்தார்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# பொது மக்கள் பாவனைக்கு தடைவிதிக்கப்பட்ட வீதிகள் மீண்டும் திறக்கப்பட வேண்டும்

## சுரேஸ்பிரேமச்சந்திரன்பிரதமருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரின்இருதயப்பகுதியில் 512வது பிரிகேட் படையணி நிலைகொண்டுள்ளமையானது மூன்று முக்கிய வீதிகள் மக்கள் போக்குவரத்திற்கு மூடப்பட்டுள்ளதுடன் பெருமளவிலானதமிழர்தமது வீடுகளில் வசிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது

ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் பிரதமர்ரணில் விக்கிரம சிங்கவிற்கு அனுப்பியுள்ள அவசரமகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

பொது மக்களுடைய பாவனைக்கு மூடப்பட்ட வீதிகளாவன, ஆரியகுளம் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி சந்தி வரை, யாழ் பஸ் நிலையத்திலிருந்து வெலிங்டன் சந்தி வரை விக்டோரியா வீதி, இவ்வீதிகள் மூடப்பட்டமை பொதுமக்களுக்குப் பலவித இடைஞ்சல்களை தோற்றுவித்துள்ளது.

இவ்வீதிகள் மீண்டும் திறக்கப்பட வேண்டும்எனக்கோரி கடந்த 10ம்திகதி வீதிமறிபல் போராட்டம் நடத்தப்பட்டும் கூட இராணுவ தரப்பிலிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இதேவேளையில் தென் பகுதியில் இருந்து வரும் உல்லாசப்பயணிகளுக்கென இப் பாதுகாப்புப் பிரதேசத்தில் உள்ள வீடுகள் வாடகைக்கு விடப்பட்டுவருவதுடன் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதி ஆரியகுளப் பகுதியில அமைந்துள்ள நாகவிகாரைக்கும் மற்றைய பகுதி பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கும் சென்று விடுவதும் இங்கு சுட்டிக்காட்டத்தககது.

இப்பகுதியைக் சேர்ந்த மக்கள் தமது வீடுகளில் குடியிருக்க முடியாமலும், குறிப்பிடப்பட்ட வீதியால் பயணம் செய்ய முடியாமல் இருப்பதும் துர் அதிர்ஷ்டவசமானதாகும்.

எனவே இது விடயத்தில் நீங்கள் உடனடியாக தலையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை மேற்கொள்வதுடன் மேற்குறிப்பிட்ட வீதிகள் மக்கள் பாவனைக்கு திறந்துவிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வெள்ளை இனத்தவர் 29 பேர் கைதாகினர்

## சிம்பாபேயில் சம்பவம்

(ஹராரே)

சிம்பாபேயில் 29 வெள்ளை இன பண்ணையாளர்களை நேற்றுமுன்தினம் அந்நாட்டரசு கைது செய்துள்ளது.

சிம்பாபேயில் கறுப்பின விவசாயிகளின் காணிகளில் பயிர்செய்து வரும் வெள்ளை இனத்தவர்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என அந்நாட்டு அரசு காலக்கெடு விதித்திருந்தது.

இக்காலக்கெடுவையடுத்து, இவர்களில் 400 விவசாயிகள் வெளியேறியுள்ளனர் ஆனால், வெளியேறாது இருந்த விவசாயிகளில் முதல் கட்டமாக 29 பேரை அந்நாட்டரசு நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளது.

சிம்பாபேயின் ஜனாதிபதி றொபேட் முஹாபேட் கொண்டு வந்த புதிய நிலச்சீர்திருத்த சட்டத்தின்படி வெள்ளை இனத்தவர்கள் காணிகளை விட்டு வெளியேறவேண்டும் என உத்தரவிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-08)

## விளையாட்டுப் போட்டி

வலிகாமம்மேற்கு கஜமுகன் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி இன்று பி.ப. 2மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபை மைதானத்தில் எஸ் பேபிறோசா தலைமையில் நடைபெறவுள்ளது.(க-5

# பிரித்தானியப் படையினர் காபூலில் சுட்டுக் கொலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வந்த இரு பிரித்தானியப் படையினர் நேற்றுமுன் தினம் காபூல் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் யாரால் சுடப்பட்டார்கள் என்பது குறித்த தகவல்கள் இன்னமும் வெளிவரவில்லை என பிரித்தானிய படைத்தரப்பு அறிவித்துள்ளது.

காபூல் நகரில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுவரும் சர்வதேச படைகளுக்கு எதிராக பல்வேறு தாக்குதல் நடவடிக்கைகளும், எச்சரிக்கைகளும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (க-08)

# ஈராக் மீது நடவடிக்கை நட்புநாடுகளை பொறுத்தது

## அமெ. அதிபர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காநட்பு நாடுகளின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டே, ஈராக் மீதான நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

ஈராக்இரண்டாவதுதடவையாகவும் ஆயுதபரிசோதனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து ஐக்கிய நாடுகள் சபைக்குகடிதம்எழுதியிருப்பதை அடுத்தே புஷ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின்அரசியல்கட்சிகளிடையேயும், தமது கட்சியிலும் ஈராக் மீதான தாக்குதல் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈராக் எவ்வித நிபந்தனையும் இன்றி ஆயுத பரிசோதகர்களை அனுமதிக்க முன்னர் அதன் வரையறைகள் குறித்து பேச்சுக்கள் நடக்க வேண்டும் என்று ஈராக்வலியுறுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது (க-08)

# தொழிற்சாலையில் விபத்து 6 பேர் உயிரிழப்பு

## சீனாவில் சம்பவம்

(பீஜிங்)

சீனாவின்சாங்ஸிமாகாணத்தில்வானவெடிதொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஒன்பதுபேர் காயமடைந்துள்ளனர்.

சீனாவின் கிராமப்புறப்பகுதிகளிலேயே பெருமளவான வானவெடிகள் களஞ்சியப்படுத்தப்பட்டு வருவதாக சீன அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டு வரும்வெடிகளினால்வருடாந்தம் நூற்றுக்கணக்கானோர் இறக்கின்றனர்.

சீனாவில் கடந்த ஏப்ரல் மாதம் இது போன்ற வெடிவிபத்தின் போது 80 பேர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (க-08)

# வடகொரிய ஜனாதிபதி ரஷ்யா விஜயம்

(சியோல்)

வடகொரிய ஜனாதிபதி இரண்டாவது கிம் ஜொங் ரஷ்யாவின் தூரகிழக்குப் பிராந்தியத்துக்கு இம்மாத இறுதியில் விஜயம் செய்யவுள்ளார்.

இவர் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினை சந்திக்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-3)

உறுபசியும் ஓவாப் பிணியுஞ்
செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு

குறள்

வலம்புரி

## அகதி வாழ்வு

குடாநாட்டிலுள்ள105 இடம்பெயந்தோர் நலன்புரி நிலையங்களில் 2 ஆயிரத்து 233 குடும்பங்களைச் சேர்ந்த9 ஆயிரத்து 226 பேர் தங்கியுள்ளனர்

யுத்தத்தின் கொடுமையால் தங்கள் வாழ்விடங்களை விட்டு முகாம்களில் தஞ்சமடைந்தனர். வசதி வாய்ப்புகளோடு வாழ்ந்தபக்கள் தமது நலன்களை இழந்து நலன்புரி நிலையங்களில் வாழும் துர்ப்பாக்கிய நிலை யுத்தம் தந்த பரிசுகளில் ஒன்றாகும்.

குடும்பம், உறவு, சுற்றம்என்றசமூகக்கட்டமைப்புக்களுடன்வாழ்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் வாழும் நிலைஏற்பட்டதனால் மாணவர்களின் கல்வியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. யாழ்ப்பாணக்குடாநாட்டில், கற்கும் வயதில் பாடசாலைக்குச் செல்லாதமாணவர்களின் எண்ணிக்கையை எடுத்து நோக்கில்அதில்பெரும்பாலானவர்கள் இடம்பெயர்ந்த முகாம்களில் தங்கியிருப்பவர்களாக உள்ளனர்.

கற்கவேண்டிய வயதில் பாடசாலைக்குச் செல்ல முடியாத சூழ் நிலையை இடம் பெயர் முகாம்கள் ஏற்படுத்தியுள்ளன

இது தவிர கலாசாரப் பிறழ்வுகள்,இளம்பராயத் திருமணங்கள் எனப் பல்வேறு சிக்கல்கள் இடம்பெயர்ந்த முகாம்களில் உள்ள மக்களை பெரிதும் பாதித்து விட்டன.

இதிலிருந்து அம்மக்களைமீட்டெடுக்க வேண்டுமாயின் அவர்கள் மீளவும் தமதுசொந்த இடங்களில் குடியிருக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

புரிந்துணர்வுஒப்பந்தம் ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் இடம் பெயர்ந்த முகாம்களிலுள்ள மக்களை மீளக்குடிமர்த்துவதுவது மிகமிக அவசியமானதும் அவசரமானதுமாகும்.

இதுவிடயத்தில்மேலும் அசமந்தம் காட்டப்படுமாயின் நாட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டாலும், சமூக, பொருளாதார கலாசார - சீரழிவுகளை ஒருபோதும் தீர்க்முடியாத பரிதாப நிலை ஏற்பட்டுவிடும்.

அதன் பின்னர் மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளும் வர்க்கச் சண்டைகளும்நடைபெறுவதுடன் , இனப் பற்றோ,தேசப்பற்றோ அறவே இல்லாதொழிந்துவிடுவதும்திண்ணம்.

# பழைய தமிழ் நூல்களிற் பதிந்து கிடக்கின்ற

# கலைச் சொற்களை ஆட்சியிலுய்த்தல் அவசியம்

## டாக்டர்.ரா.பி.சேதுப்பிள்ளை

கலைச் சொல்லாக்கம் இந்நாளில் தமிழ் மொழிக்கு இன்றியமையாத ஒன்று. கலைச்சொல்ஆக்கும் முறையில் சில கொள்கைகளை நம் மனத்தில் நன்றாகப் பதித்துக் கொள்ள வேண்டும். பழைய தமிழ்இலக்கியங்களில் பதிந்து கிடக்கும் கலைச் சொற்களை அகழ்ந்து எடுத்து ஆட்சியில் உய்த்தல் வேண்டும்.இறந்த சொற்கள் என்று கலைச்சொற்களை விட்டு விடலாகாது. இதற்கு ஒரு சான்று தருகின்றேன்.பழந்தமிழ் நாட்டில் கலங்கரை விளக்கம் என்ற சொல் வழங்கிற்று காலதர் என்றமற்றொரு சொல் இருந்தது.சிலப்பதிகாரத்தில் குறிககப்படுகின்ற கலங்கரை விளக்கம் என்ற சொல்லுக்கு அடியார்க்கு நல்லார் உரை விளக்கம் செய்கின்றார் கடலிலே மிதந்து வரும்கலங்களைத் துறைமுகத்துக்குஅழைக்கின்ற விளக்கு என்ற அழகிய பொருளை அறிந்து இன்புறுகின்றோம்.பழந்தமிழில் கரைதல் என்றசொல் அழைத்தல் என்ற பொருளில் வழங்கிற்று.

'காக்கை கரவாகரைந்
துண்ணும் ஆககமும்
அன்னநீரார்க்கே உள'

என்ற திருக்குறளில் கரைதல் என்பது அழைத்தல் என்ற பொருளிலே ஆளப்பட்டிருக்கின்றது. உலகில் வாழும் மாந்தர் ஆக்கம் பெறவேண்டுமானால் காக்கைபோல் தமது வாழ்க்கையினைநடத்தவேண்டும் என்று கூறுகிறார் திருவள்ளுவர்.உண்ணும்பொருள ஏதேனும் கிடைத்தால் காக்கை அதைத்தனித்துஉண்பதில்லை,தன் இனத்தைக் கூவி அழைத்துக் கலந்து உண்ணும் என்பது திருவள்ளுவர் காலத்திலிருந்த காக்கையின் இயல்பு என்பது அவர்வாக்கால் தெரிகின்றது.

இத்திருக்குறளை நினைவிலே வைத்துக் கொண்டு, சென்னையம் பதியில் வீட்டைச் சுற்றி வருகின்ற சில காக்கைகளை நான் குறிக் கொண்டு பார்ப்பதுண்டு இப்பொழுதுள்ளகாக்கைகள் நம்மைப் பார்த்து வாழப் பழகிக் கொண்டனவோ என்று எண்ணத்தக்கவகையில்சென்னைக் காக்கைகள் இரை தேடி வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன ஏதேனும் நல்ல பொருளொன்று கிடைத்தால் அச்கம் பக்கம் பார்த்து அதனை மறைவாக ஓர் இடத்தில் பதுக்கிவைத்துவிட்டு பசித்த பொழுது அவ்விடத்திற்கு தனியாக உண்ண வருகின்ற காக்கையைச் சென்னையில் நான் கண்டிருக்கிறேன்.

சென்னையிலும் எங்கள் அடையாற்றுக் காக்கைக்குத் தான் அப்பண்பு உரியது என்று பேராசிரியர் மீனாட்சிசுந்தரனார் என் அருகில் இருந்து ஒரு குரல் கொடுத்தார் மிக்க மகிழ்ச்சி அடையாற்றுத் தீயகாக்கை அவர் வாழும் சிந்தாதிரிப் பேட்டைக்குச் செல்லாமல் இருக்க வேண்டுமே என்று தான் நான் கவலையுறுகின்றேன்!

### காலதர்

இனி, காலதர் என்ற சொல்லைச் சிறிது கருதுவோம். அச் சொல்லும் சிலப்பதிகாரத்திலே ஆளப்பட்டிருக்கிறது. காற்று வருகின்ற வழி என்ற பொருளில் எழுந்தது காலதர் என்ற சொல் திருவள்ளுவர் அருளிய குறள் ஒன்று இங்கே நினைவிற்கு வருகின்றது.

''ஆக்கம் அதர்வினாய்
செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை.''

என்ற திருக்குறளில் அதர் என்பது வழியைக் குறிக்கின்றது. ஊக்கமுள்ள ஒருவனிடம் ஆக்கம் வழிகேட்டுச் செல்லும் என்பது இக்குறளின் கருத்து இப்பொழுது காலதரைச் சன்னல் என்று சொல்லுகிறோம். என்ன காரணத்தில் காலதரைக் கைவிட்டோம் என்பது இப்பொழுது தெரியவில்லை. எவ்வளவு முயன்றாலும் இப்பொழுது சன்னலை நம் வீட்டை விட்டு அகற்ற முடியாது. ஆதலால் சன்னலை வைத்துக் கொள்வோம். அதனுடன் காலதர் என்ற சொல்லையும் ஆட்சிக்குக் கொண்டுவர முயல்வதே அறிவுடைமை ஆகும். எப்படிக் கொண்டு வருவது என்று நீங்கள் ஐயுறலாம். அதற்கு ஒரு வழி சொல்கின்றேன். கட்டடக் கலையில் காலதர் என்பதை வென்டிலேற்றர் என்ற ஆங்கிலச் சொல்லுக்கேற்றதாக தமிழில் சொல்லலாமன்றோ?

### தொல்காப்பியம்

வடசொற்களில் சிலவற்றை எடுத்து நம் முன்னோர் தமிழிலக்கியத்தில் வழங்கியிருக்கின்றனர். வடசொல்லில் நமக்கு எந்நாளும் வெறுப்பில்லை. சொல்லாக்க முறையில் குறுகிய நோக்கத்தோடு,ஒடுங்கிய சிந்தையோடு நாம் வேலை செய்கின்றோம் என்று எவரேனும் கருதினால், அதை விடப் பெரிய தவறு வேறொன்றுமில்லை. தொல்காப்பியனார் வகுத்துள்ள இலக்கணமே அதற்குச் சான்று தமிழ் மொழியில் வழங்கும் சொற்களை இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல் என வகுத்திருக்கின்றார் தொல்காப்பியனார். இவற்றுள் இயற்சொல்லும், திரிசொல்லும் இயற்கையாய்த் தமிழிலே பிறந்த சொற்கள், வடசொல்லும்,திசைச் சொல்லும் அயல் மொழிச் சொற்கள்.இத்தகைய சொற்கள் வரப்புமீறித் தமிழில் வந்து வழங்கலாகாது. இலக்கண நூலோர் செப்பமாக வகுத்த வாய்மடைகளின் வழியாகவே அவை தமிழ்ப்புலத்திற் சென்று சேர்தல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து.இப்படி வரம்பு கட்டிய காரணத்தாலேயே தமிழ் மொழி இன்றும் தன் நீர்மை குன்றாது தனித்து இயங்க வல்ல மொழியாய் விளங்குகின்றது என்று மொழிநூல் வல்லோர் கூறுகின்றனர்.

### ஆலயம்

தமிழ்மொழியில்ஆளப்படும் சில வடசொற்கள், பொருள் விரிந்தும், சிறுத்தும், குன்றியும்,திரிந்தும் வழங்குதலைத் தமிழ் அறிஞர்கள் அறிவார்கள். ஆலயம என்ற வடசொல்லை எடுத்துக் கொண்டால், அச்சொல் இறைவன் கோவில் கொண்ட இடத்தைக் குறிக்கும். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்னும்பழையமொழி இச்சொல் ஆட்சிக்கு ஒரு சான்றாகும். இவ்வாறு உயர்ந்த பொருளில் அமைந்த சொல்லை அலுவலகத்துக்கும், ஆடைவிற்கும் கடைக்கும் வழங்குதல் ஆகுமோ? இப்பொழுது தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சிமொழியாக நிலவுகின்றது. ஆங்கிலத்தில் 'ஆபீஸ்' என்று இதுகாறும் வழங்கிய சொல் மாறி! அலுவலகம் என்ற தமிழ்ச்சொல் வழக்காற்றில் வந்திருக்கிறது. 'பணியகம்' என்றும் அதைச் சொல்லலாம். இத்தகைய நல்ல சொற்கள் இருக்க, இந்நாட்டில் ஒருசாரார் 'காரியாலயம்' என்று அந்நிலையத்தைக் குறிக்கின்றனர். காரியம் நடைபெறுகின்ற இடத்தை ஆலயம் என்று சொல்லுதல் தமிழ் மரபிற்கு ஏற்குமா என்று கேட்கின்றேன். இவ்வண்ணமே ஆடைவிற்கும் கடையை வஸ்திராலயம் என்று சிலர் வழங்குகின்றனர். இவ்வாறு ஆலயம் என்ற சொல்லைக் காரியத்தோடும், வஸ்த்திரத்தோடும் இணைத்து வழங்குதல் தமிழின் நீர்மைக்குத் தகாது என்பது என் தாழ்மையன கருத்து.

### மீனக்ஷேத்திரம்

வடநாட்டில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சி ஒன்று இப்பொழுது என் நினைவிற்கு வருகின்றது. இந்திய அரசியற் சட்டத்தைப் பாரத நாட்டிலுள்ள பதினான்கு சிறந்த மொழிகளிலும் பெயர்த்து அமைப்பதற்கு ஏற்ற சொற்களை உருவாக்கும் நோககத்துடன் டில்லி மாநகரில் ஒரு மாநாடு நடைபெற்றது. தமிழ்மொழியின் சார்பாக நானும் இன்னொரு தமிழ் அறிஞரும் அம் மாநாட்டிற் கலந்து கொண்டோம். சட்டத்திலுள்ள Fishery என்ற ஆங்கிலச் சொல ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 'மீனக்ஷேத்திரம்' என்பது அதற்கு நேரான இந்திச் சொல் என்று கூறினார்கள் இந்தியாளர்கள். அது ஏற்ற பதந்தான் என்று வடபுலத்தார் பலரும் ஏற்றுக் கொண்டனர். அங்கே நடுவராக இருந்த அறிஞர் என்னை நோக்கி, 'இது தமிழுக்கு ஏற்குமா?' என்று கேட்டார். அப்பொழுது நான் சொன்னேன், 'எங்கள தமிழ் நாட்டில், க்ஷேத்திரம் என்றசொல் உண்டு. திருக்கோயில் இருக்கும் புனிதமான இடத்தையே அச்சொல் குறிப்பதாகும். அச்சொல்லை மீனோடு சேர்த்தால் தமிழர்கள் சிரிப்பார்கள்' என்று எடுத்துரைத்தேன். எனவே சொல்லாக்க முறையில் பிறமொழிச் சொற்களை எடுத்து ஆளும்பொழுது வழக்காற்றில் அவை பெற்றுள்ள பொருளை நன்கு அறிந்து கொளளவேண்டும் என்பது என்கருத்து.

### சொற்பொழிவு

இந்நாளில் புதிய சொல்லொன்று பேச்சு மேடைகளில் வழங்கிவருகின்றது. 'சொற்பொழிவு' என்பதுஅச்சொல். பல ஆண்டுகளுக்குமுன்னர் 'பிரசங்கம்' என்றசொல்லே எங்கும் வழங்கிற்று. புதுச் சொல்லாகிய சொற்பொழிவு எப்பொழுது, யாரால், தமிழ் மொழியில் சேர்க்கப்பட்டது என்று ஆராய்தல் பயனுடையதாகும் என்று எண்ணுகின்றேன். ஒருசொல் ஒருமொழியில்என்று வந்துசேர்ந்தது என்பதைப் பெரும்பாலும் வரையறுத்துக்கூற முடியாது என்பது மொழிநூல் வல்லார் கருத்து. ஆயினும சில சொற்களின் வரலாற்றை நாம் ஒருவாறு தெரிந்துகொள்ளுதல் கூடும்.

அந்தமுறையில் சொற்பொழிவின் வரலாற்றைச் சிறிது பார்ப்போம்.அச்சொல் திருநெல்வேலி நகரத்திலே பிறந்தது. அந்நகரத்தில் நல்ல தமிழறிஞராய் விளங்கினார் பால்வண்ண முதலியார். அவர் தருமை ஆதீனத்தின் அருமைத்தமிழ்ப்புலவர். அவருக்குப் பிரசங்கம்என்ற சொல் பிடிக்கவில்லை. தமிழில் மேடைப்பேச்சைக் குறிப்பதற்கு ஒருசொல் இல்லையா? இல்லையானால், அதனை உண்டாக்கும்திறன் நமக்கு இல்லையா? என்று அவருடைய உள்ளம் ஆராயத் தொடங்கிற்று. பலநாள் முயன்று பலசொற்களை அலசிப்பார்த்து, சொற்பொழிவு என்ற சொலலை ஆக்கினார். ஆனால் அச்சொல்லை நெல்லை நகரத்தார் எப்படி ஏற்றுக்கொள்வாரோ என்ற தயக்கம் ஏற்பட்டது. அச்சொல் அறிஞரிடையே பரவ வேண்டும்என்ற ஆசைமட்டும் அவருளளத்தை உந்தியது. 'சொற்பொழிவாற்றுப்படை' என்ற நூலஒன்றை அவர் இயற்றினார். சொற்பொழிவு எவ்வாறு செய்யப்படவேண்

(6 ஆம் பக்கம் பார்க்க

### தினசரி தியானம்

### தன்னலமற்றசேவை

தன்னல மற்ற தொண்டு இதயத்தைத் தூய்மைப் படுத்துகிறது, ஏதேனும் சமயத் தொடர்பான அல்லது சமூகத் தொடர்பான அமைப்பில் சேர்ந்து இலவசமாகத் தொண்டு செய்யுங்கள், இதயத்தைத் தூய்மையாக வைத்துக் கொண்டு இறைவனை அடையுங்கள். ஒருவரை மற்றவரிடமிருந்துபிரிக்கும் தடைகள் அனைத்தும தன்னல மற்ற தொண்டில் அகற்றப்பட்டுவிடும்.தெய் வீக ஒளி உங்கள் மீதுவிழ வேண்டுமானால், விருப்புவெறுப்புக்கள் நீக்கப் படவேண்டும். தன்னலமற்ற தொண்டு அவைகளை நீக்கும் ஒய்வும் அயர்வும் அற்ற தன்னலம் இல்லாச் சேவையின் மூலம் இதயத்தைத் தூய்மைப் படுத்திக் கொள்பவருக்குச் சமாதி நிலை தானாகவந்து சேரும்.

சுவாமி சிவானந்தர்

# நாரந்தனை தாக்குதல் சம்பவம்
# கடற்படையின் அத்துமீறியசெயற்பாடு
## தீவகமக்கள் நலன்காப்பகம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை பனை தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்க 103ம்கிளையில் கடற்படையினர் நடத்திய தாக்குதலை தீவகமக்கள் நலன்காப்பகம் வன்மையாகக் சண்டித்துள்ளது.

இதுகுறித்து அவ்வமைப்பு வெளியிட்ட அறிக்கையின்விபரம் வருமாறு-

ஊர்காவற்றுறை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் நாரந்தனை கிழக்கு கிளை103ல் கடமையாற்றிக்கொண்டிருந்த பணியாளர் உட்பட அக்கிளையில் நின்ற தொழிலாளர்,பாவனையாளர் ஆகியோர் அவ்விடத்திற்கு திடீரென துவிச்சக்கரவண்டியில் வந்த ஆறுகடற்படையினரால் பாரதூரமான முறையில் தாக்கப்பட்டனர் இதில்பணியாளர் திரு லோ.ரவீந்திரன் படுகாயத்துக்கு உள்ளானார் தொழிலாளி ஆ.ஸ்ரான்லி வயது34 நாரந்தனை அலங்காரம் யோன்மேரி வயது44 நாரந்தனை அம்பிகாவதி வயது55 நாரந்தனை ஆகியோர் படுமோசமாக தாக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வேலாயுதம் இராசரெத்தினம் வயது60 சரவணை கடற்படையினர் இருவரினால் பக்கத்தில் இருந்தகிணற்றிற்குள் தூக்கி வீசப்பட்டார்

இதுமாத்திரமல்ல பாதை இல777 பண்ணைவீதியால் அவ்விடம் சென்ற பயணிகள் ஜோர்ச், சூசைப்பிள்ளை தக்கப்பட்டதுடன் கிளையில் இருந்து பணம் காணமல் போய்விட்டது சுமார்கிட்டத்தட்ட 568போத்தல் கள் வெளியில் ஊற்றிவீசப்பட்டதுடன் பாவனையாளர்கள் மீது தலையில்கள்ளால்ஊற்றி குளிப்பாட்டப்பட்டனர் இவ் அட்டகாசம் புரிந்தவர்கள நாரந்தனை,சரவணை ஆகிய முகாம்களில் இருந்துவந்த கடற்படையினர் என்று பாதிக்கப்பட்டவர் கூறினார் இது ஒரு அப்பட்டமான புரிந்துணர்வு ஒப்பந்த மீறல் இதனை தீவகமக்கள் நலன் காப்பகத்தினர் வன்மையாக கண்டிப்பதோடு மேலும் யாழில் இருந்து தீவகம்செல்லும் பயணிகள், உத்தியோகத்தர்கள் அனைவரும் அல்லைப்பிட்டியில் இறக்கப்பட்டு சோதனை இடப்பட்டு பயணம்செய்ய அனுமதிக்கப்படுகின்றனர் இதனால் காலதாமதம் ஏற்படுகின்றது.

சிங்கள சகோதரர்கள் ஒரு கெடுபிடியும் இல்லாமல் செல்கின்றனர் இதுகடற்படையினரின் இனவெறியையும் முரண்பாட்டையும் எடுத்துக்காட்டுகிறது இதுபற்றி பலதடவைகள் கண்காணிப்புக்குழுவுக்கு முறைப்பாடு செய்தும பலன் இல்லை.

இவ்வாறான அடாவடித்தனமூலம் தீவகமக்கள இயல்புநிலை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தொடர்ந்து மீறும்செயல் என்றுதெரிவிப்பதுடன் இதனை வன்மையாக கண்டிப்பதுடன் மிகப்பெரிய தொரு வெகுஜனப் போராட்டத்தை நடத்தும் என்று எச்சரிக்கிறது என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


### வாடகைக்கு

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் சிற்றிபோய் தையலகத்திற்கு அருகில் உள்ள இரு பெரிய கடைகளும் அதற்குப் பின்னால் உள்ள ஸ்ரோர் அதனுடன் கூடிய சிறிய கடை என்பன வாடகைக்கு உண்டு.

**தொடர்பு;**

இராசையா சாவித்திரி
65,சிவன்.பண்ணை, வீதி
யாழ்ப்பாணம்

(5782)


### தேசிய

...துகின்றனர் ஆனால்தேசிய அரசொன்றை அமைக்கும் எண்ணம் ஐக்கியதேசிய முன்னணி அரசுக்கு அறவே கிடையாது.

மின்னேரியாவிலுள்ளபொது ஜன ஐக்கிய முன்னணியின் இடதுசாரி ஆதரவாளர்கள் பலர் ஐக்கியதேசியக் கட்சியில் இணைவதற்குத் தயாராகவுள்ளனர்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக குறைக்கும் அரசியல் யாப்பு சீர்திருத்தம் பாராளுமன்றில் நிறைவேற்றுவதற்கு முன்னதாக இவர்கள் கட்சியில் இணைவதனையே நாம் விரும்புகின்றோம்.

அதேவேளை அரசியல் யாப்பு சீர்திருத்தம் பாராளுமன்றில் நிறைவேற்றபடும்பட்சத்தில் அமையவுள்ள நிறைவேற்றுக் குழுவுக்கு தாமும் ஓர் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ந-5)

### முஸ்லிம்

எதையும் முன்வைக்காததால் பேச்சுவார்த்தைக்கு முன்பாக சரியானதொரு நிலைப்பாட்டை பிரதமரிடம் இருந்து பெறவேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது (ந-5)

### 4படகில்

விடுதலைப்புலிகள் பயணம் செய்த கடற்பிரதேசத்திலிருந்துசுமார் இரண்டுகடல்மைல் தொலைவில் இலங்கை கடற்படையினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதேவேளை மட்டக்களபு வாகரையிலிருந்து 80 விடுதலைப்புலி உறுப்பினர்கள் இன்று முல்லைத்தீவுக்குச் செல்லவுள்ளனர்.

இவர்களில் மட்டு-அம்பாறை சிறப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் விசுஆகியோர் இடம் பெறுகின்றனர்

இக்கடற் பயணத்தில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சாதாரண உடையில் நிராயுதபாணிகளாக செல்வதற்கே இணக்கம்காணப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கும்-தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில்யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 5மாதங்கள் கடந்துள்ள நிலையில் முதலாவது கடற் பயணம் நேற்று ஆரம்பமானவை குறிப்பிடத்தக்கது (த)


### ஸ்ரீ முருகன் பாமாலை வெளியீடு

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் தேர் உற்சவந்தன்று ஸ்ரீ முருகன் பாமாலை வெளியிடப்படும்.

(கையடக்கப் பதிப்பு)

செயலாளர்

ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
(கி-4860) பருத்தித்துறை


### சிறுவர்கள் பற்றிச் சிந்திப்போம்

சிறுவர்கள், பெரியவர்களது கருத்துக்களினைச் செவிமடுக்கின்றனரில்லை என்றே அனேகர் பொதுஇடங்களில் கூறுகின்றனர். ஆனால் அதே சிறுவர்கள் தம்மைப் பினபற்றி நடக்கின்றனர்; தம்மை ஒரு முனனுதாரணமாகக் கொண்டு வாழ முற்படுகின்றனர் எனவே நாம் சிறப்பாக வாழ்ந்து காட்டவேண்டும்என எண்ணி செயற்பட பெரியவர்களில் அனேகர் மறந்து விடுகின்றனர்.

து. இராஜேஸ்வரன்
துன்னாலை - வதுன்னாலை

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு
அறை எண் 30 போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021-2261
EXT–274

# பல்கலை மாணவர் ஒன்றியம் இன்று எதிர்ப்பு போராட்டம்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம்இன்று முதல் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளது

பல்கலைக்கழகங்களுக்கு மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் நிதி குறைக்கப்பட்டமை, பல்கலைக்கழக மாணவரிடையே அறவிடப்படும் பரீட்சை பதிவுக் கட்டணங்கள் உட்பட பல்வேறு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமை, மாணவர்களுக்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்ட சலுகைகள் குறைக்கப்பட்டமை போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கத்துடனேயே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதாக உள்ளக பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்தோடு 30ஆயிரம் மாணவர்கள் மற்றும் 20லட்சம் பொது மக்களின் கையெழுத்துப் பெறும் போராட்டமும் இடம்பெற உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இந்தக் கையெழுத்துக்கள் உயர்கல்வி அமைச்சர் கபிர்காசிமிடம் கையளிக்கப்படவுள்ளது. (இ- 5)

# ஈராக்-ரஷ்யா பொருளாதாரஒத்துழைப்பு திட்டத்தில்கைச்சாத்து

(பாக்தாத்)

ஈராக்கும் ரஷ்யாவும் 40 பில்லியன் டொலர்பெறுமதியான 5 ஆண்டுகள் பொருளாதார ஒத்துழைப்பு திட்டத்தில் கைச்சாத்திட திட்டமிட்டுள்ளதாக பெயர் குறிப்பிடவிரும்பாத ஈராக் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவிலுள்ள ஈராக்கிய தூதுவர் ஒருவர் எரிபொருள் போக்குவரத்து இரசாயனப் பொருள்கள் அடங்கிய இவ்வுடன்படிக்கை அடுத்த இருவாரங்களில் கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஈராக்கில்ரஷ்யா மேற்கொண்டுள்ள கட்டமைப்பு வேலைகளில் நவீனமயப்படுத்துதல் உட்பட புதிய வேலை திட்டங்களும் இவ்வுடன்படிக்கையில் அடங்குகின்றன எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (க-8)

# வங்கிக்கிளை திறப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 297 வதுகிளை இன்று காலை 9 மணிக்கு இலக்கம் 531 பலாலி வீதி திருநெல்வேலியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் ஜே. எவ் ஜீ.டி சில்வா இதனை திறந்து வைக்வுள்ளார். (த)

## திரைப்படச்சங்க திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச்சங்கத்தின் தலைமை அலுவலகம் இன்றுகாலை 10மணிக்கு இல 249பலாலிவீதி, யாழ்ப்பாணம் எனும்முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது

இந்நிகழ்வில் யாழ்மாவட்டத்திலுள்ள அனைத்துத் திரைப்பட விநியோகத்தர்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் ஜீவராஜா கேட்டுள்ளார். (த)

# அன்ரனிசுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரி கேணல் வி.ஆர்.எல் அரன்ரனிஸ்இராணுவதலைமையகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஒழுக்காற்று நடவடிக்கையின் பேரிலேயே இராணுவத் தலைமையகம் இந்த இடமாற்ற உத்தரவை வழங்கியுள்ளது.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்ட 233 மூன்றாவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக கேணல் ஆர்.டி.சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இன்று கட்டளை அதிகாரியாகப் பதவியேற்கவுள்ளார். (த)

## தாய்வானை இணைக்க சீனா முயற்சி

(நியூயோர்க்)

தாய்வானை தன்னுடன் இணைத்துக் கொள்ள சீனா தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றபோதிலும் தாய்வான் தனிநாடாக இருப்பதையே விரும்புவதாக தாய்வான் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சீன வற்புறுத்தல் காரணமாக 1971ஆம்ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து தாய்வான் நீக்கப்பட்டது

மீண்டும் உறுப்பினராக சேர கடந்த 10ஆண்டுகளாக தாய்வான் முயற்சித்து வருகிறது

தற்போது தாய்வான் ஐக்கிய நாடுகள் சபையில் சேர 11நாடுகள் ஆதரவு தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது (க- 03)

### நிதி

யடுத்து சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் ஏற்பாட்டில் இந்த நிதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(இ-5–252)

### அரசு- புலிகள்

பாதுகாக்கவும்நாட்டின்ஒற்றுமையை வலுப்படுத்தவும் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள பொது ஜன ஐக்கிய முன்னணி அனுமதி கோரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் எதிர்க்கட்சித் தரப்பு சார்பாக இலங்கையின் இனப்பிரச்சினையுடன் நீண்டகாலத் தொடர்புடைய முன்னாள் அமைச்சர் லஸ்மன் கதிர்காமரை ஈடுபடுத்தஎதிர் தரப்பு தீவிர நாட்டம் காட்டுவதாக மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

இதேவேளை முன்னாள் அமைச்சர் கதிர்காமர் தாய்லாந்துப் பேச்சில்ஈடுபடுவதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 19-08-2002இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 16

# சங்கு நாதம்

திங்கட்கிழமை (19-25.ஆகஸ்ட்.2002) Sankunatham

சங்கு:- 03 வள்ளுவர் ஆண்டு 2033 தொலைபேசி 3378

பக்கம்-02 அரசியல் அலசல்
பக்கம்-08 மௌனத்தின் தேடல்கள்
பக்கம்-11 மகளிர் உலகம்
பக்கம்-14 சிறுவர் அரங்கம்
பக்கம்-16 சினிமாச் சிதறல்







## தீர்வு தரும் சமாதான நடனம்



# நோர்வே நாட்டில் ஒத்திகை தாய்லாந்தில் அரங்கேற்றம்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

## தீர்வு தரும் சமாதான நடனம்

# நோர்வே நாட்டில் ஒத்திகை தாய்லாந்தில் அரங்கேற்றம்

புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வழி சமைக்காதா என ஏங்கிக் கொண்டிருந்த வேளை அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்குமிடையே நோர்வேயில் இடம் பெற்ற பேச்சுவார்த்தை சமாதான முயற்சியில் புதிய அத்தியாயத்தை தோற்றுவித்துள்ளது.




தாய்லாந்தில் நடை பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வழி வகுப்பதாக மிலிந்த மொறகொட, கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோரின் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

அரசு - புலிகளுக்கிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை எநதத திகதியில் எந்த இடத்தில் நடை பெறும்



என்பது இன்னமும் வரையறுக்கப்படவில்லையாயினும் தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடைபெறுவது மட்டும் உறுதியாகிவிட்டது.

### பேச்சுவார்த்தை முடிவடைந்து விட்டது

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை என்பது அமைசசர் மொறகொட, ஆலோசகர் அன்ரன பாலசிங்கம் ஆகியோருக்கிடையே நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையோடு முடிவடைந்து விட்டது. தாய்லாந்தில் நடைபெறப் போவது ஓர்சம்பிரதாயமான. பேச்சுவார்த்தையேயொழிய தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் தான் தீர்வுத் திட்டம் முன் வைக்கப் படுமென்பது தவறு.

அதாவது, "தாய்லாந்து" என்பது கல்யாண மண்டபம், அந்த மண்டபத்தில் திருமண வைபவம் நடைபெறப் போகிறது. தாய்லாந்து என்ற

**விதுரன்**

கல்யாண மண்டபத்தில் தான் திருமணம் நிச்சயிக்கப்படும் என்றால் அது எவ்வளவு தவறாக விருக்கும். அதே போன்று தான் சமாதானப் பேச்சுவார்த்தையும்.

அரசும் - விடுதலைப் புலிகளும் என்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டார்களோ அன்றே தீர்வுத் திட்டமும் தயார் செய்யப்பட்டு விட்டது. தீர்வுத்திட்டத்தின் இணக்கப்பாட்டிலேயே புரிந்துணர்வு - யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது என இப்போது அனுமானிக்க முடிகிறது.


### சமாதான முயற்சியின் முக்கிய இரு நிகழ்வு

நாட்டின் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐ.தே.முன்னணி அரசு முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சியில் இரண்டு விடயங்கள் மிக முக்கியமானதாகும்.

இதில் ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இவ ஒப்பந்தத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரன், தனது வன்னித் தலைமையகத்திலிருந்து கைசாத்திட, பிரதமா ரணில்விக்கிரமசிங்கா வவுனியாவுக்கு வருகை தந்து அங்கு வைத்து புரிந்துணர்வு ஓப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

இ.்.து இனப்பிரச்சினை விவகாரத்தில் முக்கிய நிகழ்வாகும். மற்றையது கடந்த 14ந் திகதி, நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் அமைச்சா மிலிந்த மொறகொடவும் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கமும் சந்தித்துக் கொண்ட நிகழ்வாகும்.

அமைச்சர் மிலிந்த மொறகொட பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சராக இருக்கின்ற போதிலும் அவர் சமாதான விவகார அமைச்சராகவும் பாதுகாப்புப் படையினரை சமாளிக்கும் அமைச்சராகவும் செயற்படுவது போல் தோன்றுகிறது. அதாவது



பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அமைச்சரவையில் மிலிந்த மொறகொடவின் சிந்தனைகள் வித்தியாசமானவை அவரின் செயற்பாடுகளில் பிரதமர் ரணிலுக்கு அபார நம்பிக்கையுண்டு.

அவ்வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பிரதமர் ரணில் கைச்சாத்திட்ட போது அருகில் நின்றவரும் மொறகொடவே. அதே போல் வடக்கு கிழக்கில் உள்ள படை முகாம்களுக்கும் அவர் விஜயம் செய்து படையினரை உற்சாகப்படுத்தும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறார்.

இதற்கு மேலாக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தையும் சந்தித்துப் பேசியுள்ளார். இச் சந்திப்பானது சமாதான முயற்சியின் முக்கியமான வரலாற்றுப் பதிவாகும்.

### அமெரிக்காவின் தொடர்பு

இனப்பிரச்சினை விவகாரத்தில் பாதுகாப்பு அமைச்சரோ, அல்லது அரசியல் விவகார அமைச்சரோ, ஈடுபடாமல் விஞ்ஞான, தொழில் நுட்ப அமைச்சரான மிலிந்தமொறகொட தலையிடுவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. அமைச்சர் மிலிந்த மொறகொட இனப்பிரச்சினையினை தீர்க்கவேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருப்பவர். அத்தோடு எந்த விஷயத்தையும் நுட்பமாகக் கையாளும் திறமை வாய்ந்தவர் என்பது ஒன்று, மற்றையது அமைச்சர் மிலிந்தவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு. அதாவது மிலிந்த மொறகொட அமெரிக்கப் பெண்ணையே திருமணம் செய்தவர். அத்துடன் தற்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருக்கும் ஜோர்ஜ் புஷ்



ஷின் உறவினராக மிலிந்தவின் மனைவி இருப்பதால் அமெரிக்காவின் உதவியை அவரூடாகப் பெற முடியும். இது இரண்டாவது காரணம்.

இத்தகையதொரு உறவு முறை இருந்ததன் பயனாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷினைச் சந்திக்க முடிந்தது. அதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் மிலிந்தவே செய்திருந்தார். அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் போது அதில் அரச தரப்பு சார்பில் ரணில் விக்கிரமசிங்காவோ அல்லது விடுதலைப்புலிகளின் தரப்பில் தலைவர் பிரபாகரனோ பங்கு பற்றப்போவதில்லை. இவர்கள் தவிர்ந்த அடுத்து படியாக உள்ள தலைவர்களே இச்சந்திப்பில் ஈடுபடு



வர். அவ்வாறாயின் அரசின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அடுத்த படியாக இருப்பவர் அமைச்சர் மிலிந்த மொறகொட அதோபோல் விடுதலைப்புலிகள் சார்பில் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம். எனவே இவர்களின் சந்திப்பே சமாதானப்பேச்சுவார்த்தையாக அமையப்போகிறது. இத்தகைய சந்திப்பே கடந்த 14ந் திகதி நோர்வேயின் தலைநகரில் இடம்பெற்றுள்ளது.

### தீர்வுத் திட்டம் பரிமாறப்பட்டது

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தின் அரங்கேற்றம் தாய்லாந்தில் இடம்பெறவுள்ளது. அறையில் ஆடாமல் அம்பலத்தில் ஆடமுடியாதல்லவா. அதே போன்று தீர்வுத் திட்டத்தை தாய்லாந்தின் பேச்சுவார்த்தை மேசையில் வைத்து இரு தரப்புத் தலைவர்களும் தீர்மானித்து விட முடியாது. ஆதலால் அரசினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டம் என்ன என்பதை விடுதலைப்புலிகளுக்கு அரசு ஏதோ ஒரு வகையில் தெரியப்படுத்துவது. அவசியம். அவ்வாறு அரசினால் முன்வைக்கப்படவுள்ள தீர்வுத்திட்டம் என்ன என்பதை விடுதலைப்புலிகளுக்குத் தெரியப்படுத்தும் பணியை நோர்வேயின் சமாதானக்குழு மேற்கொண்டிருக்கலாம். அரசினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் என்ன என்பதை விடுதலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்தாமல் அரசு சில விடயங்களை நடைமுறைப்படுத்த முடியாது.

### இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவது அவசியம்

யுத்தத்தினால் உடைந்து போன வடக்குக் கிழக்கைக் கட்டியெழுப்புவதாயின் அது இனப்பிரச்சினையின் தீர்விலேயே தங்கியுள்ளது. அது போல் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது வடக்குக் கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதில் இருந்து ஆரம்பிக்கப்படவேண்டியது. எனவே இவ்விரண்டுபட்ட நிலையில் இடைக் கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது என்பது தீர்வுத் திட்டத்தை விடுதலைப்புலிகள் ஏற்கும் போதே சாத்தியமாகும். இடைக் கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளிடம் வழங்கும் போது முன்வைக்கும் தீர்வுத் திட்டம் என்பதும் புலிகளால் ஏற்கப்படக்கூடியதாக அமைவது மிக மிக அவசியமாகும்.

### இராணுவம் முடங்கும்

இனப்பிரச்சனைக்கான சமாதானப் பேச்சு வார்த்தை.தாய்லாந்தில் நடைபெறும் போது வடக்குக்கிழக்கு மாகாண சபையின் இடைக்கால நிர்வாகம் விடுதலைப்புலிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப் படும். இதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் உறுதிப்படுத்தியுள்ளார். இடைக்கால நிர்வாகசபை விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப் படும் போது அவர்களின் முதற்பணி புனர்வாழ்வு, புனரமைப்பாகவே அமையும் அவ்வாறு புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு படையினரின் முகாம்கள் பெரும் தடையாக இருக்கும். இடைக் கால நிர்வாகம் கிடைத்த பின்பும் வடக்குக் கிழக்கில் இடம்பெயர்ந்த முகாம்கள் இருக்குமாயின் அதில் எந்த அர்த்தமும் இருக்க முடியாது. எனவே முதலில் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளவும் குடியமர்த்துவது அவசியமாகும். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு இப்போது தடையாக இருக்கின்ற உயர் பாதுகாப்பு வலயம் உடனடியாக அகற்றப்படுவதும், படையினர் குறித்தவொரு முகாமில் முடக்கப்படுவதும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையாக இருப்பதால் இடைக் கால நிர்வாகத்தோடு ஸ்ரீலங்காப் படையினரின் முடக்கம் உறுதிப் படுத்தப்படும்.

### காலம் தாமதிப்பது காரணத்தோடு

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டிருந்த போதிலும் சமாதானப் பேச்சுவார்த்தை என்பது



காலம் கடப்பதாக இருக்கிறது. இவ்வாறு காலம் கடத்துவதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட கையோடு பேச்சுவார்த்தை நடத்தப்படுமாயின் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே வி.பி ஆகிய கட்சிகள் ஆர்ப்பாட்டங்களிலும் மறியல் போராட்டங்களிலும் ஈடுபடத் தொடங்கிவிடும். இதனால் அரச நிர்வாகம் ஸ்தம்பிக்கும் சூழ்நிலையும் ஏற்படும். எனவே இத்தகைய விரும்பத்தகாத சூழ்நிலையைத் தவிர்க்க பேச்சுக்கான காலத்தை எட்டப்போடுவது அவசியமாக இருந்தது. இது தவிர புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் சமாதானம் ஏற்படுமாயின் அது தமது சுய நலனைப் பாதிக்கும் என கருதும் படைத்தளபதிகளை சமாளிக்க வேண்டிய ஓர் தேவையும் அரசுக்கு ஏற்பட்டது.

ஆயுதக் கொள்வனவு, எம்.ஓ.டி, மற்றும் அப்பாவித் தமிழ் இளைஞர்களின் கைது ஆகியவற்றினூடே பணம் சம்பாதித்த இராணுவ அதிகாரிகள் ஒருபோதும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை விரும்பமாட்டார்கள். எனவே சமாதானச் சூழ் நிலையை அவர்கள் குழப்பிவிடவும் கூடும் என்ற அச்சம் அரசிடம் ஏற்படவே செய்தது. இதனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தோடு காலம் கடக்கும் போது சமாதானத்தின் எதிரிகள் அதனால் திருப்தியடைவதும் ஆறுதல் அடைவதும் இயல்பு என்பதனாலும் பேச்சுக்கான காலம் கடத்தப்பட்டிருக்கலாம். எதுவாயினும் அமைச்சர் மிலிந்தவும் ஆலோசகர் பாலசிங்கமும் சந்தித்துப் பேசியமையும் அச்சந்திப்பில் நோர்வேயின் சமாதானக்குழுவினர் பங்குபற்றியிருந்தமையும், சமாதான முயற்சிகளில் பெரியதொரு முன்னேற்றமாகும்.

# தமிழ்த் திரைப்படப் பாடல்களில் தமிழுணர்வின் பிரதிபலிப்பு

இன்றைய உலகில் வியக்கத்தக்க அளவில் வெகுசன தொடர்பு சாதனங்களில் திரைப்படங்கள், வல்லமையுடைய ஈர்க்கும்திறன் படைத்தவையாக விளங்குகின்றன. இந்தியா, யப்பான் போன்ற ஆசிய நாடுகள் ஆண்டுதோறும் பெரும் எண்ணிக்கையில் திரைப்படங்களை தயாரித்து அளிப்பதில் முன்னணிவகின்றன. பாரத பாரம்பரியத்தின் அடித்தளத்திலான தமிழ்த் திரைப்பட வரலாறு 1931 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பித்து ஏழு தசாப்பதங்களைத் தாண்டியுள்ளது. இந்தியத் திரைப்பட மரபின் தோற்றுகையானது நாட்டார் இயற்கூறுகளுடனும், இசைக்கூத்து நாடக மரபுகளுடனும் சம்பந்தப்பட்டது. இது தமிழ்த் திரைப்படக் கலாசாரத்தின் அசைக்க முடியாததும் ஆழமாக வேரூன்றியதுமான இசைப் பாடல்களுடன் பின்னிப் பிணைந்து இன்றும் அறாத் தொடர்புகளுடன் வலுவுள்ள சக்த்தியாகத் திகழ்கிறது. இத்தகு சூழ் நிலையில் தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களில் தமிழ் மொழியினதும், தமிழர் வாழ்வியலினதும் சிறப்புக்கள் இசைப்பாடல்கள் மூலம் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது என்பதை புகழ் பெற்ற திரைக் கவிஞர்களின் பாடல்களின் ஊடாக எடுத்துக் காட்ட முயற்சிப்பது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஏறத்தாழ ஆறாயிரம் தமிழ்த் திரைப்படங்கள் இந்திய மண்ணிலிருந்து வெளிவந்துள்ளன. அவற்றுள் 650க்கும் மேற்பட்ட கவிஞர்களின், ஒன்றரை லட்சம் வரையிலானதமிழ்த் திரைஇசைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மிகவும் உயர்ந்த இலக்கியத் தரம்மிக்க பாடல்கள் ஒருபுறமாகவும் எதுவிதமான பொருண்மையும், உண்மையுமற்ற வெற்றுச் சொற் செயற்கைகளாலான பாடல்கள் மறு புறமாகவும் அவற்றுள் அடங்குகின்றன. இந்த எல்லைக்குள் நின்று ஆராயும் போது 'சனரஞ்சகம்' என்கிற வட்டத்துள் பொருத்தமற்ற பாடல்கள் வெற்றி கண்டமையும் சிறந்த பல பாடல்கள் பல்வேறு காரணிகளால் மக்கள் மத்தியில் அறியப் படாது அல்லது எடுபடாதுபோனமையும் கண் கூடாகும். ஆயினும் காலத்தை வென்று நின்று நிலைத்து வாழத்தக்க கவிதைகள் பல தமிழ்த் திரைப்படப் பாடல்களில் உள. அவை உணர்த்தும் உண்மைகள் என்றும் அழியாத. சிரஞ்சீவித்துமுடையவை.

தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர்களின் 'பிதாமகர்' எனப் படுபவர் உடுமலை நாராயணகவி. அவருக்கு முன்னரே மதுர பாஸ்கரதாஸ், பாபநாசம் சிவன் முதலான சில வீறு பெற்ற கவிஞர்கள் சிறப்பான பாடல்களைத் தந்துள்ள போதிலும், முதன் முதலில் மரபை மீறியும் சமகாலத் தரிசனங்களை உள்வாங்கியும், திராவிட இயக்கத்தின் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதில் தீவிரங்காட்டியும், நாட்டார் வழக்குகளையும், பேச்சோசைப் பண்புகளையும் இலக்கியமாக்கியும், 'கவிராயர்' எனப் புகழப்பட்டும், காலத்தால் அழியாத கவிதைகளைத் தந்து, 1931 - 1972 காலத்தில் திரைப்படவுலகில் நின்றுநிலைத்தவர் உடுமலைக் கவிஞர் எனலாம். அவர் "தாய் மகளுக்குக் கட்டிய தாலி" என்ற அறிஞர் அண்ணாவின் கதையில் உருவான படமொன்றில், தமிழ் இலக்கியச் சுவையினூடாகக் காட்டுகின்ற தமிழ் நாட்டு வளம் பின்வருமாறு அமைந்துள்ளது.

"ஒன்றல்ல இரண்டல்ல தம்பி - சொல்ல
ஒப்புமை இல்லாத அற்புதத் தமிழ் நாட்டில்
(ஒன்றல்ல)
தென்றல் தரும் இனிய தேன்மணமும்
செங்கனியும் பொன்கதிரும் தந்துதவும்
நஞ்சை வளம் (ஒன்றல்ல)

பகை வென்ற திறம்பாடும் பரணி வகை
- செழும்

## இலக்கிய நயம்

பரிபாடல், கலம்பகங்கள், எட்டுத்தொகை
புகழ் கொண்ட குறளோடு அகம் புறமும்
-செம்
பொருள் கண்ட தமிழ்ச்சங்க இலக்கியப்
பெருஞ்செல்லவம்(ஒன்றல்ல)
முல்லைக்குத் தேர் கொடுத்தான் வேள்பாரி
- வான்
முகிலினும் புகழ்படைத்த உபகாரி
சொல்லுக்குத் தலை கொடுத்தான்
அருள்மீறி - இந்த
வள்ளலாம் குமணன் போல வாழ்ந்தவர்
வரலாறு (ஒன்றல்ல)"

இதே உடுமலைக் கவிஞரைப் 'பகுத்தறிவுப் பாவலன்' எனப் பலர் புகழ்ந்துரைத்துள்ளனர். சமூக சீர் திருத்தக் கருத்துக்களையும், திருக்குறட் கருத்துக்களையும் அவரைப் போன்று தமிழ்த்திரைப் பாடல்களில் எவருமே எடுத்துக் காட்டியதில்லை. கலைவாணரின் ஆஸ்தானக் கவிஞர் அவர் எனில் புலவரின் பாடல்கள் நகைச்சுவையினூடாக நற்குகருத்துக்களைக் கூறுவதில் வியப்பில்லை. அண்ணாவின் 'சொர்க்கவாசல்' திரைப் படத்துக்காக உடுமலையார் எழுதிய பாடலொன்று தமிழர் வீரம், புகழ் என்பவற்றை முழங்குகின்றது. பிற்காலத்தில் "அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடைமையடா" என மன்னாதி மன்னனுக்காக கவிஞர் கண்ணதாசன் இயற்றிய பாடலுக்கு முன்னோடியாக அமைந்த பாடல் இதுவாகும்.

"கன்னித் தமிழ்ச் சாலையோரம்
சோலையிலே
கவிதைக் கனிகள் உண்ணும் பறவைகளே
தென்வர் மூவேந்தராம் தமிழ் வளர்த்த
சேர சோழ பண்டியரைப் பாருங்களே
மேருமலை மீதினிலே கொடி நாட்டினான்
- சேரன்
வீரங்காட்டி கனகவிசயன் தலை
வாட்டினான்.
பாறாங்கல்லை உடைத்தெடுத்தான்
பகைவனைச் சுமக்க வைத்தான்
பத்தினிப் பெண் சிலை சமைத்தான்
கேளுங்களே - அந்தப்
பாடல் பெற்ற தேவி தன்னைப்
பாடுங்களே"

சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்குசிலை அமைத்த வரலாறு இப்பாடலில் எளிமையாக உணர்த்தப்படுவதன் மூலம் தமிழர் வீரம் நிலை நிறுத்தப்படுகிறது. இன்னுமொரு உடுமலையாரின் பாடலில் (நல்லதம்பி திரைப்படத்தில்) தமிழ் நாட்டின் சிறப்புக்கள் தேசிய விடுதலைப் பேராளிகளின் பெருமையோடு இணைத்து வெளியிடப் பட்டுள்ளமையை அவதானிக்கலாம். கலைவாணருக்காக எழுதப்பட்டது இப் பாடல்

"கலைமுதலாகத் தொழிமுறை யாவும்
காத்து வளர்ப்பது தமிழ் நாடு
முதல் முதலாக நல்லவையாவும்
முயன்று முடிப்பதும் தமிழ் நாடு
எனத் தொடங்கிய பாடலில்
பாட்டால் உணர்ச்சியூட்டும் கவி
பாரதி சேர் தமிழ் நாடு
உலகம் வியக்கச் சுதேசிக் கப்பல்
ஓட்டியதும் தமிழ்நாடு
திலகமெனப் புகழோங்கும்
சித்பரம்பிள்ளை செயல் புரிந்த தமிழ்
நாடு"

என்றவாறு தமிழர்களின் பெருமைகள் இதில் பேசப்படுகின்றன. காதல் பாடல்களிலும் பாத்திரங்களுடன் ஒன்றிய கவி நிலையில் தமிழுணர்வைப் பிரதி பலிப்பதில் உடுமலை தவறவில்லை. சிவாஜிகணேசன் நடித்து, கலைஞர் கருணாநிதி கதை வசனத்தில் உருவான 'மனோகரா' திரைப்படப் பாடலொன்றில்

"சிங்காரப் பைங்கிளியே பேசு - செந்
தமிழ்த் தேனை அள்ளியள்ளி வீசு
சங்கம் புகழ் முரசு கொண்ட் தனியரசு
- என்
தமிழ் மொழிக் கெதுவோ நீ தரும் பரிசு?"

எனக் கேட்டு வைக்கிறார் கவிராயர். தஞ்சை ராமையாதாஸ் அவர்கள் இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்த் திரையுலகில் கதை-வசனம்-பாடல்களால் நிலைத்து நின்ற கவிஞர். டப்பாப் பாடல்கள் பலவற்றின் சொந்தக் காரரானாலும், பொருள் நிறைந்த நல்ல தமிழ் பாடல்களையும் தந்துள்ளார். காப்பியச்சுவை மிளிர 'வணங்காமுடி' திரைப்படத்தில் அவர் படைத்த பாடலில்,

"சிரமதில் திகழ்வது சீவக சிந்தாமணி
செவிதனில் மிளிர்வது குண்டலகேசி
திருவே நின் இடையணி மணிமேகலையாம்
கரமதில் மின்னுவது வளையாபதியாம்
கால்தனில் ஒலிப்பது சிலப்பதிகாரம்
கண்கண்ட ஐம்பெரும் காவியத் திலகமே"

என்னும் தொகையறா இடம் பெற்றுள்ளது. அவரது இன்னொரு பாடலின் இறுதி அடிகளில்

(படம்:பிரேமபாசம்)

"கற்பனைச் சிகரமாம் ராஜாஜி என்றதோர்
கலைமணி யைத் தந்த நாடு
கம்பனொடு அவ்வையும் கவிபாரதியும்
இன்பக்
காவியம் தந்த நாடு
திருக்குறள் அமுதீந்த திருவள்ளுவரென்ற
அருட் கவியைத் தந்த நாடு"

என எழுதப்பட்டிப்பது தமிழர்களைப் பெருமைப்படுத்துகிறதன்றோ! காலத்துக்குக் காலம் எவ்வளவோ தமிழ்த் திரைப்படக் கவிஞர்கள், தமிழுணர்ச்சியைப் பாடு பொருளாக் கொண்ட பல பாடல்களைத் தந்துள்ளனர். வரலாறு அவற்றை வரவேற்று மகிழ்ந்துள்ளது. தமிழலக்கிய மாலையின் அணி செய் மலர்களாக அவை மணம் வீசுகின்றன. அவற்றுள் இன்னும் சிலவற்றை நுகர்வோம்.

காந்தீயவாதியான நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளையின் பல திரைப் பாடல்கள் தமிழுணர்வின் எதிரொலிகள்.

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனது வழியாகும்"
(படம்: மலைக்கள்ளன்)

"இளந்தமிழா உன்னைக்காண இன்பம்
பெருகுது
இதுவரைக்கும் எனக்கிருந்த துன்பம்
குறையுது
பண்டிருந்த சேரசோழ பாண்டி மன்னர்
நினைவெலாம்
பாயுதடா உன்னை இன்று பார்க்கும் போது
நெஞ்சிலே (இளந்)
கொண்ட கொள்கை அறம் விடாமல்
உயிர் கொடுத்த வீரர்கள்
கோடி கோடி தமிழர் வாழ்ந்த கதைகள்
கண்ணில் தெரியுது
தமிழனென்ற பெருமையோடு தலைநிமிர்ந்து
நில்லடா
தரணியெங்கும் நிகரில்லாத தர்மம் கொண்டு
செல்லடா (இளந்)"

நாமக்கல் கவிஞரின் தமிழுணர்ச்சி இவ்வாறிருப்ப, புரட்சிக் கவி பாரதியும், பாவேந்தர் பாரதிதாசனும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் ஊட்டி வளர்த்த தமிழுணர்ச்சிப் பாடல்கள் பலவும் தமிழ்த்திரைப் படங்களில் எடுத் தாளப்பட்டுள்ளன. "கப்பலோட்டிய தமிழன்" திரைப்பாடல்கள் அனைத்தும் பாரதியாரின் தேசபக்திப் பாடல்களாகும்.

"சங்கே முழங்கு சங்கே முழங்கு
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளை
ந்தால்
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு"
(படம். கலங்கரை விளக்கம்)

"தமிழுக்கும் அமுதென்ற பேர் அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு
நேர்"
(படம் பஞ்சவர்ணக்கிளி)

மேலேயுள்ளவை பாரதிதாசனின் தமிழ் உணர்ச்சிப் பாடல்கள். புகழ் பெற்ற 'ஔவையார்' திரைப்படத்தில் இடம் பெற்ற 'வெண்ணிலவே' எனத் தொடங்கும் கே.பி.சுந்தராம்பாள் பாடி நடித்த பாடலினை கொத்தமங்கலம் சுப்பு எழுதியிருந்தார்.

"வெண்ணிலாவே வெண்ணிலாவே
கன்னித் தமிழ் நாட்டினிலே
வெண்ணிலாவே நான்
காணும் அருமை யெல்லாம்
வெண்ணிலாவே
எண்ணி யெண்ணிப் பெருமை
கொண்டேன்
வெண்ணிலாவே இவை
என்றும் நிலைத்திடுக வெண்ணிலாவே"

இவ்வாறு தொடங்கும் பாடலின் இறுதி வரிகள் தமிழ்ப் புலர்களின் கொடைச் சிறப்பை எடுத்து வெண்ணிலாவுடன் ஒப்பீடு செய்கின்றன.

பண்டிதர்.செ.திருநாவுக்கரசு

"முல்லைக் கொடி படர வெண்ணி
லாவே ஒரு
முடிமன்னன் தேர்ஈந்தான்
வெண்ணிலாவே
இல்லை என்னும் சொல் அறியா
வள்ளல் பாரி
ஈன்ற தமிழ்நாடு வெண்ணிலாவே
வெள்ளி நிலவுதன்னை அள்ளி வீசும்
உன்போல்
வேந்தர் பலருமுண்டு வெண்ணிலாவே
வள்ளல் பிறந்த நிலம் வெண்ணிலாவே
என்றும்
வாழ்க தமிழ் நாடு வெண்ணிலாவே"

கவிஞர் மாயவநாதனின் பாடலொன்றில்

"தமிழ் எங்கள் உயிரானது காலச்
சுழலாலும் கனலாலும் அழியாமல்
நிலையான (தமிழ்)
படிப்போர்க்குப் பால் போன்றது. தம்மைப்
பகைப் போர்க்கு வேல் போன்றது"

என்ற கருத்தினால் தமிழ் மொழியின் பெருமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளதை நோக்கலாம்.

(தொடரும்)

---



## நான் காதலுக்காக வழக்காடுகிறேன்

வானவில்லை
நீங்கள்
தண்ணீர்த் தூறலில்
தரிசித்திருப்பீர்கள்

அந்த வானவில்லோ
வர்ணங்களின்
தற்காலிக ஒப்பந்தம்

நீங்கள்
கலையாத
வானவில்லைக்
கண்டதுண்டா?

கண்ணீர்த் தூறலில்
முளைப்பதால் தானோ
அது கலையாமல்
இருக்கிறது?

அதுதான்
காதல்

காதல்

மனிதனை தேவனாக்கும்
இரண்டாம் பரிணாமம்
இது.

இந்தக்
காதல் மேகந்தான்
மனமென்னும் எரிமலையில்
மழைசிந்தி, மழைசிந்தி
அதில்
உல்லாச வனங்களை
உற்பத்தி செய்யும்

இதய ரோஜாச் செடியில்
இந்த
ஒற்றைப் பூப் பூத்துவிட்டால்
அத்தனை முட்களும்
உதிர்ந்து போகின்றன

வாலிபம் ஏந்திப் பார்க்கும்
திருவோடும் இதுதான்

வாலிபம் சூடிப்பார்க்கும்
கிரீடமும் இதுதான்

முதலில்
சப்தங்களுக்கே அர்த்தம்
சரியாய் விளங்கவில்லை

இப்போதோ
மௌனத்திற்கும் கூட
உரையெழுத முடிகிறது

காதல்
காதுகுடைந்து போட்ட
கோழிஇறகுங்கூட
மயிலிறகுக்கான
மரியாதைக்குரியது

காதல் கடிதங்கள்.....
பருவம் எழுதும் பரீட்சைகளில்
எழுத்துப் பிழைகள்
மன்னிக்கப்படுவது
இந்தப் பரீட்சையில் தான்

அக இலக்கணம்
அதைக்
'காதல் வழுவமைதி' என்று
கணக்கில் வைத்துக்
கொள்கிறது

காதல் கடிதங்களுக்கு
அஞ்சல் நிலையங்கள்
இடும் முத்திரை
இரண்டாம் முத்திரைதான்
அதற்கு முன்பே
உதடுகள் இடும்
முத்த முத்திரைதானே முதல்
முத்திரை?

இலக்கிய வாசல்களில்
கனவுகளாலும்
கண்ணீராலும் இடப்படும்
காதல் கோலம்
சமூக வாசல்களில்
எச்சிலால் அல்லவா
அர்ச்சிக்கப்படுகிறது?

அமராவதிகளும்,
அனார்க்கலிகளும்
லைலாக்களும்,
தேவதாஸ்களும்

காதல் பிச்சை
கேட்டுக் கேட்டு.....

மரணத்தின் பாத்திரத்தில்
பிச்சையாய் விழுந்தார்கள்

அனார்க்கலியின் ஞாபகம்
ஆறுமா?

சலீமின்
ராஜமாடங்களில்
கூடுகட்ட வேண்டிய
குயிலுக்கு....
கல்லறைக் கூடல்லவா
கட்டிக் கொடுத்தார்கள்?

தேவதாஸ் என்னானான்?
காதல் நினைவுகளைக்
கழுவ.....
தண்ணீரில் மிதந்து
தண்ணீரில் மிதந்து
சாவுத் தீவில்
கரை ஒதுங்கினான்

அமராவதி எனும்
ராஜகவிதை
ஓர் ஏழைப் புலவரின்
மனப்பாடத்திற்கு ஏன்
மறுக்கப்பட்டது?

நிஜத்தில்......

எழுதுகோலுக்கும்
செங்கோலுக்கும்
வரலாற்றில் நிகழ்ந்த
வர்க்கப் போட்டியது

இதுவரை
எழுத்தாணிகளும்
போனாக்களும்
காதலின் கண்ணீரைத்
தொட்டு எழுதத் தோன்றின
வன்றி...
துடைக்கும் விரலாய்
நீளவில்லையே

விதியாம்
விதியை எழுதும் பேனாவில்
ஆயிரங் காதலரின்
ரத்தந்தான்
மையாகுமென்றால்

அந்தப் பேனாவை
ஒரு பிணத்தின் கைகளில்
கொடுத்து விடுங்கள்

சமூகம்
தனது
பரிசோதனைக் குழாயில்
இறந்தகாலத்தின் கண்ணீரை
எடுத்துக் கொண்டு
நிகழ்காலக் கண்ணீரை ஏன்
நிராகரிக்கிறது?

போதும்
காதலின்
சௌகர்ய உலாவுக்கு
நாம்
இன்னொரு வீதி செய்வோம்

அது
கண்ணீர் சேறு படாத
காதல் வீதி

அந்த வீதி
அமையும் வரைக்கும்
காதலுக்கு
இரங்கற்பா எழுதுவோரே
உங்கள் பேனாவைப்
பால்கணக்கு எழுத மட்டுமே
பயன் படுத்துங்கள்.

# புலிகள் மீதான தடை நீக்கப்படுவது உறுதி
# இடைக்கால நிர்வாகம் தீர்வின் ஒரு பகுதி

திருவிழா தொடங்கி விட்டது. தாய்லாந்தின் பேச்சுக் களுக்கான திகதிகள் அறிவிக்கப் பட்டிருக்கின்றன. நிகழ்ச்சி நிரல் பற்றிய இழுபறிகள் முடிந்து விட்டனவா?எதிர்பார்த்த படி இடைக்கால நிர்வாகம் என்னும் விடயத்திற்கே முதல் முன்னு ரிமை அளிக்கப்பட்டிருக்கிறதா? என்பன போன்ற விடயங்களில் உடன்பாடு ஏதேனும் எட்டப் பட்டிருக்கலாம். அத்துடன் இந்த விடயத்தில் தாய்லாந்து பேச்சுக் களினால் விளையக்கூடிய தீர் மானங்களின் சாதக, பாதகநிலை மைகளை அடிப்படையாகக் கொண்டே தென்னிலங்கைப் பேரினவாதிகள் தமது அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் திட்ட மிடுவதற்குக் காத்திருப்பது போல் தெரிகிறது. இது டிசம்பர் 5ஆம் திகதிக்கு பின் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு வேண்டிய தளநிலைமைகளை உருவாக் கும் வலுவான காரணியாக வளர வும் கூடும் என எதிர்பார்க்கலாம்.

### தாய்லாந்துப் பேச்சும் தடைநீக்கமும்

இதேவேளை தலதா மாளிகை மீதான தாக்குதலுடன் விடுதலைப்புலிகள் மீது விதிக்கப் பட்டதடையும், தாய்லாந்து பேச்சுக்களுடன் நீக்கப்படுவதற் கான இறுதி அறிவித்தலும் வெளி வந்து விட்டது. முழு உலகமும் ஆவலுடன் எதிர்பார்த்த முக்கிய திருப்பங்கள் நடைபெற ஆரம் பித்துள்ளமை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முதற்படியான நடை முறைகளாகும். அதேவேளை, தமிழினத்தின் பிரச்சினை தொடர் பில் தென்னிலங்கை அரசியல் எவ்வளவு தூரம் நெகிழ்ச்சித் தன்மையைக் காட்டப் போகிறது? பேரினவாதம் எத்திசையில் நடை போடப்போகிறது? என்பன வற்றை ஓரளவிற்குத் தீர்மானிக் கப் போகும் நடைமுறை, நிகழ் வுகளுக்குத் திரைநீக்கமுமாகும். ஆலம் விதை முளைவிடும் போது அம்மி போல் கிடந்த அடி நிலம், விருட்சமாக அது வளரும் போது வெடித்து, பிளவுண்டு வழிவிட்டு நின்று இறுதியில் அரிய நிழலுக்கு உரித்தாளியாகு வது இயற்கையின் இயக்கவியல் புகட்டும் பாடம்.

மாற்றங்களை வரவேற்பதற்கு வடக்கு - கிழக் கின் தளம் பசுந்துளியை காணக் காத்திருக்கும் பாலைவனம் போல் தயாராகிக் கொண்டே யிருக்கிறது. ஆனால் தென்னிலங் கையின் அரசியல்சீனவெடிகளாக வெடிக்கின்றன. சில கள்ள வெடி கள் சீறி விட்டு அடங்கி விடு கின்றன. கண்ணி வெடிகளுடன் ஆரம்பித்து லட்சக்கணக்கான மிதிவெடிகளுக் கூடாக நடந்து கடந்து வந்த சீன வெடிகளைச் சந்தித்து வரலாறு ஆற்றொழுக் காக ஓடிச் செல்கிறது.

### மத்திய, மாநில அரசுகளின் உறவு என்ன?

உரிய இடத்திலிருந்து உத்தி யோகபூர்வ அறிவிப்புகள் வெளிவருவது பின்னே, அதற் கான மக்கள் தளத்தை ஆயத்தம் செய்யும் ஜே.வி.பி யின் அறிக் கைகள் வருவது முன்னே என்று கூறக் கூடிய விதமாக விமல் வீர வன்ச ஒரு கிளறு கிளறியிருக் கிறார். தாய்லாந்தில் நடை பெறவுள்ள பேச்சுக்களில் அரசாங்கம் முன்வைப்பதற்கு உத்தேசித்துள்ள தீர்வுத் திட்டம் என்ன? அது கூட்டாட்சியா? அல் லது மாநிலங்களின் கூட்ட மைப்பா? புதிய தீர்வு இன்றைய அரசியல் யாப்பிலிருந்து எவ் வெவ்விதங்களில் வேறுபடலாம்? மத்தியரசுக்கும், மாநில அரசுக கும் இடையே எத்தகைய உறவு கள் நிலவும்? இத்தகைய விடயங் களை அறிய எமக்கு உரிமை உண்டு. அரசாங்கம் இவற்றை வெளியிட வேண்டும். சமர்ப்பிக்கப் பட இருக்கும் தீர்வு யோசனை களில் சிங்கள மக்களுக்கு துரோ கம் விளைவிக்க முடியாத எதுவு மில்லையென்றால் அவற்றை ஐ.தே.மு வெளியிடத் தயக்கமேன்? என்று ஜே.வி.பி பிரசாரச் செய லாளர் விமல் வீரவன்ச கேள்வி யெழுப்பியுள்ளார்.



பொ.ஐ.மு தலைமை அடுத்ததாக ஏந்தப் போகும் ஆயுதம் என்ன என்பதை ஊகிக்க முடிகிறது.

### ஜனாதிபதி செயலக அறிக்கை

சம்பிரதாயத்திற்காக தமது சமாதான முகத்தை முனைப்புடன் காட்டி வரும் பொ.ஐ.மு தலைமை மேலும் ஒரு முறை ஒத்துழைப்புக் கீதம் பாடியுள்ளது. ''அடுத்த மூன் றாண்டுகளுக்குள் பாராளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது. தற் போதைய நிலையில் பொதுத் தேர் தல் உசிதமானதல்ல. ஐ.தே.மு அரசைக் கவிழ்ப்பதற்கு நாம் ஒரு போதும் திட்டமிட்டிருக்கவில்லை. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைத் துண்டு துண் டாக ரத்து செய்வதற்கு இட மளிக்க மாட்டோம்'' என்று ஜனாதிபதியின் செயலகத்தி லிருந்து வெளியிடப்பட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

எவ்வாறாயினும், மேம் போக்காக பார்க்குமிடத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பேச்சுக்கள் விரைவில் நடைபெற வேண்டும் என்றும் சமாதானப் பேச்சுக்கள் விடுதலைப் புலிகளுக்கும் ஐ.தே.மு க்கு மிடையே நடைபெறுவதாக இருத் தலாகாது. ஜனாதிபதியின் கருத் துகள், இடதுசாரி கட்சிகளின் கருத்துகள், முக்கியமாக தென்னி லங்கை மக்களின் கருத்துக் களையும் பிரதிபலிப்பனவாக இருத்தல் வேண்டும். பெப்ரவரி 23ஆம் திகதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் போது நடந்து கொண்டது போலன்றி, பிரதமர் ஜனாதிபதியுடன் மிகுந்த ஒத்து ழைப்புடன் செயற்பட வேண்டும். சகல கட்சிகளினதும் ஆதரவைப் பெறும் வகையில் ஐ.தே.மு தலைமை செயற்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளமை ஒரு எதிர்க் கட்சி தேசிய பிரச்சினையை பொறுப்புடன் கருத்துக் கூறு வதைக் காட்டுகிறது.

### முஸ்லிம் காங்கிரஸின் இடைக்கால நிர்வாகம்

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு இடைக்கால நிர்வாகத்தில் உரிய இடம் கிடைக் கும் என்று உச்சரித்துக் கொண் டிருக்கிறது. நியாயமான கோரிக் கை. இதனை முன்வைக்கும் இடப் பொருத்தம், காலப்பொருத்தம் கோரிக்கைக்கு இருக்கக் கூடிய மாறிவரும் அரசியற் பின்னணி என்பன தெரியாத நிலை.

ஜனாதிபதியின் செயல கம், சமாதானப் பேச்சுக்கள் ஏற் கனவே நன்றாக தாமதித்து விட் டன என்று குறிப்பிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது. பேச்சுக்களுக் கான நிகழ்ச்சி நிரலில் இடைக் கால நிர்வாகத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படக் கூடாது. பதிலாக இனத்தகராற்றிற்கும்,யுத்தத்திற்கும் அடிப்படையாகவிருந்த காரணங் களுக்கு முக்கியத்துவம் கொடுக் கப்பட வேண்டும். பேச்சுக்களின் முடிவில் முடிவுகளை அமுல் செய் வதற்கே இடைக்கால நிர்வாகம் தேவைப்படும் எனத் தெரிவித் துள்ளது. உத்தேச சமாதானப் பேச்சுக்களை வரவேற்ற எதிர்க் கட்சிப் பிரதம கொறடா மங்கள சமரவீர, 1997ல் பொ.ஐ.மு. முன் வைத்த தீர்வுத்திட்டம் இதற்கு அடிப்படையாக அமையலாமென வும் விருப்பம் வெளியிட்டார். சிஹல உறுமயவின் முன்னாள் செயலாளரும், முன்னணி சட்ட வாளருமான எஸ்.எல் குணசேகர விடுதலைப்புலிகளுடன் பேச்சுக் கள் வைத்துக்கொள்வதே நாட்டின இறைமைக்கு ஆபத்தாக முடியும் பிரிவினைக்கு வழி வகுக்குமென எச்சரித்துள்ளார். முன்னாள் சபா நாயகர் அனுரா பண்டார நாயக்க தனது சகோதரியின் தொனியில் அதே கருத்தைக் கூறியுள்ளார். மக்கள் ஐக்கிய முன்னணியின் தினேஷ் குணவர்த்தன ஜே.வி.பி யின் தொனியில் விடுதலைப் புலிக ளுக்கு முன்வைக்கப்படவிருக்கும் தீர்வுத் திட்டம என்ன என்று கேட்டுள்ளார்.

### ஜனாதிபதியின் அதிகாரங்கள்

மேற்படி நிலைமைகள், தேவைப்படும் எந்தவொரு நேரத் திலும் எந்தவொரு திசையிலும் அடுத்தடுத்த நடவடிக்கைகள் திசைதிருப்பிவிடலாம். அவ்வவற் றில் தேர்ச்சியும், ஆர்வமும் உள்ள தலைவர்களின் விருப்புக் கேற்றபடி தேசியப்பிரச்சினை அரசியற் கட்சி களின் பதவி வெறிக்கு பயன்படுத் தப்படலாம் என்பதையே காட்டு கின்றன.

ஜனாதிபதியின் கருத்து அவ்ரிடமுள்ள நிறைவேற்று அதி காரங்கள் காரணமாக முக்கியத் துவமானது.



இதேவேளை அரசியலமைப்பு விவகார அமைச்சரும் சமாதான நடவடிக்கைகளின் முன்னணி யாளருமான ஜி.எல். பீரிஸ் உட்பட ஐ.தே.மு.வின் முக்கிய தலைவர் கள் ஜனாதிபதியின் அதிகாரங் களைக் குறைக்கும் சட்ட மூலத் தை எவ்விதத்திலும் நிறை வேற்று வதில் கரிசனை கொண்டுள்ளனர். தமக்குக் குறைந்த பட்சம் 20பொ.ஐ.மு. எம்.பிக்களின் ஆதரவு உண்டென்றும் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி, பாராளுமன்றத்தை அவர் கலைக்க முடியாதபடி செய்து விடுவது என் றும் திடமாக அவர்கள் நம்பு கின்றனர்.தமக்கு ஆதரவு தரும் பொ.ஐ.மு. எம்.பிக்கள் அவர்களின் கட்சித்தலைமையினால் பதவி இழக்காமல் இருக்கும் வகையிலும்



சட்டத்திருத்தம் உள்ளடக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள் ளனர். அமைச்சரும் இதன் சூத்திர தாரியுமான ஜி.எல்.பீரிஸ் தனது 56ஆவது பிறந்த நாள் தொடர்பான இரவு விருந்தில் இக்கருத்தை வலியுறுத்தினார். அங்கு பொ.ஐ.மு. வின் முன்னாள் அமைச்சர்கள் ஏ.எச்.எம். பௌசி, றிச்சாட் பத்திரன, ஜெயராஜ பெர்னாண்டோபுள்ளே, இந்திக குணவர்த்தன ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். இவர் கள் நிறைவேற்ற விரும்பும் சட்ட மூலம் வழியாக அரசாங்கத்தின் ஸ்திரநிலைப்பாடு மேலோங்குவ தோடு அதன் விளைவு சமாதான நடவடிக்கைகளிலும் வெளிப்படு வதாக இருக்கும்.

### சமரசப் பேச்சின் விளைவு

பொ.ஐ.மு.பாராளுமன்றக் கலைப்பில் தாம் அவசரம் காட்டப் போவதில்லை என்பதை வலியுறுத் தவும், சமாதான விரும்பிகள் தமது போக்கில் அதிருப்தியடைவதை தடுக்கும் விதத்திலும் செயற்பட முன்வந்துள்ளது. அதாவது ஜனாதி பதி சபாநாயகரிடம் இது தொடர் பான எழுத்துமூல வாக்குறுதியை வழங்குவார் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது. இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதி யின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமருக்குமிடையில் நடந்த சமரசப் பேச்சுக்களின் விளை வாகும்.

இதனால் ஜனாதிபதி எதிர் பார்ப்பது என்ன? இந்த வாக்குறுதியும் 1994ல் ஜே.வி.பி யினருக்கு நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக வழங்கிய எழுத்துமூல வாக்குறுதியின் கதி யை அடையுமா என்பன ஆய்வுக் குரிய விடயங்கள்.

ஜனாதிபதி தனது அதிகாரங் களைக் கட்டுப்படுத்த ஐ.தே.மு அரசு கொண்டு வர ஆயத்தம் செய்யும் சட்ட மூலம் நிறைவேற முடியாதபடி பார்த்துக்கொள்ள விரும்புகிறார். தேர்தலொன்றை உடனடியாக எதிர்கொள்ள விரும் பாத தனது கட்சி எம்.பிக்கள் ஐ.தே முன்னணி கொண்டு வரும் சட்ட மூலத்திற்கு ஆதரவளிப்பதற்கு முன் வருவதை தடுத்துநிறுத்த விரும்புகிறார். கட்சியையும் பாதுகாக்கும் அதேவேளை தனது அதிகாரங்களையும், பதவியை யும் கூடப் பாதுகாக்க விரும்பு கிறார். இதுவே அவர் சபாநாய கருக்கு அனுப்பும் கடிதம், மக்களுக்கு தரும் செய்தியாகும்.

### பேச்சுக்கள் குழம்பும் நிலை வரலாம்

மேலும் ஒரு செய்தியும் புரியக் கூடியதாயுள்ளது. சட்ட மூலம் நிறைவேறுவதன் மூலம் அதிகாரம் கட்டுப்படுத்தப்படுவது நிரந்தரமானது. இப்போதுள்ள அரசியற் சட்டத்தில் உள்ளபடி அதிகாரங்களை வைத்துக் கொள் வதுதான் பதவிக்குப் பலம். இத னால்சட்டமூலம் நிறைவேறுவதை எவ்வாறேனும் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதே பொ.ஐ.மு. வின் மூளைசாலிகளின் திட்டமாக இருக்க முடியும்.

தாய்லாந்து பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதி அலுவல கம் வெளியிட்ட கருத்தும், சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படுவதை தடுக்கும் முயற்சிகளும், டிசம்பர் 5ஆம் திகதியின் பின்னர் பாராளு மன்றத்தை ஜனாதிபதி கலைப்ப தற்கு முயற்சிப்பார் என்ற ஐ.தே. முவினரின் வலுவான நம்பிக்கை யும் ஒன்றுடனொன்று தொடர் புள்ளன.

## சர்வன்

இடைக்கால நிர்வாகத்திற்கு முன்னுரிமை கொடுத்தலாகாது என்னும் நிபந்தனையை செயற் படுத்தினால் பேச்சுக்கள் குழம்பி விட முடியும். அவ்வாறன்றி ஜனா திபதியின் விருப்பிற்குமாறாக இடைக்கால நிர்வாகத்திற்கு முன்னுரிமை கொடுத்து விடயங் கள் நடைபெற்றால் பொ.ஐ.மு. வின் ஏவலாட்கள் போல் தொழிற் படும், பேரினவாதக்கட்சிகள் கூச் சல் போடும். இது பொ.ஐ.முவிற்கு சாதகமான அரசியல் சூழ் நிலை யைத் தோற்றுவிக்கலாம். அத்த கைய ஒரு வாய்ப்பான சூழல் வரும்வரை சட்ட மூலம் நிறை வேறாமல் பார்த்துக் கொள்ளும் தந்திரத்தை பொ.ஐ.மு.விரும்புவது நம்பக்கூடியதே. ஐ.தே.மு. இவ்வாறாகவே சிந்திக் கிறது. ஐ.தே.முக்கு மூன்றில் இரண்டு கிடைப்பதற்குப் பதிலாக பொ.ஐ. மு.விற்கே அது கிடைக்கும் சூழ் நிலை தோன்றலாம். நாய்வரும் வேளை பார்த்து உறியை அறுத்து விடலாமென்னும் சிந் தனையின் பின்னணியில் இருப்ப தாக இருக்கலாம்.

மொத்தத்தில் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள ஒருதடை நீக்கப்படுவதற்கான முயற்சியின் முன்னேற்றமானது, பொ.ஐ.முன் னணி, ஐ.தே.க அரசுக்கும், ஐ.தே.மு ஜனாதிபதியின் அதிகாரத்திற்கும் தடைபோடும் முயற்சிகளின் முன்னேற்றத்தைத் தூண்டிவிட்டுள்ளது.

## மனையடி சாஸ்திரம்

### விலைக்கு வரும் வாழ்ந்தாரின் மனையை ஏன் வாங்கக்கூடாது?

மனைகளில் வீடுகள் கட்டி வாழவேண்டும் என்று வாழ விரும்பும் மக்கள், மயனால் எழுதப் பெற்ற மனையடி சாஸ் திரம் என்று ஒரு சாஸ்திர நூல் இருக்கிறது என்பதைச் சற்றேனும் மதியாமலும், ஜோதிட சாஸ்திரம், மானிட இயல் நூல், புவியியல் நூல்,கட்டிடஇயல் அறியாதவர் களைக் கொண்டும் தாறுமாறாக முகூர்த்தங்களைக் கொண்டும், சாஸ்திர முறைக்கு மாறாகக் கட்டிய மனையில் வாழ்பவர்கள் சாஸ்திரங்கள் கூறும் குற்றங் களைக் கவனியாமல் கட்டிய தாலேயே பெரிதும் பாதிக்கப்படு வார்கள். அத்தகை யோர் தங்கள் மனையைவிற்க வேண்டித்தான் வரும். அவ்வாறு விற் பனைக்கு வரும் மனையோ, வீடோ, விலை சரசமாகக்கிடைத்தாலும் அவற்றை வாங்காமல் இருப்பதுதான் நல்லது. அவற்றைப் பற்றி கனவிலும் நினைக்காமல் இருப்பதுதான் மிக வும் நல்லது.

வீடு கட்டி வாழ வேண்டிய வர்கள், ஆதிநூல் உண்டாகி இருப்பதைக் கவனியாமல், அநே கர் அவர்களுடைய பொருள் வல்லமை யினால் நினைத்தபடியெல்லாம், கல், மரம், மணல், சுண்ணாம்பு, இரும்புக்கம்பிகள், தூலங்கள் முதலிய பொருள்களுக்காகப் பணத்தைச் செலவிட் டுக்கட்டிவிடு வார்கள்.பின்னர், அதில் வாழும் போது அநேக துன்பங்கள் உண்டா கித்துன்புறுவார்கள்.

தொகுப்பு
ஆசிரியர் குழு

இந்த நிலைமையுண்டாவதை அனுபவத்தில் காணலாம். சாஸ்தி ரம் என்பது, நம்மைப் போன்ற நமது மூதாதையரும் முன்னோடி களும் அனுபவத்தால் நன்மை தீமைகளைக் கண்டு, தமது மரபு வழியினருக்கு எழுதி வைத்துள்ள அனுபவச்சான்றுகளாகும். அத்த கைய சாஸ்திரத்தின் நுட்பம் தெரிந்தவர்களுக்கு எளிதாகவுள்ள அந்த நூலின் மீது நம்பிக்கையும், அன்பும் வைத்து, அதன் பிரமாண இலட்சணங்களைக் கொண்டு, வீடுகள் கட்டினால்தான் வாழையடி வாழையாக வாழ முடியும்.


(தொடரும்...)

## வியா மாமா! பள்ளி நட்பு படலை வரையும் உண்மையா?

*S.K.குணபாலன் அளவெட்டி*
● வியாசர் அங்கிள்! நீங்கள் அரசியலில் ஈடுபாடு உண்டா அது எந்த வகையில்?

❖ **மகனே குண்ா! எனக்கென்னமும் மாரகச்சனி பிடிக்கவில்லை. அதனால் அரசியலில் ஈடுபடும் எண்ணம் வரவில்லை.**

● வியா மாமா!ஆஸ்பத்திரி வார்ட்டில் நோயாளர்கள் கூட லவ் பண்ணுவதைக் காண முடிகின்றதே?



❖ **''லவ்''வால் வந்த நோயென்றால் அதற்கு மருந்து ''லவ்'' தானே.**

*து.சோதிநாதன் பாலாவியூர்*
● அன்பின் வியாசர் ஐயா! சமுதாயத்தைச் சீரழிப்பவர்கள் ஆண்களா? பெண்களா?

❖ **ஆண்களால் பெண்கள்.**

*T.தனரூபினி பருத்தித்துறை*
● ஒருவர் செய்த நன்றியை மறப்பவர்களுக்கு நாம் என்ன செய்யலாம்?

❖ **அவர் நாண நன்னயம் செய்ய வேண்டும்.**

● தற்போது வெளிவரும் படங்கள் நம் நினைவில் நிலைத்து நிற்பதில்லையே இதற்கு என்ன காரணம்?

❖ **பரவாயில்லையே படம் நடித்தவர்களுக்கே தமது படம் நினைவில் நிற்பதில்லையாம்.**

*க.யாழினி கரவெட்டி*
● பாராட்டுக்கு மயங்காத மனிதனே இல்லை. இது மனிதனுடைய பலவீனம் அப்படித் தானே வியாசரே?

❖ **இல்லை, மனிதனைப் படைத்த இறைவனின் பலவீனம்.**

*K.கற்பகவல்லி பருத்தித்துறை*
● தொட்டதற்கெல்லாம் குறை காண்பது மனிதனின் இயல்பா? இயலாமையா?

❖ **இயலாமையின் இயல்பு.**

● வியா சார்! ஒரு வாசகன் பல வினாக்களை கேட்டு எழுதும் போது சலிப்படையாது விடையளிக்கின்றீர்களே எப்படி?

❖ **கோலம் போட்டு விட்டோம் குலைக்காமல் விடமுடியுமா.**

*T.அனோஜினி ஸ்ரான்லி வீதி*
● வியாசர் சார் இளமைக் காலம் முடிந்தவுடன் நட்பும் முடிந்து விடுமா?

❖ **இளமையால் வந்த நட்பாயின் இளமையோடு முடிந்து விடும்.**

*ந.ஸ்ரீநந்தன் மிருசுவில்*
● என்னைப் பெண்கள் சுற்றுகிறார்கள் ஏன் வியாசரே?

❖ **மகனே! உமக்கு கற்பனைக் கனவு கூடி விட்டது. இந்தக் கேள்வி மன வைத்திய நிபுணரிடம் கேட்கப்பட வேண்டியது.**


*ஜோ.ஜெ.டி கொழும்புத்துறை*
● வியாசரே! அரைகுறை ஆடைக் கலாசாரம் யாழ் நகரில் சூடு பிடித்துள்ளதே ஏன்?

**உஷ்... அரைகுறையாகவாவது ஆடை அணிகிறார்களே என்று ஆறுதல் அடைவது தான் புத்திசாலித்தனம்.**

● பெண்ணுக்கு பெருமை சேர்ப்பது எது?

❖ கற்பு.

*S.தர்மினி முடமியன்*
● வியா அங்கிள்! நீங்கள் மனைவியிடம் அடி வாங்கிய சந்தர்ப்பம் உண்டா?



❖ **அதனைத் தவிர்த்து வருகிறேன்.**

● காதல் எல்லாம் வெறுப்புக்களில் ஆரம்பித்து விருப்புக்களில் முடிகிறது. கல்யாணம் எல்லாம் விருப்புக்களில் ஆரம்பித்து வெறுப்புக்களில் முடிவது ஏன்?

❖ **கேள்வியை மாற்றிக் கேட்பதே இதற்குப் பதில்.**

*பூங்கோதை கொடிகாமம்*
● வியாசரே!சமையலும் ஒரு கலைதானே! அதனை ஆண்கள் அறிந்திருப்பது ஏன் கீழ்த்தரமாக கருதப்படுகிறது?

❖ **சீலையும் ஓர் ஆடைதானே. அதனை ஆண்கள் கட்டிக் கொண்டால் என்னவாம்.**

## வியாசரின் பதில்கள்

● ஒரு குடும்பம் மகிழ்ச்சியாக அமைவதற்கு பெரிதும் காரணமாக அமைவது ஆண்களின் சம்பாத்தியமா? பெண்களின் சம்பாத்தியமா?

❖ **ஆண்களின் சம்பாத்தியம் பெண்களின் சேமிப்பு.**

*ஜோ.ஜெ.டி கொழும்புத்துறை*
● தற்கால அரசியல் சாண் ஏற முழம் சறுக்குவதாய் அமைகின்றதே?

❖ **ஏறுகின்ற மரத்தில் சிலர் எண்ணெய் பூசுகிறார்கள் அதனால்தான்.**


*M.ஸ்ரீவாகினி உரும்பிராய்*
● வியாசர் ஐயா, நல்லூர் திருவிழாக்களில் இடிமாடுகள் திரிகிறதாம்?

❖ **இடிமாடுகளுக்கு நாணயம் குத்தியதாகக் கேள்வி பொறுத்திருந்து தான் பார்க்க வேணடும்.**

*தமிழிதயம் தென்மட்டுவில்*
● வியா மாமா! ஜெயலலிதாவிற்கு ஒரு வர்ணனை கூறுங்களேன்?

❖ **சுப்பிரமணிய சுவாமியிடம் கேளுங்கள்.**

*சங்கீதா கொடிகாமம்*
● வியா மாமா! பள்ளி நட்பு படலை வரையும் உண்மையா?




❖ **உண்மையோ, பொய்யோ தெரியாது. ஆனால் பல்கலைக்கழக நட்பு BAR மட்டும் என்பது உண்மை.**

## வியா அங்கிள்! நீங்கள் மனைவியிடம் அடி வாங்கிய சந்தர்ப்பம் உண்டா?

● வியாசர் அவர்களே! தமிழில் வெளிவர இருக்கும் பாபா திரைப் படத்தில் நீர் கதாநாயகனாக நடித்திருந்தால் கதாநாயகியாகவும் வில்லனாகவும் யாரைத் தேர்ந்தெடுப்பீர்?

❖ **கதாநாயகியாக ஜெயலலிதாவை வில்லனாக ~ வை.கோவை.**

*G.மயூரன் அத்தாய்*
● அங்கிள் அவர்களே! நேற்று ஓர் கனவு கண்டேன். எமது நாட்டிலிருந்து தரைவழிப் பாதையூடாக இந்தியாவை அடைந்ததாக எனது கனவு நிறைவேறுமா?



❖ **கனவு கண்டது பகலா? இரவா? .**

● மகாபாரதத்தில் மிகவும் பரிதாபத்திற்குரிய பாத்திரப் படைப்பு எது?

❖ **துரியோதனனின் தகப்பன் திருதராட்டிரன்.**

*A.அஜித் புன்கன்குளம்*
● வியாசர் அங்கிள்! உண்மையான உத்தம காதலை எப்படி அறியலாம்?

❖ **அப்படியொரு முறையிருந்தால் காதல் தோல்வியே வராதே.**

● புத்திசாலி, திறமைசாலி இவர்களுக்கு இடையில் வேறுபாடு இருக்கிறதா?

❖ **திறமைசாலி ஆபத்திலிருந்து தப்பிக் கொள்வான். புத்திசாலி ஆபத்து வராமல் பாதுகாத்துக் கொள்வான்.**

● வியாசர் சார்! இக்காலப் பெண்கள் ஆண்களின் உடைகளை அணிவதால் பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றதே?

❖ **ஆண்களிடமிருந்து பெண்கள் தப்பிக் கொள்வதற்காகக் கையாளும் தந்திரமாக இருக்குமோ.**

● வியாசர் அங்கிள்! ஆலயத்திலே பூசை செய்யும் ஐயர்மார்கள் ஆதிகாலத்திலே நடந்து சென்றார்கள். ஆனால் இப்போது ஹீரோ கொண்டாவில் செல்கிறார்களே ஏன்?


❖ **ஐயர் வரும் வரை அமாவாசை காத்திராது என்பதை உணர்ந்து விட்டார்கள் போலும்.**

## ஐயா! என்னுடைய நண்பன் தாடி வளர்க்கிறான். கேட்டால் இதற்கு ஒரு லேடிகாரணமென்கிறான். இவனை என்ன செய்யலாம்?

● யாழ் வர்த்தகக் கண்காட்சிக்குச் சென்றீர்களா?அங்கு உங்களைக் கவர்ந்தது என்ன?

❖ **யாழ். மத்திய கல்லூரியின் அழகான பூந்தோட்டம்.**

● ஐயா என்னுடைய நண்பன் தாடி வளர்க்கிறான். கேட்டால் இதற்கு ஒரு லேடி காரணமென்கிறான் இவனை என்ன செய்யலாம்?



❖ **லேடியைக் கண்டுபிடித்து அவர் மூலம் தாடியை எடுக்கச் சொல்லுங்கள்.**

*T.தனரூபினி பருத்தித்துறை*
● வியா சார்! ஆறறிவு மனிதனுக்கு ஐந்தறிவு குணமிருக்கிறதே?

❖ **மனிதன் குரங்கிலிருந்து வந்தவனென்பது தெரியாதா.**

● சமூகத்தில் காணப்படும் சீர் கேடுகளுக்கு என்ன காரணம்?


❖ **இற்றைக்கால கல்வி முறை.**

● அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு பெண்களின் குணம் என்பார்கள். இவை சில சமயம் அடிமை விலங்காகவும் மாறுவதுண்டு. இதற்கு என்ன காரணம்?

❖ **நல்ல குணங்கள் பலயீனமாகக் கருதப்படும் போது இத்தகைய அடிமைத்தனம் ஏற்படுகிறது.**

## வியா மாமா! ஆஸ்பத்திரி வார்ட்டில் நோயாளர்கள் கூட லவ்பண்ணுவதைக் காண முடிகின்றதே ?

# வாசகர் இதயநாதம்



**வளமார் தமிழின் வற்றாத தேனருவியே! தெள்ளமுத நெறியின் தெய்வ வள்ளுவனின் வாய்மையே! ஔவைாய் அருளமுதே தூய்மையே, இளங்கோவின் இதயமே, புகழேந்தியின் புதையலே, கல்வி, கலையின் மெய்ப் பொருளே, நல் ஒழுக்கத்தின் இமயமே, கொள்கையின் கோபுரமே, எங்களின் அன்பகலா நண்பனே மங்காத தமிழின் மங்கல விளக்கே, சங்குநாதமே, நீ மலையென உயர்ந்து விண்வெளியாகப் பரந்து, சமுத்திரமாகப் புகழ் பெற என் நல் ஆசிகள்**

**ச.வி.அஜந்தன்,**
**ஜெம்பட்டாவீதி, கொழும்பு.**

**வலம்புரித்தாயின்! புதல்வனே நீ தாங்கி வரும் ஆக்கங்கள் யாவும் சிந்திக்க கூடியதும் வரவேற்கத்தக்கதும். நான் இங்கு கூற வருவது என்னவென்றால், உன்னுடையபக்கத்திலே கவிஞர் வைரமுத்துக்கென்றொரு இடம் வார வாரம் ஒதுக்கப்படுகிறது. வரவேற்கத்தக்க விடயம். ஏன் வார வாரம் சுழற்சி முறையில் கவிஞர் வாலி, கவிஞர் மேத்தா இன்னும் பல கவிஞர்களின் கவிதைகளையும், வாரந்தோறும் பிரசுரிப்பதால் நன்றாக இருக்கும்! என்பது உன்னுடைய வாசகனின் கருத்து. நீ வாழ்க. உன் பணி தொடர்க.**

**எஸ்.கவிதரன்,**
**சண்டிலிப்பாய்**

வண்ணமான என் வாசலில் வந்து
செழிப்பான செய்தி சொல்ல
ஓடோடி வரும் சங்குநாதமே!
உன் புனிதமான பணிக்கு
என் தாழ்வான வணக்கம்
நடக்கும் பொழுது மழலையாய் -நீ
புதுயுகம் படைப்பாய்
இலை மறை காயாக மறைந்திருக்கும்
இளம் திறனாளர்களை
வெளிச்சத்திற்கு கொண்டு வருபவனும்
சங்குநாதமே!
வெண் தாள்களுக்கு மை தீட்டி
வாழ்வு கொடுக்கும் சங்குநாதமே!
உண்மை, நேர்மை, நடுநிலைமை...
யாவற்றிற்கும் நிகர் நீயே!
உனது வழிகாட்டலிலே
நாம் வளர்ந்து - புதிய
சகாப்தம் படைக்கும் போது
எமது வரலாற்றுப் பாதையில்
உச்சரிக்கும் பெயரும் சங்குநாதமே

இ.வணிகலாதன்,
புத்தூர்.

செந்தமிழுக்கு செழுமை சேர்த்திடும் சங்குநாதமே, அறிவியலை அள்ளி வழங்கும் கணணி நாதமே ஆண்டுகள் கோடி நீ மலர்ந்திட வேண்டும் அகிலமெல்லாம் உன் புகழ் பெருகிட வேண்டும்

ஆ.டீன்ஸ்ராஜ்,
இராசாவின் தோட்டம்.

**சங்குநாதம் ~ இது செந்தமிழின் கீதம் மங்கா தென்றும் ஒலிக்கும் மங்கல நாதம், வெங்கள பூமியில் வெற்றி விளைவித்திடும் வேதம் சங்குநாதமே சங்கம் விட்ட தூய தமிழ்ப்பணி எனை திங்கள் தோறும் தொடரும் உனை வாழ்த்தும் அணி வகுப்பில் இறுதியாக ஆனால் உறுதியாக நெற்கொழுதாசனும்.**

**வல்வெட்டித்துறை.**

வாரம் ஒரு காலையில் என்னை மயங்க வைக்கும் சங்குநாதமே வாழ்க நீ இவ் உலகமெங்கும்.

S.முரளி,
கல்வியங்காடு

எனக்கொரு காதலி என்றென்றும் அவள் நினைவு
எந்த நாள் காணுவேன் என மனம் தினம்
ஏங்கும். எப்படி நான் ஏங்கினாலும் என்னருகே
எப்படியும் வந்திடுவாள் வாரம் ஒரு திங்கள்

அந்தநாள் அவள் வந்த நாள்
அள்ளி இன்பம் அடுக்கும் நாள்
அப்பப்பா அவள் அளிக்கும் அன்பரசம்
அடுக்கடுக்காய்ச் சொல்லிடவா

சொல்லிடுவாள் சொல்லிடுவாள் பல சேதிகள்
நாட்டின் பலசேதி நலமாய் இயம்பிடுவாள்
சின்னச் சின்ன சிறுகதைகள் சிங்காரமாய் கூறிடுவாள்
சினிமா கிசுகிசுக்கள் கிளுகிளுப்பாய்
அளித்திடுவாள்

இப்படி இப்படி எத்தனை கூறுவாள்
அத்தனை நல்லவள் எப்படி இயம்புவேன்
இத்தனை வல்லவள் அத்துடன் நல்லவள்
யாரவள் என்று நீர் ஏங்கியே பார்க்கிறீர்

சொல்லவா? சொல்லவா?
என்னவள் இனியவள் பெயரை
அவள்தான் அவள் தான்
என் இனிய காதலி சங்குநாதம்.

த.வினோதா,
யா.கொ.தி.ம.வீ.

# அர்த்தமுள்ள இந்து மதம்



இந்து மதம் பிற மதங்களை வெறுப்பதில்லை. சொல்லப்போனால் எல்லா மதங்களையும் தன்னோடு சமமாகவே கருதுகிறது.

மதத் துவேஷம் எந்தக் காலத்திலும், இந்துக்களால் ஆரம்பிக்கப்பட்டதில்லை.

அதன் பரந்த கரங்கள், அத்தனை மதங்களையும் அணைத்துக கொண்டே வளர்ந்திருக்கின்றன.

ஓர் ஏரியின் நீரைப்போல பரம்பொருளையும் அதில் இறங்குகின்ற பல படித்துறைகளைப் போல் எல்லா மதங்களையும் பரமஹம்சர் காணுகின்றார்.

அன்பின்மூலம் அன்பு வளர்வதைப்போல், வெறுப்பின் மூலம் வளர்வதில்லை என்கிறது இந்து மதம்.

வெறுப்பு ஒரு குறுகிய கூட்டுக்குள் சதிராடுகிறது.

அன்போ, வானையும் கடலையும் போல், அறிவை விரியச் செய்கின்றது.

நிலத்தைப் பங்கு போட்டுக் கொள்வதுபோல் வானத்தைப் பங்கு போட முடிவதில்லை.

'நிலம்' என்பது மதம்; 'வானம்' என்பது பரம் பொருள் என்கிறார் பரமஹம்சர்.

'சமண மதம் பரவிக் கிடந்த காலத்தில் அதைக் கருவறுத்து, சமணர்களைக் கழுவிலேற்றிய கூன் பாண்டியனும், மங்கையர்க்கரசியும் தான் பிற மதங்களைத் துவேஷித்த முதலாவதும் கடைசியுமான இந்துக்கள்.'

அவர்களுக்கு முன்னாலும் சரி, பின்னாலும் சரி, இந்து மதம் யாரையும் வெறுத்ததில்லை.

## பிற மதங்கள்

''வீட்டின் உச்சி முகட்டுக்குப் போக ஏணி, மூங்கில் படி, கயிறு - இவற்றில் ஏதேனும் ஒன்றின் உதவியைக் கொண்டு ஏறலாம். அது போலப் பரம் பொருளை அடைவதற்கு வேறு வேறு மார்க்கங்கள் உண்டு. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட மார்க்கங்களில் ஒன்றைத்தான் காட்டுகின்றது.

மின்சார விளக்கின் ஒளி மங்கலாகவோ, பிரகாசமாகவோ வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாகத் தோன்றுமாயினும், மின்சாரம் ஒரே இடத்திலிருந்துதான் வருகிறது.

அதுபோலவே, வெவ்வேறு காலத்தில் தேசந்தோறும் தோன்றிய மதபோதகர்கள் அனைவரும், சர்வ சக்தியுள்ள ஒரேயொரு மூலப்பொருளிடமிருந்து இடை விடாது பெருகிக் கொண்டிருக்கும் ஒளியை வெளியிடும் தீப ஸ்தம்பம் போன்றவர்களே" என்றார் பரமஹம்சர்.

எல்லா மதங்களாலும் போற்றப்படும் இறைவன் ஒருவனாகவே இருந்தால் ஏன் அவனைப் பல மதங்களும் பல மாதிரி வருணிக்கின்றன?

இங்கு பரமஹம்சரின் பதில்:

'நீ வீட்டு எஜமான்; உன் மனைவிகுக் கணவன்; மகனுக்குத் தந்தை; வேலைக்காரனுக்கு முதலாளி; ஆனாலும் நீ ஒருவன் தான். அவரவரும் உன்னிடம் கொண்ட உறவு முறையை வைத்து உன்னைப் பார்ப்பது போல், பல மதத்தவரும் ஆண்டவனைப் பல விதத்தில் பார்க்கிறார்கள்."

ராமகிருஷ்ணரின் இந்த வாக்கு இந்துவின் விரிந்த ஞானத்துக்கு எடுத்துக்காட்டு.

இந்து மதத்திற்கு எதிராகப் பல கட்டங்களில் தோன்றிய நாத்திகவாதம், தானாகவே மடிந்து போனதற்குக் காரணம் இதுதான்.

சகிப்புத் தன்மையையும், அரவணைப்பையும் இந்து மதம் வலியுறுத்தியது.

''உடலில் பட்ட காயம் மறைந்துவிடும்; உள்ளத்தில்பட்டால் மறையாது. ஆகவே, பிறரை நீ புண்படுத்தாதே" என்கிறது இந்து மதம்.

தண்டனையைக் கடவுளின் பொறுப்பில் விட்டு விடுவதால், நடைமுறைகளைத் தாங்கிக் கொள்கிற சக்தி இயற்கையாகவே வந்து விடுகிறது.

''காலப்போக்கில் ஒவ்வொன்றும் மாறுகிறது'' என்ற விஞ்ஞான உண்மையை, வேதாந்த உண்மையாக இந்துக்கள் எப்போதோ சொல்லிவிட்டார்கள்.

'மாறும்வரை பொறுத்திரு' என்பதே இந்து மதத்தின் உபதேசம். மனப் பக்குவம் இல்லாதவன், நினைத்தபடி எல்லாம் நடக்கிறான்.

வழியில் கிடைக்கும் அனுபவங்கள், அவனுக்கு அந்தப் பக்குவத்தை உண்டாக்கிவிடுகின்றன. 'வெறுப்பை வளர்ப்பவனும் என்றோ ஒருநாள் பக்குவம் பெறுவான்; அதுவரை அவனை நாம் சகிப்போம்' என்பதே இந்து மதத்தின் சாரம்.

இவற்றை நான் குறிப் பிடுவதற்குக் காரணம் இந்தத் தொடர் கட்டுரையில், நான் பிற மதங்களை மதிக்கவில்லை என்று குற்றம் சாட்டி

கவிஞர் கண்ணதாசன்

வந்த கடிதமே.

இந்து மதத்தின் சிறப்பியல்புகளை நான் விவரித்துக் கொண்டு போகும் போது, வேறு மதங்களுக்கு அந்தச் சிறப்பில்லை என்று கருதக்கூடாது.

நான் ஓர் இந்து என்ற முறையில், எனது மதத்தின் மேன்மைகளை நான் குறிப்பிடுகின்றேன்.

அவை பிற மதங்களில் இருக்கலாம்; நான் மறுக்கவில்லை.

உதாரணமாக 'கல்லானாலும் புல்லானாலும்' என்ற கட்டுரையில், இந்துப பெண்களின் கற்பியல்புகளை நான் விவரித்ததைப் படித்துவிட்டு, ''எங்கள் மதத்தில் கற்புள்ள பெண்கள் இல்லையா?" என்று ஒரு கிறிஸ்துவ நண்பர் எனக்கு எழுதியிருக்கிறார். நான் அப்படிச் சொன்னேனா? 'கற்பை வலியுறுத்தும் கதைகள் இந்து மதத்தில் அதிகம்' என்று தான் குறிப்பிட்டிருக்கிறேன்.

எனது மூதாதையர்கள் எப்படி எந்த மதத்தையும் வெறுக்கவில்லையோ, அப்ப டியே நானும் வெறுக்கமாட்டேன்.சாதாரண மனிதன் தன் அறியாமையால் தன் மதமே பெரியதென்று எண்ணி ஆரவாரம் செய்கிறான்.

''உண்மை ஞானம் உதித்து விட்டால், பிற மதங்களை அரவணைக்கிறான்" என்கிறார் பரமஹம்சர்.

உண்மை ஞானம் எனக்கு இன்னும் உதிக்கவில்லை. அது உதிக்கும் முன்னாலேயே எல்லா மதங்களையும் நேசிக்கும் அறிவை நான் பரமஹம்சரிடம் இருந்து பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

ஆகவே, இந்தக் கட்டுரையில், தொடர்ச்சியாக இந்து மதத்தின் மேன்மையை நான் குறிப்பிடும் போதெல்லாம், பிற மதங்களில் அவை இல்லை என்று சொல்வதாகக் கருதக் கூடாது.

'என் மனைவி அழகானவள்' என்று சொன்னால் 'அவன் மனைவி கோரமானவள், என்று அர்த்தமல்ல!

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

## விவசாயத்தில் தாவர வளர்ச்சிப் பதார்த்தங்கள் (Plant growth Hormones in Agriculture)

தாவர வளர்ச்சிப் பதார்த்தங்கள் அல்லது தாவர ஓமோன்கள் தாவரத்தின் ஓரிடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வேறு பகுதிகட்குக் கடத்தப்பட்டு அங்கு மிகக் குறைந்த செறிவில் உடற்தொழிலியல் செற்பாட்டை நிகழ்த்தக் கூடிய சேதன பதார்த்தங்களாகும். இவை தாவர வளர்ச்சியை தூண்டுகின்ற அல்லது நிரோதிக்கின்ற செயலைச் செய்யும் ஆற்றல் உடையவை.

**தாவரங்களில் ஐந்து பிரதான வகையான ஓமோன்கள் அறியப்படடுள்ளன. அவையாவன,**

1. ஒட்சின்கள் (Auxins)
2. ஜிபரலீன்கள்(Gibberellins)
3. சைற்றோ கைனின்கள் (Cytokinins)
4. அப்சிசிக்கமிலம் (Abscisic Acids)
5. எதிலீன் (Ethylene)

### ஒட்சின்(Auxin)

இயற்கையில், தாவரங்களில் காணப்படும் பிரதான ஒட்சின் இன்டோல் அசற்றிக்கமிலம் (Indole acetic acid) என்னும் சேர்வையாகும். இது தாவரத்தண்டின் உச்சி இளம் இலைகள் என்பவற்றில் உருவாக்கப்படும். அவரையினங்களின் முளைக்கும் வித்துக்களில் 4-குளோரோ இன்டோல் அசற்றிக்கமிலம் எனும் ஒட்சினை ஒத்த பதார்த்தம் உருவாக்கப்படுகிறது. அனேக இருவித்திலைத் தாவரங்களின் இலைகளில் இன்டோல் பியூற்டிறிக் கமிலம் (IBA) உருவாக்கப்படுவது அறியப்படடுள்ளது. ஒட்சின் கலங்களின் நீட்சியைத் தூண்டுகிறது. வேலின் கல நீட்சியைப் பிரதானமாகத் தூண்டும். கலன் மாறிழையத்தில் கலப் பிரிவைத் தூண்டி துணை வளர்ச்சியை ஆரம்பிக்க உதவும். பழங்களின் வளர்ச்சியைத் தூண்டுகிறது. கக்க அரும்பை வளர விடாது தண்டு உயர்ந்து செல்ல உதவுகிறது (உச்சி ஆட்சி). மேலும் ஒளித்திருப்ப அசைவுகளில் ஈடுபடுகிறது. உதாரணம் தண்டு ஒளியை நோக்கி வளர்தல். ஒட்சின் இலை, பழம் உதிர்வதைத் தடுக்கும். ஒட்சின்கள் செயற்கையாகவும் உருவாக்கப்படுகிறது. NAA,IBA, 2,4-D, MCPA போன்றன அவற்றில் சிலவாகும்.

(NAA - நப்தலீன் அசற்றிக் கமிலம், IBA-இன்டோல் பியூற்றிக்கமிலம். MCPA - 2 - மெதயில், 4-குளோரோ பினொக்சி அசற்றிக்கமிலம்)

**ஒட்சின்களின் விவசாய பிரயோகங்கள்**

1. தண்டுத்துண்டங்களில் வேரின் விருத்தியைத் தூண்டல் இதில் NAA, IBA என்பன பயன்படுத்தப்படுகிறது.
2. ஒட்டுதலில்கலன் மாறிழையத்தை விரைவாகத் தொழிற்பட்டு ஒட்டுதல் சிறப்பாக நிகழ்த்தப்பட பாவிக்கப்படுகிறது.
3. பழங்களின் விருத்தியைத் தூண்டவும் கன்னிக்கனியமாதல் மூலம் வித்துகள் இல்லாத. பழ உருவாக்கத்தை நிகழ்த்தவும் NAA - (நப்தலின் அசற்றிக்கமிலம்) பயன்படுகிறது.
NAA பாவித்து திராட்சையில் வித்துகள் இல்லாத பெரிய பழங்கள் உருவாக்கப்படுகிறது.
4. பழங்கள், இலைகள் உதிர்வடையாது மரத்தில் இருக்க 2,4 - D தெளிக்கப்படும்.
5. சேமித்தலில் உருளைக்கிழங்கில் முளை வருவதைத் தடுக்க 2,4-D தெளிக்கப்படும்.
6. களை கொல்லியாக அகன்ற இலைகளை அழிக்க 2,4-D, MCPAஎன்பனவும் ஒடுங்கிய இலைக்களைகளை (புல்) அழிக்க Dalapon 2,2 - இரு குளோரோ புரோப்பி யோனிக்கமிலம் தேர்வுக்களை நாசினிகளாக பாவிக்கப் படுகின்றன.

### ஜீபரலீன்கள் (Gibberellins):

இவை தாவரங்களின் இளம் இலைகள், அரும்புகள், வித்துகள், வேர்நுனி ஆகிய பகுதிகளில் உருவாக்கப்படுகின்றன. இவை கல நீட்சியைத் தூண்டித் தண்டின் கணுவிடைப் பகுதியின் நீட்சியைக் கூட்டுவதால் தாவரத்தை உயரமாக வளரச்செய்கின்றன. அத்துடன் அரும்புகளில், வித்துகளில் உறங்கு நிலையை நீக்குகின்றன. மேலும் நெடும்பகல் தாவங்களில் பூத்தலைத் தூண்டுகின்றது. கன்னிகனியமாதலையும் ஜிபரலின் தூண்டுகிறது. Gibberellin இனது விவசாய பிரயோகங்கள்:-

1. திராட்சைச் செய்கையில் விளைச்சலை அதிகரிக்கச் செய்கிறது.
2. கரட் தாவரங்களில் குளிர் காலப் பரிகரிப்பு இல்லாது பூக்கள் விருத்தியைத் தூண்டுகிறது.
3. கரும்புப் பயிர்ச் செய்கையில் நீளமான தண்டு உருவாக்கம், கூடிய வெல்லச் செறிவு என்பவற்றைத் தூண்டுகிறது.
4. வித்துக்களின் உறங்குநிலையை நீக்கி முளைத்தலைத் துரிதப் படுத்துவதற்கு அவை ஜிபரலினில் பரிகரிக்கப்படும்.

### சையிற்றோகைனின் (Cytokinins)

முளைக்கும் வித்துகள், பழங்கள், வேர்நுனி போன்ற கலப்பிரிவு நிகழும் பகுதிகளில் இவ் ஓமோன் உருவாக்கப்படுகிறது. வேர்நுனியில் உருவாக்கப்பட்ட சைற்றோகைனின் காழின் ஊடாக தாவரத்தின் தண்டுப் பகுதிக்குக் கடத்தப்படுகிறது. இது கலங்களின்பிரிதலைத் தூண்டுகிறது. தேங்காய்ப்பால், இளநீர் என்பவற்றில் காணப்படுகிறது. இயற்கையில் காணப்படும் சைற்றோகைனின் (Zeatin) சியாற்றின் ஆகும்.

இழைய வளர்ப்பில் (Tissue culture) கலப்பிரிவைத் தூண்டப் பாவிக்கப்படுகிறது.

தாவர இழையங்கள் மூப்படைதலைத் தாமதப்படுத்துகின்றது. இலைகள் தொடர்ந்தும் பச்சை நிறமாக இருக்க உதவும். தண்டுகளில் பக்க வளர்ச்சியைத் தூண்டும்.

பூக்கள் வாடுவதைத் தாமதப் படுத்தும்.

**விவசாயத்தில் சைற்றோகைனின்**

1. காய்கறிகள், பச்சை இலைக் கறி வகையை நீண்ட காலம் அப்படியே பேணுவதில் பாவிக்கப் படுகிறது.
2. பூ மரங்களில் உள்ள பூக்கள் வாடாது பேணுவதில் பாவிக் கப்படுகிறது.
3. இழையவளர்ப்பில் கலஸ் (Callus)லிருந்து வேர், தண்டு பகுதி உருவாக்கத்தைத் தூண்ட ஒட்சினுடன் சேர்த்து பாவிக்கப் படும்.

செயற்கை சைற்றொகைனின்களாக கைனிற்றின் (kinetin) வென்சையில் அடினீன் (B.A) என்பன பாவிக்கப்படுகின்றன.

பொ.அருளானந்தன்.(M.Sc)
உதவி விரிவுரையாளர்
தாவரவியல்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

### எதிலீன் (Ethylene):

இது வாயு நிலைக்குரிய ஓமோன் ஆகும். முதலுருவில் கரைந்த நிலையில் காணப்படும். இது மகரந்தச் சேர்க்கையடைந்த பூக்களிலும் பழங்களிலும் உருவாக்கப்படும். இது காய்கள் பழுப்பதைத் தூண்டும், பழங்கள், இலைகள் உதிர்வதை (வெட்டுப் படை உருவாதலை) தூண்டும். அன்னாசியில் பூத்தலைத் தூண்டும்.

**விவசாயத்தில் எதிலீன்**

ஒரே நேரத்தில் பழ அறுவடையை மேற்கொள்ள எதிலீன் பழ மரங்களுக்கு வீசப்படும். வர்த்தக ரீதியாகப் பழங்களைப் பழுக்க வைக்க எதிலீன் தெளிக்கப்படும்.

அன்னாசியில் பூத்தலைத் தூண்ட ''கல்சியம் காபைட்'' வடிவில் தெளிக்கப்படும்..

வர்த்தக ரீதியாக elhephon (எதப்போன்) எனும் வடிவில் கிடைக்கும்.

**அப்சிசிக்கமிலம் (Abscisic acid)**

இது முதிர்ந்த பச்சை இலைகளிலும், பழங்களிலும், வித்துகளிலும் வேர்முடியிலும் தொகுக்கப்படுகின்றது. உரியத்தூடாக ஏனைய பகுதிகட்குப் பரவும். இது தாவர வளர்ச்சியை நிரோதிக்கும். வித்துகளில் உறங்கு நிலையைத் தூண்டும். அரும்புகளில் உறங்கு நிலையைத் தூண்டும். இலைவாய்களை மூடச்செய்யும் (வறட்சியின் போது). வெட்டுப் படையை ஏற்படுத்தும்.

விவசாயத்தில் பழங்களுக்கும் தாவரத்துக்கும் இடையில் வெட்டுப்படை உருவாதலைத் தூண்ட பயன் படும். இதன் மூலம் ஏககால அறுவடைக்கு உதவும்.

மேற்கூறிய வளர்ச்சி ஓமோன்கள் தவிர வளர்ச்சி நிரோதிகளும் (Growth retardants) விவசாயத்தில் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக அன்ரி ஜிபரிலின் (Anti - Gibberellins), பொஸ்போன் - டி, அன்சிமிடோல், சைபோசோல் (CCC) போன்றன. இவை குறள் நிலையில் தாவரங்களை வளர்க்கப் பயன்படும். சாடிகளில் பெரிய மரங்களைக்கூட வளர்த்துகாய், கனி உருவாகச் செய்யப்படுகிறது (Bonsai culture).

விவசாயத்திலும் பூங்கனியியலிலும் செயற்கையான தாவர வளர்ச்சிப் பதார்த்தங்களை தேவையான அளவிலும் தேவையான வேளையிலும் பாவித்து நல்ல தரமான நுகர்வோரைக் கவரக்கூடிய காய், கனி, மற்றும் பூக்களையும் உருவாக்குவதுடன், கூடிய உற்பத்தியையும் அடைய முடியும்.

**இவ்வாரப் புதிர் 11**

ஒரு உணவுச்சாலையின் மேசையொன்றில் 12 பேர் அமர்ந்துள்ளனர். இவர்களில் அரைவாசிப் பேர் கழகம் Aயின் அங்கத்தவர்கள். மூன்றில் ஒரு பகுதியினர் கழகம் B இன் அங்கத்தவர்கள். அத்துடன் கால்வாசிப் பேர் இருகழகங்களினதும் அங்கத்தவர்கள். எத்தனை பேர் A,B ஆகிய இரு கழகங்களில் எந்தவொரு கழகத்தினதும் அங்கத்தவரல்லர்?

சரியான விடையைக் கூப்பனில் எழுதி 23.08.2002 இதற்கு முன்னர்

பத்திராதிபர், யாழ்.விஞ்ஞான சங்கம்(A)
மே/பா.விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

சரியான விடை எழுதும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா வழங்கப்படும்.

*புதிர் இல.09*

*கையுறைகள், காலுறைகள் சம்பந்தமான புதிருக்கான விடை*

*காலுறைகள் - 03*

*கையுறைகள் - 21*

*இப்புதிருக்குச் சரியான விடை எவரும் அனுப்பவில்லை.*

*புதிர் இல.10*

*பூமியை வலம் வரும் விமானங்கள் சம்பந்தமான புதிருக்கான விடை*

*03 விமான ங்கள்*

*சரியான விடை எழுதி அனுப்பியோரில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள.*

1.குமாரசாமி கண்ணதாசன்,
வரியப்புலம்,
சுன்னாகம்.

2. பரராஜசிங்கம் ஸர்மிலன்,
புகையிரத வீதி அருகாமை,
கோட்டைக்காடு, மல்லாகம்.

3.S.ரவீந்திரராஜா,
மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய்.

புதிர் 08,09ற்கான பரிசுப் பணத்தை அன்பளிப்புச் செய்வோர்,

**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**குறிப்பு: பரிசுப் பணத்தினை (100/=)வாரநாட்கள் தோறும்~ காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகம் யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரியில்பெற்றுக் கொள்ளலாம்.**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 11**

சரியான விடை :-........................................
முழுப்பெயர் :- ........................................
முகவரி :- ........................................
........................................
கையொப்பம் :- ........................................

# அண்ணல் காந்தியின் கஸ்தூரி திலகம்




ஆச்சிரமத்திற்கு வரும் பெண்கள் எல்லோரும் கஸ்தூரி பாவிடம் ஏதாவது கற்றுக் கொண் டுதான் போவார்கள். அவருடைய சுறு சுறுப்பையும், துப்புரவாகசமை யலறையை வைத்துக் கொள்ளும் நேர்த்தியையும் கண்டு பொறா மைப்படுவார்கள். ராஜாஜியுடன் அவருடைய பெண் லட்சுமியும் அடிக்கடி ஆச்சிரமத்திற்கு வரு வார். தந்தையைப் போலவே அறி வும் சாமர்த்தியமும் பெற்றிருந்த அவரைக் கண்டதும் கஸ்தூரி பாவுக்கு மிகவும் பிடித்துவிட்டது. தாயில்லாத பெண் என்று லட் சுமியின் மீது சற்று அதிகப் படியான அன்பும், பரிவும் காட்டி னார். லட்சுமியும் அடுப்பங்கரை அலுவல்களில் பாவுக்கு ஒத் தாசையாக இருப்பார். ஒரு நாள் கஸ்தூரிபா அந்தப் பெண்ணுக்கு குஜராத்தி ரொட்டி செய்யும் வித த்தைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தபோது தேவதாஸ் அங்கு வந்தார். உடனே நாணம் மேலிட லட்சுமி வெளியே போய் விட்டார்.

தேவதாஸ் மகிழ்ச்சி பொங்க "பா, ராஜாஜியைக் கேட்டு விட் டேன் அவர் ஒப்புக் கொண்டு விட் டார்..." என்றார். அந்தச் செய்தி கஸ்தூரிபாவுக்கு தேனைப் போல இனித்தது.

தான் பெற்றெடுத்த செல்வ ங்கள் மீது அளவற்ற அன்பைப் பொழிவது தாய்மைக்கே உரிய தனித்தன்மை. அதுவும் தன் கடைசிக் குழந்தையின் மீது எல்லை கடந்த பரிவும் பாசமும் காட்டி, மகிழ்ச்சியில் திளைப்பது தாயின் இயல்பு. அம்முறையில் தான் அன்னை கஸ்தூரி தம் முடைய கடைசிச் செல்வமான தேவதாஸ் மீது உயிரையே வைத்திருந்தார். கடல் கடந்த பூமியில், உற்றார் உறவினர் அற்ற அந்நிய நாட்டில், அந்த இருண்ட கண்டத்தில், திடீரென்று ஒரு நாள் இடுப்பு நோவு எடுக்க, உதவியற்ற நிலையில் கணவனே மருத்துவம் பார்க்க, கடவுளின் கருணையைக் குறைவொன்றும் இல்லாமல் பிறந்தவன் அன்றோ தேவதாஸ்! தம் மகன் ஆயுளோடு நோயற்ற வாழ்வு வாழ வேண் டும் என்று கஸ்தூரிபா ஆண் டவனைப் பிரார்த்திக்காத நாளே இல்லை. 'தாய் தந்தையர் மனம் நோகாமல் நடந்து கொள்ளும் அவன் உத்தம குணத்துக்கு ஏற் றபடி அவனுக்கு ஒரு நல்ல மனைவி வாய்க்க வேண்டும், நல் லறம் துலங்கும் இல்லறம் அவன் நடத்தி நான் கண்குளிரக் காண வேண்டும்' என்று கஸ்தூரிபா எந்நேரமும் கனவு கண்டு கொண் டிருப்பார். ஆகவேதான், தம்மனத் துக்குப் பிடித்த பெண் லட்சுமியை தேவதாஸ் விரும்புகிறார் என்று அறிந்த போது அவர் பேருவகை யில் மூழ்கிப் போனார்.

பண்டைய பழக்க வழக்கங்களில் மாறாத நம்பிக் கையும் பற்றும் கொண்டு, பழமை மையில் ஊறிய உள்ளம் படைத் தவராக இருந்தாலும், இரு மனம் கலந்தால் திருமணம் என்ற உண்மை நிலையை உணரும் மனப்பக்குவமும் நாகரிகப் பண்பும் பெற்றிருந்த ஒரு தாய் கஸ்தூ ரிபா. ஆனால், இந்தக் 'கலப்புத் திருமணம் நடந்தேறுமா?' என்ற ஒருசிறு ஐயம் அவரை வாட்டிக் கொண்டிருந்தது. அதனால் தான் 'ராஜாஜி ஒப்புக் கொண்டுவிட்டார்' என்று தேவதாஸ் வந்து கூறிய போது அவருடைய தாயுள்ளம் கரை காணாத களிப்பில் மிதந்தது.

திருமணத்திற்குப் பெற்றோர் சம்மதம் கிடைத்து விட்டது. ஆனால் அது உடனே நடைபெற முடியாதவாறு ஒரு தடை இருந்தது. லட்சுமிக்கு அப்போது பதி னைந்து வயது தான் நிரம்பி இரு ந்தது. பாலிய விவாகத்தை எதிர் த்துப் போராடிய காந்தியும் ராஜா ஜியும் ஐந்தாண்டுகள் பொறுக்க வேண்டும் என்று அவர்களிடம் கூறிவிட்டனர். அதற்குள், இளம் உள்ளங்களில் கரைபுரண் டோடிய அன்பின் ஆழத்தையும் கண்டு பிடித்துவிடலாம் என்றும் அவர்கள் நினைத்தார்களோ என்னவோ?

மற்றப்பிள்ளைகள் எத்த னை சௌகரியமாக இருந் தாலும், மூத்தமகன் ஹரிலா லைப் பற்றி எண்ணும் போதெல் லாம் கஸ்தூரிபாவின் பெற்ற வயிறு பெரிதும் வேதனைப்படும். "இவன் வாழ்வு இப்படியாகி விட்டதே. இதற்கொரு முடிவு கிடையாதா? அவன் மனம் மாறி, நெறி திருந்தி, நல்வாழ்வுக்குத் திரும்ப மாட் டானா? பெற்ற வயிற்றில் பால் வார்க்க மாட்டானா?" என்று ஹரிலாலைப் பற்றிய நினைவு அவர் இதயத்தில் நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண் டிருந்தது.

ஒருநாள் கோதுமையைப் புடைத்துக் கொண்டிருந்தவரின் மனம் கடந்த கால நிகழ்ச்சிகளில் லயித்திருந்தது. இன்பமும், துன் பமும் மாறி மாறிச் சுழன்று 'கண் ணா மூச்சி' விளையாடிய அந்தப் பழைய காட்சிகளைச் சுவைத்துக் கொண்டிருந்த போது. மூன்று வயது ஹரிலால் அவர் முன்வந்து நின்றான். வீட்டிலிருந்த அத்தனை பேரையும் கவலையில் ஆழ்த்தி விட்டு எங்கோ மறைந்து விட்ட அவனை, தெருவில் கண்ட அடுத்த வீட்டுக்காரர் அப்போது தான் வீட்டு க்குள் அழைத்துக் கொண்டு வந்து விட்டிருக்கிறார். கனிவும் கண்டிப்பும் கலந்த குரலில்தாய் அவனை மிரட் டுகிறாள்.

"டேய் ஹரி, இனிமேல் என்னைத் தவிக்கவிட்டுத் தனியே எங்கேயும் போக மாட்டாயே, சொல்லுடா..."

மிரண்டு போயிருந்த அந்தப் பச்சிளம் பாலகன், தாயின் வேண்டு கோளுக்கு இசைவது போல் தலையை அசைக்கிறான். மன்னி ப்புக் கோரிய மழலைச் செல் வத்தை மார்புடன் அணைத்துக் கொள்கிறாள் அன்னை.

அடுத்த கணம், அன்னை யின் கண்களில் கண்ணீர்த்திரை விழுகிறது. அந்தக் காட்சி மறை கிறது.

"ஹரி... என்னை விட்டு விட்டு எங்கேயும் போக மாட்டேன் என்று சொன்னாயே... நீ இப்போது எங்கேடா இருக்கே...? எனக்கு வய சாகிறது, என்னால் உன்னைத்தேடி அலைய முடியாது. என்னிடம் வாடா, என்கையால் ஒரு வேளை உணவு சாப்பிட்டு விட்டுப் போடா..." தாயின் நாடி நரம்புக ளெல்லாம் துடித்துக் கதறின.

மறுகணம்.

'பா' என்ற குரல் கேட்டு அன்னை நிமிர்ந்து பார்த்தார்.

ஹரிலால் எதிரில் நின்று கொண்டிருந்தார். என்ன அதிய சயம்! தாயின் புலம்பலைக்கேட்டு தெய்வமும்இரக்கம் கொள்ளுமோ?

"பா" நீங்கள் சௌக்கியமா?"

"ஏதோ இருக்கிறேன்! நீ எப்படி இருக்கே? எங்கடா சாப் பிடுகிறே?

"எனக்கு ஒரு குறையும் இல்லை பா. இத்தாருங்கள், உங் களுக்குப் பிடிக்குமே என்று பேரீச் சம்பழம் வாங்கிக் கொண்டு வந் தேன்..."

"பாபுஜிக்கு பேரிச்சம்பழம் என்றால் நிரம்பப் பிடிக்கும்..."

"எனக்கும் தெரியும். எல்லா வற்றையும் அவருக்குக் கொடுத்து விடாதீர்கள். நீங்களும் ரெண்டு சாப்பிடுங்கள்." கஸ்தூரிபாவுக்கு மகன் பேரீச்சம் பழமா கொடுத்தார்? பேரின்பத்தையே கொடுத்தார்.

அன்று மாலையே ஆச்சிரமத்தை விட்டுக் கிளம்பி விட்டார் ஹரிலால்.

"ஒரு வாரம் இருந்து விட்டுப் போவதுதானே. பாபுவும் பர்தோலியிலிருந்து வந்து விடு வார். பார்த்து விட்டுப் போக லாம்..."

" நான் உங்களைப் பார்க்கத்தான் வந் தேன்.."

"அப்படி யெல்லாம் பேசினால் எனக்குக் கோபம் வரும்.... மறு படியும் எப்போது வருவே..."

"யாருக்குத் தெரியும்...? பா, நான் காந்திலாலை என்னு டன் அழைத்துக் கொண்டு போகிறேன்."

"எதுக்காக?"

"அவனுக்கு ஒரு 'காமிரா' வேண்டுமாம்! பம்பாயில் அவனுக் குப் பிடித்ததாக ஒன்று வாங்கிக் கொடுக்கப் போகிறேன்..."

"மறுபடியும் அவனை அழைத்துக் கொண்டு வந்து இங்கேயே விட்டு விடு. இல்லா விட்டால் பாபுவுக்கு நான்தான் பதில் சொல்ல வேண்டி யிருக்கும்."

வந்தார், பார்த்தார், போய் விட்டார்! மீண்டும் எப்போதோ?

அடுத்த நான்கு ஆண்டுகள் நாட்டின் வரலாற்றில் வீர காவி யங்கள் வரையப்பட்ட வருடங்கள். தியாகத் தழும்பேறிய பாரதச் செம்மல்கள் சுதந்திரப் பெருங் கோயிலின் தலை வாசற்படியில் காத்து நின்று கடும் தவம் கிடந்த நாட்கள்.. அடிமைக் கனலில் கருகிய நெஞ்சங்கள், அண்ணல் காந்திஜியின் தண்மதி ஒளியில், அஞ்சாமல் தோளோடு தோள் நின்று தேசப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட வருட ங்கள், வரலாறு காணாத 'வரி கொடா' இயக்கமும், உலகமே கண்டறியாத 'உப்பு சத்தியாக்கிர கமும்' நடை பெற்ற பொற்காலம் அது.

அந்தப் புனிதப் போரில் கலந்து கொண்டவர்கள் புண் ணியம் பெற்றவர்கள். அதில் மடிந் தவர்கள் வீர சுவர்க்கம் எய்திய தியாகச் சுடர்கள்.

அந்த நாட்களில் வாழக் கொடுத்து வைத்தவர்கள். வணக்க த்துக்குரிய மேன்மக்கள்.

அன்பு மனைவியாக, வீரத் தாயாக வாழ்ந்த அன்னை கஸ் தூரி, தளபதியின் துணைவியாக, நாட்டின் தலைவியாக, வீராங் கனையாக வளர்ந்ததும் அந்த நான்கு ஆண்டுகளில்தான். வீட்டில் முடங்கிக் கிடந்த தாய்க்குலத்தை, தாய் நாட்டின் மானம் காக்கும் திருப்பணியில் திருப்பிவிட்டு, அறப் போரில் அண்ணலுக்கு முதல் தொண்டராக விளங்கினார் அவர்.

தண்டி கடற்கரைக்கு நடந்து சென்று, தம் கையால் உப்பெடுத்து அதை விடுதலைப் பயிருக்கு உரமாக அளித்த மகாத் மாவை, சிலை எடுத்துக் கும்பிட வேண்டிய அந்தத் தெய்வத்தை, சிறையில் அடைத்து இறுமாந்திரு ந்தனர் இங்கிலாந்தில் கோலோ ச்சிய கோமான்கள்!

அண்ணலுடன் அரும் பெரும் தலைவர்களெல்லாம் சிறை யில் அடைக்கப்பட்டதைக் கண்டு நாடே கலங்கித் தவித்தது; கொதித் தெழுந்தது. அடக்கு முறையின் அலங்கோலம் தாளாது ஆயிரம் ஆயிரம் பேர் அபயக் குரல் எழுப் பினர். அது அன்னையின் காதில் விழுந்தது. வரிகொடா இயக்கத்தின் விவரம் அவருக்குப் புரியவில்லை. உப்பு எடுப்பதன் தத்துவமும் புரிய வில்லை. 'கணவர் புரியும் பணியில் மனைவிக்கும் பொறுப்பு உண்டு' என்பது மட்டும் புரிந்தது. அவதிப் படும் மக்களுக்கு ஆறுதலாக இருப்பதுதான் தமது கடமை என்று புறப்பட்டு விட்டார். கிராமம் கிராம மாகச் சென்றார். புண்பட்ட உள்ள ங்களுக்குப் புத்துயிர் அளித்தார். அடிபட்டு, எலும்பு முறிந்து இரத்தம் கசிய மருத்துவ மனையில் படுத் திருந்தவர்களுக்கு அருமருந்தாக அமைந்தார். உள்ளம் நொந்தவர்க ளுக்கு அவருடைய அன்புத் தொண்டும், அமுதவாக்கும், குளிர் தென்றலாகவும், கங்கை நீராக வும் ஊக்கம் ஊட்டினார்.

ஊண் உறக்கம் தவிர்த்து ஊர் ஊராகச் சுற்றுவதற்குத் தகு ந்த இளமையா, வயதா? அறுப தையும் கடந்த பருவம். தலை நரைத்து, மேனி மெலிந்து, நடை தளர்ந்து ஒரு மூலையில் அமர்ந்து, நாட்டுப் பெண் பணி விடை செய்ய, பேரன் பேத்திகள் சுற்றி உட் கார்ந்து கதைகள் பேசி சுக வாழ்வு வாழ வேண்டியவர், கோடை யென் றும் மழை யென்றும் பாராமல், மரத்தடியிலும் மண் குடிசையிலும் பாதி உறக்கமும், அரைப் பட்டினியு மாய் அல்லற்பட்டுக் கொண்டிருந்த கோலத்தைக் கண்டவர்களெல் லாம் கண்ணீர் விட்டு அழுதனர்.

ஆனால் தம் நிலையை நினைத்து கஸ்தூரிபா அழவேயி ல்லை. கடமையில் ஆர்வமும், உள்ளத்தில் திண்மையும் கொண்டு அயராது உழைத்தார்.

இதற்கிடையில் அலைச்சலிலிருந்து சற்று ஓய்வு பெற்று, சிறையில் வாடும் காந்திஜி யையும் பிள்ளைகளையும் போய் பார்த்து விட்டு வருவார்.

கணவர் எரவாடா சிறையில், சபர்மதி சிறையில் மணிலாலும், ராமதாசும். பஞ்சாப் சிறையொன் றில் தேவதாஸ்! ஹரிலாலோ, எங்கோ அலைந்து கொண்டிருந் தார். "அவன் இருக்கும் இடம் கூடத் தெரியவில்லையே! அவனும் ஒரு சிறையில் இருக்கக் கூடதா? போய்ப் பார்த்து விட்டாவது வரு வேனே...!" எங்கிருந்தாலும், என்ன செய்தாலும் ஹரிலாலைப் பற்றிய நினைவு, அவர் மனத்தில்மின்னல் வெட்டுப் போல் ஒரு கணமாவது தோன்றி விட்டுத்தான் மறையும். நெஞ்சுக் குழியில் கடைசி மூச்சு முட்டி நின்று, பிரிந்து செல்லப் போகும் உயிர் ஊசலாடும் நிலை யிலும், மரணம் தழுவும் அந்த இறுதி நேரத்திலும் நெஞ்ச த்தை விட்டு அகலாத வேதனை யன்றோ, பெற்ற பிள்ளையைப் பிரிந்து வாழ்வது என்ற பெரும் துன்பம். அம்மம்மா...! பெண் உள்ளம் தாங்கக் கூடிய சோதனையா நம் அருமை அன்னைக்கு ஏற்பட்டிரு ந்தது?

ஏழு மாத சிறைவாசத்துக்குப் பின் காந்தியும் இதரத் தலைவர் களும் திடீரென்று விடுதலை செய்யப்பட்டனர். 'கெஞ்சினால் மிஞ்சுவது, மிஞ்சினால் கெஞ்சுவது' என்ற அரசியல் கொள்கையில் கைதேர்ந்த ஆங்கிலேய அரசா ங்கம், காந்தியுடன் சமரசம் பேசி, அவரை இரண்டாவது வட்ட மேசை மகாநாட்டில் கலந்து கொள்ள இங்கிலாந்துக்கு அனுப்பி வைத் தது. அவருடன் 'பா' செல்ல வில்லை. அடக்குமுறையாளருடன் அரசியல் வாதம் செய்ய கணவர் வெளிநாடு சென்றபோது, அடக்கு முறைக்கு ஆளானவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காக மனைவி பின்தங்கி விட்டார்.

ஆங்கிலேயரின் பிரித்தாளும் சூழ்ச்சியே நேரில் கண்டு திடுக் கிட்ட சத்திய காந்தி அவர்களுடன் உடன்பாடு காண்பது கடினம் என்று முடிவு செய்து தாய் நாடு திரும் பியதும் மீண்டும் கைது செய்யப் பட்டார். நாங்கள் ஆளப் பிறந்தவர் கள் அடக்கியே தீர்வோம். என்று ஆணவம் கொண்ட அதிகார வர்க கம் தடியடி தாண்டவம் புரிய நாங் கள் வாழப் பிறந்தவர்கள் அடங்க மாட்டோம். என்று விடுதலை வேட்கை கொண்ட பாரத மக்கள் வீறு கொண்டு எழுந்து அற வேள்வியில் குதித்தார்கள்.

அன்னை கஸ்தூரியையும் வெளியில் விட்டு வைக்கவில்லை. வெறி கொண்ட வெள்ளையர்.

பரணீதரன்

(தொடரும்)

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### பட்டத்தினால் என்ன பயன்

ஆசாரிய வினோபாபாவே ஒரு தடவை தான் பெற் றிருந்த உயர் கல்விக்கான பட்டச் சான்றுகளைத் தீயிலி ட்டுக் கொளுத்தினார்.

அதைக் கண்ட அவருடைய தயார் "என்ன செய்கிறாய்? அரும்பாடுபட்டு படித்துப் பெற்ற பட்டங்களை எரிக்கிறாயே? உனக்குப் புத்தி கெட்டுப் போய்விட்டதா!" என்று கடிந்து கொண்டார்.

அதைக் கேட்ட வினோபாபாவே சிரித்துக் கொண்டே "அம்மா, நான் எதிர்காலத்தில் வாழப் போவது சுதந்திர பாரதத்தில் சுதந்திர சர்க்காரில் வெள்ளை க்கார அரசாங்கம் கொடுத்த பட்டங்களுக்கு மதிப்பு இருக் காது. தவிரவும் வெறும் பட்ட ங்கள் மட்டுமே மனித வாழ்வை உயர்த்திவிடுவதி ல்லை. கடுமையான உழைப் புத்தான் வாழ்க்கையை உயர்த்தும், அதனால் வெள் ளைக்கார அரசாங்கம் கொடு த்த பட்டங்கள் சாம்பலாகிப் போனதைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம்" என்றார்.

### மார்க்ட்வைன் கண்டெடுத்த கிழிசல் தாள்

மார்க்ட்வைன் உலகப் புகழ் பெற்ற அமெரிக்க நாட்டு பிரசித்தி பெற்ற நூலாசிரியர்.

அவர் எழுத்தாளரா வதற்குத் தூண்டுகோலாக அமைந்தது ஒரு நிகழ்ச்சி.

ஒரு தடவை தெருவில் நடந்து சென்றபோது அவர் கையில் ஒரு கிழிசல் தாள் கிடைத்தது.

மார்க்ட்வைன் அதை எடுத்துப் படித்தார். அது 'ஜோன் ஆப் ஆர்க்' பற்றிய வரலாற்று நூலினின்று கிழி த்து எறியப்பட்ட தாள்.

ட்வைன் அந்தத் தாளிலுள்ள விஷயத்தைப் பார்த்தார்.

அந்தத் தாளில் ஆர்க் நாட்டின் ஜோன், ரூவான் கோட்டையில் கைதாகி அடை க்கப்பட்டிருந்த விவரம் இரு ந்தது.

அந்த விவரங்களைப் பற்றிய முழுக்கதையையும் தேடிப் பிடித்து ட்வைன் படி த்தார்.

ஜோனின் சுதந்திர வேட்கை சுதந்திரத்திற்காக அவர் செய்த தியாகம் ஆகி யவை அவர் மனத்தைக் கவர் ந்தன.

உடனே ட்வைன் ஜோனைப் பற்றி தமது மன த்தில் உருவான எண்ணங் களை வைத்து ஒரு நூலை எழுதினார்.

அதுதான் அவர் எழுதிய முதல் நூல், ஆனால் அந்த நூல் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் தான் அச்சேறியது.

விற்பனையில் அந்த நூல் அதிக சாதனைகள் புரிய வில்லை என்றாலும் அதைத் தான் மார்க்ட்வைன் தனது தலைசிறந்த படைப்பு என்று கூறுகின்றார்.

### ஞாபக மறதி

ஒரு நிருபர் பெர்னார்ட் ஷாவிடம் கேட்டார்?

"பெரிய அறிஞர்களுக் கெல்லாம் ஞாபக மறதி அதி கம் என்று கூறியது நீங்கள் தானே?

"எனக்கு ஞாபகமில் லையே!" என்றார் ஷா.

# மௌனத்தின் தேடல்கள்

## வாஞ்சை!

மனிதமனங்கள்
மரணித்த தேசத்தில்
கொஞ்சிடும் குஞ்சுகளின்
வாஞ்சைதான் என்னே?

*பூ.சாவித்திரி, இராமநாதன் நுண்கலைக்கழகம்.*

## மழலைகளே!

மண் மலர்ந்த இளமலரே
மணம் வீசும் மழலைகளே
சிறுசுகளின் உள்ளமதில்
கள்ளமில்லை கபடமில்லை
துன்பமில்லை துயரமில்லை.

*ச.பாரதி, வேலணை.*

## புரிந்து விட்டதோ!

பேச முடியாவிடினும்
அன்பைப் பரிமாற
ஒரு வழி உண்டென
புரிந்து விட்டதா
இவர்களுக்கு.

*N.J. தனன், யாழ்ப்பாணம்.*

## இனிக்கும் மொழி!

துன்பம் தெரியாது
இணையும் மழலைகள்
பேசும் மொழி
என்ன மொழி?
இன்ப மொழி
இனிக்கும் மொழி.

*மாருதி. ஆவரங்கால்.*

## ஆயத்தமாகி...!

தோழனே......!
அநாதையான என்னை
அன்புடன் நடத்தும் நீ
ஆயத்தமாகு
சமாதானத்தை வரவேற்று
பலர் அநாதையாதலைத் தடுக்க.

*L.ரஜனி, இரத்தினபுரி.*

## தங்கப் பாப்பாவே!

தத்தி தத்தி நடக்கும்
தங்கப் பாப்பாவே
எத்தனை நாள் எங்களை
விட்டுப் பிரிந்திருந்தாய்
முத்தம் ஒன்று தந்திடுவாய்
முத்து நகை புரிந்திடுவாய்.

*ஞா. சுதர்சினி, கைதடி.*

## சொல்வீரா...?

பிஞ்சுகளே! நீர
கொஞ்சுவதும் ஏனோ?
கெஞ்சுவதும் ஏனோ?
அஞ்சாது சொல்வீரா?

*எஸ். சந்தியா, யாழ். பல்கலைக்கழகம்.*

## உயர்ந்தோர்!

மனித மாண்புயர்த்தும்
மழலைச் செல்வங்கள்
இவை.........!
இவர்கள் காலத்திலெனினும்
மனிதம் துளிர் விடட்டும்.

*R.ஸ்வஸ், யாழ்ப்பாணம்.*

## மானிடனே பார்!

பாழ் பட்ட உலகத்தில்
பாவிகள் வாழ்வகத்தில் - ஒரு
பாவமும் அறியாத பிஞ்சுகள்
பழகுவதை பார் மானிடனே
இந்நிலையை பார்த்தாவது
உன் நிலையை நீ புரிந்துகொள்.

*நா.ரவி. தாவடி.*



## ஆசை!

விளம்பரங்கள் பல பார்த்து
வித விதமாய் ஷம்பூ தேய்த்து
விழுந்தது பார்
உனக்கும் எனக்கும் மொட்டை.

*செ. ஹேமலதா, யாழ்ப்பாணம்.*

## முகாரியிலிருந்து மோகனம்!

குழந்தைகள் இருவர்
முகாரி இசைக்கின்றனர்
சமாதானப் புறா பறக்கும் போதாவது
இவர்களின் வாயில்
மோகனம் தவழ்ந்திடுமா?

*க. அகிலன், பழம் வீதி.*

## மானமுள்ளோன் தமிழன்!

தலை குனிந்து வாழவா - நீ
தரணியில் தடம்பதித்தாய்
உன்னுரிமை கேட்க - நீ
ஒரு போதும் தயங்காதே
மண்ணுலகில் உயர்ந்தோன்
மானமுள்ள தமிழனென
திக்கெட்டும் பரப்பிட
திடசங்கற்பம் பூண்டிடுவாய்.

*M.மூர்த்தி, வாதரவூர்.*

## நெஞ்சில் வஞ்சமில்லை!

நெஞ்சில் ஒரு வஞ்சமில்லை
நினைவில் ஒரு கபடமில்லை
கொஞ்சும் அன்புகளே
நில்லுங்கள் ஒரு சேதி
நாளை வளர்ந்து விட்ட
பிஞ்சு உள்ளம் வெந்து விடும்
பிஞ்சுகளாய் இருங்கள்
அன்புடனே நிலைப்பீர்.

*அ.மீனா, சாவகச்சேரி.*

## சமாதானம் வருகிறது!

போரால் சிவந்த உலகைப் பாரேனென
ஒரு பிஞ்சு குனிந்திருக்க மற்றயவன்
சமாதானம் வருகின்றது பாரடா தம்பியென
அவன் தலையை நிமிர்த்துகின்றான்.

*இ.ஜெயசுதா, யாழ்.பல்கலைக்கழகம்.*

## சோகம்!

தாய் தந்தையை இழந்த சோகத்தையும்
அண்ணன் அக்கா பிரிந்த சோகத்தையும்
தாங்கள் அநாதையான சோகத்தையும்
இரு குழந்தைகள் தமக்குள் பகிர்கின்றன.

*பா.திருக்குமார், ஆனைப்பந்தி.*

## முத்துக்களே!

வெள்ளை மனத்துடனே
பிள்ளை மொழி பேசிடும்
இரட்டை முத்துக்களே
கவிச் சிற்பிகளாய்
உருவாக்கப்பட்ட
உங்களுக்குள் என்ன
இரகசியம்.

*ஜோ.ஜெஸ்ரின், கொழும்புத்துறை.*

## நம்புகின்றோம்!

இளம் தளிர்களே
உங்கள் மகிழ்வைப்
பார்த்தால் நிச்சயம்
சமாதானமும் குதூகலமாக
மலருமென நம்புகின்றோம்.

*க.பாலன், அளவெட்டி*

## போதாது அறிவு!

பாராளுமன்றத்தில் நடந்தது பற்றியா
பரம ரகசிமாய் கதைக்கிறீர்
பாலகர் நீங்களும்
பகிரங்கமாய் கதைத்தாலும்
பச்சையா நீலமா சிறப்பென அறிவதற்கு
போதாது அறிவு உமக்கு.

*சி.சிவா, முள்ளானையூர்.*

## போட்டியிலே!

குழந்தாய்!
குத்துச் சண்டைப் போட்டியிலே
மைக்டைசன் காதைக்கடித்தான்
உங்கள் பலப் பரீட்சை
எது வரை...........!

*கு.சதீஸ்குமார், A.V.வீதி.*

## குட்டி!

குட்டிப்பபா குட்டிப் பபா
என்னுடன் வாறியா
சண்டை செய்வதற்கு
என்னிலா உன்னிலா
பலம் அதிகம்
என்று பார்க்கலாம்.

*வி. உரேஸ், உசன்.*

## சோக கீதம்!

உறவுகளை இழந்து
உணர்வுகளைத் தொலைத்து
இரு சிசுக்கள் சோக கீதம்
இசைக்கின்றன
இக் கீதத்தை கேட்டிடுமா?
இச் சமூகம்
மாறிடுமா இவர்கள் நிலை.

*வி.ஶ்ரீகணன், நாவலரர் வீதி.*

## நடு நிலையாளர்!

ஐந்துகள் மகிழ்வுடன்
சிந்துகள் பாடிட
ஆறுகள் தமக்கிடை
வீறுடன் மோதிட
ஐந்தரை வியப்புடன்
இங்கதை பகர்ந்ததோ?

*பங்குனி மைந்தன்.*

## இதில் தான்!

அன்பு தேடி
அலைகின்ற ஆத்மா
அங்கே நின்று
இங்கே பாரும்
இனிமையுண்டு
இங்கும் கொஞ்சும்
இதில்த் தான்
இதிகாசமும் பிறந்ததோ?

*சி.மதியழகன், திக்கம்.*

## வாசல் படி!

தாளாட தசை ஆடும்
மகிமையின் புது ராகம்
ஜெனனத்தின் உதய கால
பூபாளம்
பாசம் எனும் பண்பு
என்னாலும் நிலைத்திருக்கும்
வசந்த காலத்தின்
வாசல் படி இது.

*தி.ஜெயராஜ், நல்லூர்.*

## ஓப்போட றெடியா?

ஒருமிக்க நல்லூரான் வீதியில் – 'ஏ'
ஒன்பது இணைத்து விட – உச்சி
ஒற்றுகின்ற இரட்டையின மழலைகள்
ஒற்றுமையாய் இன்று போல் – என்றும்
ஒத்துறவாட நாங்க றெடி – அப்பா
ஓப்போட நீங்க றெடியா?

*K.நித்தியகலா, யாழ். பல்கலைக்கழகம்.*

## ஆசீர்வாதம்!

காலத்தின் கோலத்தால்
ஆசிபெற யாரும் இன்றி
உன்னிடம் வந்திருக்கும்
பிஞ்சு உள்ளத்திற்கு
பிஞ்சுக் கையால்
ஆசீர்வதித்து
ஆறுதல் கூறுகின்றீரா?

*N.N.மாலா, அல்வாய்.*

## குறும்புதான் வேண்டாம்!

குழந்தைகளே!
குதூகலித்து கூடியிருந்து
குலைந்து போன உறவுகளை
குவலயத்தில் தேடும்
குறும்புதான் வேண்டாம் இனி
குதூகலமாக நீங்கள் வாழ
குழந்தைகளாக இருந்திடுவீர்
புதுவுலகம் மலரும் வரை.

*அருமை - அன்பு, கொற்றையூர்.*

## புனிதமான மண்!

மழலைகள் நாம்
கூடிக் குலாவி
குறும்புகள் பல செய்து
மழலைக் கீதங்கள் இசைத்திட்ட
பசுமை நிறைந்த
புண்ணிய பூமி
புனிதமான
செழுமையான மண் எம் மண்.

*ப.தர்மினி, யாழ். பல்கலைக்கழகம்.*

## நாளைய உலகம்!

இது அன்புரசலல்ல
இத்தனை வயதில்
எத்தனை ஆர்வம்
இவ்வுலகைக் காண்பதற்கு
மொட்டந் தலையில்
உலகின் வடிவைப் பார்க்கிறான்
இரத்த உறவால்
உலகையே பார்க்கிறான்.

*ஞாநி, யாழ்பல்கலைக்கழகம்.*

## கடவுளின் பிம்பங்களே!

மறுவிலா உள்ளமுடன்
மழலைகளாய் உறவாடி
மடிதனிலே தவழ்ந்தெங்கள்
மனமதிலே மகிழ்ச்சி தரும்
சிந்தைதனில் சுத்தமான
சிசுக்களே! நீங்கள்
கடவுளின் பிம்பங்களே!!

*சூரியநிலா, ஈச்சமோட்டை.*

## சிரித்திடு!

சோகங்களை மறந்து
சந்தோஷ முகத்துடன்
போட்டோவிற்குப்
போஸ் கொடுக்கின்றீர்களா?

*பாலகுமார், யாழ்ப்பாணம்.*

## ஆனந்தம் பொங்குது!

இரட்டை மழலை
முத்துக்களே நீங்கள்
கொஞ்சிக் குலவி
மகிழ்வதைப் பார்க்கும்
போது எம் மனம்
ஆனந்தம் பொங்குது.

*S.K.குணபாலன், அளவெட்டி.*

மௌனத்தின்



தேடல்கள் – 26


அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கித் தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :– 24.08.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் – 26
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்



## எழுந்து வா மானிடா!



உன் சோம்பேறிச் சட்டையை
கழற்றி எட்ட எறிந்துவிட்டு
வெளியே வா!
உழைப்பினை எடுத்து
உடுத்துக் கொள்
அழகாய் தெரிவாய்!


வாழும் காலம் சொற்பம்
அதில்
நலமாய் வாழ்வதைவிட
நல்லவனாய் வாழ
வழிதேடு



அடுக்கடுக்கான
அலங்கார வார்த்தைகளை
நம்பி நாசம் போகாதே
வாழ்க்கையை அலங்கரிக்க
உன் வனப்பான
கைகளை மட்டும்
நம்பு!

துன்பத்தைக் கண்டு நீ
துவண்டு விடாதே
துன்பம் வருவதால் தான்
மகிழ்ச்சியை நீ மதிக்கிறாய்!
இரவு வராமலிருந்தால்
பகலுக்கேது மாவிடா
மரியாதை?
இரவு இருப்பதால் தான்
நட்சத்திரமே ஜொலிக்கிறது
தெரிந்து கொள்!

விட்டுக் கொடுப்பதால் தான் புகழில்
எட்டிக் கொள்வாய் விண்ணை
வானம் மண்ணுக்காக
மழையை
விட்டுக் கொடுக்காவிடின்
ஏது உலகம்?



சொற்ப சுகங்களுக்காக
அற்ப ஆசை கொண்டு
உன் வாழ்வை
அடகுவைத்துவிடாதே
மீட்கமுடியாது
மூழ்கிவிடுவாய்!

பயந்து நீ பதுங்கியிருந்தால்
உயர் வேது உனக்கு?
வெயிலுக்குப் பயந்து
விதை
மண்ணுக்குள்
மறைந்திருந்திருந்தால்
விருட்சம்தான் ஏது?



மூடப்பழக்கத்தை
முதுகல் ஏற்றி நீ
ஓடப் பார்க்காதே
உன்
சிந்தனைப் பறவைகளை
சிறைமீட்டுப் பறக்கவிடு!
தடைகள் வந்தால்
உடைத்தெறி
உன்புத்தியால்
உயர்வு நிச்சயம்!

சுயநலத்தை
சுமந்து நீ
சுருங்கிவிடாதே
மண்ணுக்காக
மரணிக்கிறதே மழை
அதனிடம்சென்றுகேள்
சுயநலத்தை
தொலைப்பது எப்படியென!

பொறாமைத் தீயை
பொறுமை நீர் கொண்டு
அணைத்து விடு
குயிலும் மயிலும்
பொறாமை கொண்டால்
ராகமும் தாளமும் சேர்ந்து
தரும் இசைதான் ஏது?

மானிடா எழுந்துவா!!
வாழ்க்கைப் பாடகில்
கெட்ட எண்ணங்கள்
ஏறி ஓட்டை போடாது
காப்போம்!
அழகிய சிந்தனைகளை
சுமந்தபடி
சுகமாய் பயணிப்போம்
எழுந்து வா மானிடா!
நேற்றுக்கள்
தொலைந்தவைகளாக
இருக்கட்டும்
நாளைகளை நம்பி
பயணிப்போம்...!

வீ.றஞ்சி.
யாழ்.பல்கலைக்கழகம்

## நேசிக்கின்றேன்!

நான் உன்னை மட்டும்
நேசிக்க வில்லை
உன்னால்
என்னுள்
பாதிப்பை
ஏற்படுத்திய
அனைத்தையும் தான்
நேசிக்கிறேன்
நீ தான்
என்னை வஞ்சித்து விட்டாய்
அவையும்
அந்த
ஞாபகங்களும்
ஓ...
இன்றும்
என்னைத்தானே
நேசிக்கின்றன!


ஐ. சசிகலா,
யாழ்ப்பாணம்.

## வென்று காட்டுவோம்!

புலிகளின் திடீர் வரவுபோல்
என்னுள் வந்தவளே!
ஏற்றுக்கொண்டேன்
உனை
யாழ் மக்களைப் போல்
அல்லைப் பிட்டி
சோதனைச் சாவடியாய்
- உன்
அப்பன் நின்றாலும்
வெகுசன சக்திகள் போல்
நம்பிக்கைகள்
இருப்பதால்
வென்று காட்டுவோம்
நாம் காதலில்.

- கு.சிவநேசன்,
யாழ் .பல்கலைக்கழகம்.

## வரமா சாபமா..?



உன்னை நேற்றுவரை
வரமாகத்தானே
நினைத் திருந்தேன்
ஏனின்று சாபமாகிவிட்டாய்?
உயிருக்கு நிம்மதி தந்த நீ
ஏனின்று என் நிம்மதியைக் குலைக்கிறாய்
தனித்தமனது உடைந்து போனால் - அதை
ஒட்டவைக்க உனைத்தானே அழைப்பேன்
நீயே என்னை வதைத்து விட்டால்
யாரை நான் அழைப்பேன்?
பிரச்சினை வந்தால் தீர்வு உண்டு
என் தீர்வு நீயே பிரச்சினையாகிப் போனால்...?
உன்னாலே நான்பெற்ற இன்பங்கள் ஒருகோடி
உன்னாலே பெற்ற புகழ்மாலைகள் பலகோடி
இன்று ... அதே உன்னால்... மனந்தடுமாறி...
சாபங்கள் வரமாகக்கூடும் - ஆனால்
வரம் எப்படிச் சாபமாகும்?
நீ எனக்கு வரமா...? இல்லை சாபமா?
வரமாகாவிட்டாலும்பாதகமில்லை -
என் உயிரே
சாபமாக மட்டும் இராதே தாங்கமாட்டேன் நான்.

## முகவரியாவது தருவாயா..?



தரணியில் உயர்ந்த அன்பு
தாயே அது உன் அன்பு
நீ இருக்கும் வரை - நாம்
அன்புக் கடலில் தினம்
ஆனந்தக் கூத்தாடினோம் - நீ
பாதியிலே பிரிந்துவிட்டாய்
துன்பக் கடலில் தினம்
எதிர் நீச்சல் போடுகிறோம் - நாம்
நோயினால் துடித்தாலும்
பரீட்சைக்குப் படித்தாலும்
உன் உறக்கம் மறந்திடுவாய்
இப்போது நீ எமது உறக்கம்
கலைத்து விட்டு நித்தமும்

## மீட்டிப் பார்க்கின்றேன்!



வாலிபப் பருவத்தை
திரும்பிப் பார்க்கின்றேன்.
கவலை இல்லாத நாட்கள்
சின்னச் சின்ன ஆசைகள்
காதல் கனவுகள்
பேசத் துடித்த பெண்கள்
பேசி மகிழ்ந்த பெண்கள்
அடிபிடி சண்டைகள்
வீடு, வாசல், சொத்து
குழந்தைகள், மனைவி
எல்லாம் நிறைந்திருந்தும்
இதயத்திலே ஒரு வலி
பருவகாலக் காதல்
மறக்க முடியாத உருவம்
இறக்கும் வரை அழியாமல்
இதயத்தின் ஒரு மூலையில்
என்றும் நிலைத்திருக்கும்.

-ஏ. விஜயன்,
பாஷையூர்.

## காதல் தேர்தல்



## இதுவுமோர் தாய் வீடு!

ஊரெல்லாம் உறங்கிப் போனது
எங்கோ காரிருளுக்குள் ~ ஒரு
குப்பி விளக்கு எரிகிறது
இந்த குருட்டு வெளிச்சம்
ஏன்...?



இது காணாமல் போன
மகனைத் தேடி ~ கண்
விழித்திருக்கும்...

சாபமாக மட்டும் இராதே தாங்கமாட்டேன் நான்.

கா. அருந்தா,
மூடமாவடி.

இப்போது நீ எமது உறக்கம்
கலைத்து விட்டு நித்தமும்
சத்தமின்றி உறங்குகிறாயா?
உனதன்பின் பெறுமதி
இப்போதுதான் புரிகிறது தாயே
எமது நிலை அறிய
உனக்கு ஆவலில்லையா?
உனது முகவரியையாவது
எமக்குத் தந்திடுவாயா...?

R. சுலோஜனா,
பருத்தித்துறை.

## சிரிப்பு!



அன்று
நீ சிந்திய
சிரிப்பில் தான்
நான் இன்றும்
உயிர் வாழ்கிறேன்
என்று சொன்னதால்
இன்று உலகம் என்னை
பார்த்துச் சிரிக்கின்றது.

சோ.கவிநேசன். உடுப்பிட்டி.

## கவிதை!

உள்ளத்தில் எழும்
உணர்வுகளிற்கு
உயிரூட்டிப் பெறப்பட்டவை.

வாசகன்.

காதல் சின்னமாம் இதயச் சின்னமதில்
காதல் தேர்தலில் கண்கள் நான்கின்
கூட்டமைப்பில் போட்டியிட்டேன்
மோதல் வந்ததடி முடிவிற்காய்
காத்திருக்கும் காதலன் நான்
என்னை கலங்கவைக்காதே - இல்லையேல்
சாதல் அதை தவிர எனக்கு வேறு வழி இல்லையடி
காதல் தேர்தலில் சுயேட்சையாய்
போட்டியிடும் என்னை வெற்றி பெறச்செய்வாயா?
உன் ஒரே ஒரு விருப்பு வாக்கில்தானடி
என் வாழ்வே இருக்கிறது...

காதல் தேர்தலில் நான் வெற்றி பெற்றால்
உன் வாழ்வில் தடைகள் பல நீங்குமடி
புதிய பாதைகள் திறக்குமடி
பெற்றோரின் சம்மதத்துடன் (திருமண)
பேச்சு வார்த்தை நடக்குமடி
என் காதல் வாழ்வின் ஏகப் பிரதிநிதியாய் உன்னைத் தவிர
எவரையும் நான் ஏற்கமாட்டேன்.

வேல்நந்தன்,யாழ்.பல்கலைக்கழகம்.

மகனைத் தேடி - கண்
விழித்திருக்கும்...
தாய் வீடு!

கை.சசிகலா
கொக்குவில் மேற்கு.

## மௌன முகாரிகள்!

இதயம் வெடிக்கிறது - இருந்தும்
அடித்துக் கதறவும் விடாமல்
நாலாபக்கமும் மௌனப்பூட்டுக்கள்
மரணிக்க முடியாமல்
வாழவும் இயலாமல்
மரத்துப் போனது மனது - இனி
மௌன முகாரியில் தோல்வியின்
பாடலது கரைந்துருகும்.

பூ.சாவித்திரி,
இராமநாதன்
நுண்கலைக்கழகம்.


## வால்களுக்கு மட்டும்!



அன்று அமாவாசை இருட்டில்
அவதிப்பட்டதும் இதே இடங்கள் தான்
ஒரு தீக்குச்சி உரசி ஓர் விநாடி
வெளிச்சம் தர யாரும் இல்லை
இப்போது
சூரியன் வந்து உச்சிப் பொழுதானது
பந்தங்களோடு எத்தனை கைகள்
அந்த அமாவாசை ராத்திரிகளில்
அடைவு வைக்கப்பட்டிருந்தவையா?
கண்கள் இழந்து குருடாகி நின்றது
அந்த நாள்
ஒரு `விரலைப்பிடித்து
கூட்டிச் செல்ல ஒருவரும் இல்லை
இன்று இரண்டு கண்களும் சரியான பின்
கைகள் பல வந்து கட்டித் தழுவுகின்றது
சுருக்கமாய் சொன்னால்
இன்று கல்லறைக்கு வெள்ளையும்
காகிதங்களில் படங்களையும்
காதுகள் செவிடாக கீதங்களையும்
போகும் உணர்வுள்ள உள்ளங்கள்
இரண்டு வருடத்திற்கு முன் எங்கே
போயிருந்தன?
இங்கே தானே இருந்தன.
இது தலைகளுக்காக வல்ல
வால்களுக்கே.

தென் சீலன்

## இதயங்கள் அழுகின்றன!



இயதங்கள் அழுகின்றன ஏன்?
நிம்மதியைத் தொலைத்து விட்டா?
நிஜமான வாழ்வை எண்ணி
நிழல்களை சேர்த்துக் கொண்டதால்
நிம்மதியை இழந்திங்கு
இதயங்கள் அழுகின்றன.

பூக்களில் வண்டுகள் தேனெடுக்க - வரும்
நேரமதில் பூக்கள் உதிர்ந்தன
புயல் காற்றின் கொடுமையால்
உறவிழந்த பறவைகள்
ஊரிழந்த உறவுகள்
உறவுகளை தொலைத்து விட்டு
ஊமையான உயிர்களின்
இதயங்கள் அழுகின்றன.

M.சிவசோதி,
கரவெட்டி.

## நானும்!

வார்த்தைகளை
விளையாட்டாக எழுதி
வாசித்துக் காட்டினேன்
ஒருவருக்கும் அர்த்தம்
புரியவில்லையாம்
"நன்றி கடவுளுக்கு"
நானும் கவிஞன்
ஆகிவிட்டேன்.

- ராகுல் -

# சுமைகள்

சிறுகதை

அன்று காலை வானம் மப்பும் மந்தாரமுமாக காணப் பட்டது. ம்... என்ற மூச்சுடன் எழுந்து வானத்தைப் பார்த்தான். அவன் மனம் போலவே வானமும் கனமாகவே காணப்பட்டது. இன்றைய பொழுது எவ்வாறு கழியப் போகுதோ என்ற ஏக்கத்துடன் கிணற்றடியை நோக்கி நடந்தான் ஆனந். ஆனந் ஒரு நடுத்தரகக் குடும்பத்தைச் சேர்ந்தவன். யாழ்ப்பாணத்தில் பிரதானமான அலுவலகம் ஒன்றில் எழுதுநராகக் கடமை புரிபவன். அவன் மற்றவர்களுடன் எப்போதுமே கலகலப்பாகப் பழகும் சுபாவமுடையவன். அவன் இருக்கும் இடம் எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். ஆனால் இப்போது அவன் முன்னர் போல் இல்லாது மாறுபட்டவனாகக் காணப்பட்டான். இதற்குக் காரணம் அவனது அலுவலகத்தில் நடைபெற்ற ஓர் சம்பவம் தான்.

1997ஆம் ஆண்டு மார்கழி மாதம் 27ம் திகதி அந்தப் பிரதான அலுவலகத்தில் அமைய எழுதுநராகக் கடமை புரிவதற்கான நியமனம் கிடைத்தது. அவன் வாழ்வில் இனி ஒளி வீசும் என எண்ணிக் கொண்டான். ஆனந் வாழ்க்கைப் பயணம் என்னும் ஓடம் தாளாமல் சென்று கொண்டிருந்தது.

ஒரு வருடம் ஓடி மறைந்தது. ஒருநாள் ''தம்பி உங்கள் மூன்று பேரையும் சிறிதுகாலம் இடைநிறுத்தியிருப்பதாகப் புனர்வாழ்வு அமைச்சிடமிருந்து கடிதம் வந்துள்ளது. இனி நீங்க்ள் வேலைக்கு வரத்தேவையில்லை.'' என்று பதிவாளர் கூறி முடித்த போதே ஆனந்தின் மனம் அலைகடலில் அகப்பட்ட துரும்பானது. அவனுடன் பணிபுரிந்தவர்கள் இருவரும் தங்களின் நிலையை உணர்ந்து வேதனை கொண்டாலும் ஆனந்தைப் பாதித்தது போல அவர்களைப் பாதிக்கவில்லை. இதற்குக் காரணம் ஆனந்தின் குடும்ப நிலைதான்.

ஆனந் அன்றிலிருந்து ஊன் உறக்கமின்றித் தவித்தான். ஏன் ஆனந் வேலைக்குப் போகவில்லையா? என சமூகத்தில் பலரின் கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிப்பது என்பது மிகவும் கஷ்டமாகவேயிருந்து. நாட்கள் விரைந்தது. அனைத்துக் கட்சிகளின் அலுவலகங்களை நோக்கி நடந்தான். எங்கு சென்றும் இழந்தவேலை மீளக் கிடைப்பதாக வில்லை.

நீண்ட நாள் இடைவெளியின் பின்னர் அவன் பணிபுரிந்த அலுவலகத்தின் கிளை அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ள பெரியவரைச் சந்தித்து தனது நிலைமையைத் தெளிவாக விளக்கினான் அல்ல தனது மனச் சுமையை அவர் முன் கொட்டினான். அவர் அவனுடைய நிலையைக் கருத்திற் கொண்டு ''சரி கவலைப்படாதீர் என்னால் முடியுமானவரை முயற்சிக்கிறேன்.'' என்று கூறினார். இவ்வளவு நாளாக பலர் முன் தனது நிலையைக் கூறிய போது யாரிடமும் கிடைக்காத ஓர் ஆறுதல் அவரிடம் பெற்றுக்



கொண்ட நிறைவுடன் வீடு திரும்பினான் ஆனந்.

ஆண்டவனின் கிருபை ஆனந்தின் மீது விழுந்தது. சாதாரண அலுவலக ஊழியனாக மீண்டும் நியமனம் கிடைத்தது. கீழிருந்து பதவி உயர்வு பெற்றுச் செல்வது தான் யதார்த்தம். ஆனால் ஆனந்தின் வாழ்வில் மேலிருந்து கீழ் நோக்கிய நிலை. சாதாரண அலுவலக ஊழியனாகக் கடமை புரிய மனம் இடம் கொடுக்கவில்லை. ஆனாலும் குடும்ப நிலை காரணமாக அதனை மறுக்கவும் முடியவில்லை. எல்லாவற்றையும் எண்ணியவாறு இருக்கையில் அமர்ந்து கொண்டு வானொலியை முறுக்கினான்.

''காலம் ஒருநாள் மாறும்
நம் கவலைகள் யாவும் தீரும்...
வந்ததை எண்ணிச் சிரிக்கின்றேன்...
வருவதை எண்ணி அழுகின்றேன்.''

என்ற பாடல் அவனது உள்ளத்துக்கு மிகவும் இனிமையாக இருந்தது.

ஆனந் கடமையை ஏற்று மீண்டும் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தான். மனதில் சுமையுடன் அலுவலகத்திற்கு மட்டுமல்ல தன் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்துடன் பட்டப் படிப்பையும் மேற் கொண்டான். அதில் வெற்றியும் பெற்றான்.

ஒரு நாள் ''உங்களில் யாருக்கும் ஏ/எல் ரிசல்ட் இருந்தால் கிளார்க் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்'' என்றார் அலுவலகப் பொறுப்பதிகாரி. அன்று வெளி வந்திருந்த சுற்று நிருபத்தையும் காட்டினார். சுற்று நிருபத்தை வாங்கிப் பார்த்த ஆனந் மீண்டும் விழிப்படைந்தான். விண்ணப்பித்தான். காலங்கள் கரைந்தோடின. கடவுள் கட்டளை மீண்டும் இழந்துபோனஎழுதுநர் பதவி கிடைத்தது.

ஆனந்தின் முகத்தில்மீண்டும்புன்னகை. அவனுக்குஅலுவலகத்தில் பதிவேட்டறைப் பொறுப்புக் கையளிக்கப்பட்டு.

ஆனந் அலுவலகத்திற்குச் செல்வதற்காக பஸ் நிலையத்தில் பஸ்ஸிற்காகக் காத்திருந்தான். ஆடியசைந்து கொண்டுவந்த பஸ் தரித்து நின்றதும் நான் முந்தி நீ முந்தி என்று எல்லோரும் ஏறிக் கொண்டனர். ஆனந்தும் ஏறி ஓர் ஓரமாக நின்றான். ''அண்ணை உந்தப் பாட்டுப் பெட்டியை ஒருக் காப் போட்டு விடுங்கோ' என்று யாரோ கூறும் குரல் கேட்டது. **''உனக்கும் எனக்கும் 'வாழ்க்கை இருக்கு வாழ்ந்து காட்டடா இருக்கும் வரை சிரித்து சிரித்து வாழும் நாளடா..''** என்ற பாடல் ஒலித்தது. இப்பாடல் கனமான ஆனந்தின் மனதுக்கு உறுதியாக இருந்தது. பாடல் வரிகளில் மூழ்கியிருந்த ஆனந் ''எல்லோரும் காசை எடுத்துக் கொண்டு வாங்கோ'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான். பஸ் யாழ் நகரை அடைந்ததை உணர்ந்தவன் அவசர அவசரமாக பஸ்ஸிலிருந்து இறங்கி அலுவலகத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவனது மனவேகத்துடன் போட்டி போட்டுக் கொண்டு அவனால் நடக்க முடியவில்லை.

நகரம் வாகனங்களினாலும், புதிய பல முகங்களினாலும், புதிய பல பொருட்களினாலும் நிறைந்து காணப்பட்டது. பார்ப்பதற்கு நகரம் அழகாக இருந்தாலும் அவற்றை எல்லாம் பார்த்து இரசிக்கும் ஆனந்தின்மனநிலை தற்போது இல்லை.

அவனது பொறுப்பிலிருந்து மிகவும் முக்கியம் வாய்ந்த அதாவது தொலைந்தால் பிரதி ஒன்று எடுக்கும் நிலையில்லாத நகல் என்ற சொல்லுக்கே இடமில்லாத இன்று யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் உள்ள ஓர் பிரச்சினை பற்றி விடயங்கள் நிறைந்த அந்த பல ஆவணங்களைக் கொண்ட பைல் அவன் பொறுப்பிலிருந்து அறையிலிருந்து களவாடப்பட்டதே அவனது அந்த நிலைக்குக் காரணமாகவிருந்தது.

அவன் தனது நடையை விரைவுபடுத்தினான். அலுவலகம் வந்ததும் காண்பவர்கள் யாவரும் ''ஆனந் என்ன மாதிரி நேற்றைய விடயம் எங்காவது? யாரையாவது? ஏதும் கேட்டீர்களா? உங்களுக்கு யார் மீதும் சந்தேகமில்லையா? என்ற அடுக்கான பல கேள்விகளுக்கெல்லாம் பதில் அளித்துக் கொண்டு தனக்குரிய கதிரையில் அமர்ந்தான்.

கிறிங்... என்று மணி அடித்தது. ''ஆனந் உங்களை பதிவாளர் வரட்டாம்'' என்று அலுவலக ஊழியர் ஒருவர் கூற பயத்துடன் அவரின் அறையை அண்மித்தான் ஆனந். ''இப்ப' என்ன செய்யப் போகின்றீர், நான் அப்போதே எல்லாம் சொன்னனான் அவதானமாக இருக்க வேணும் என்று நான் உதுக்கு ஒன்றும் செய்ய இயலாது நீர் தான் எல்லாவற்றிற்கும்

அ.அன்பழகன்

பொறுப்பு. ஐயா கேட்டால் நீர் தான் பதில் சொல்ல வேண்டும்'' என்ற வார்த்தைகளைக் கேட்டதும் கார் கால மேகமாக அவன் முகம் மாறியது. ஆனால் மழைத்தூறல் போல கண்ணீர் மட்டும் வரவில்லை. எல்லாவற்றிற்கும் மௌனமாக தலையசைத்தான்.

''ஆனந் வாடா சாப்பிட... ஆனந் வாங்கோ சப்பிடலாம்'' என வழமைபோல் எல்லோரும் அழைத்தார்கள்.ஆனால் அவனால் வழமை போல் எந்தக் காரியத்தையும் செய்து கொள்ள முடியவில்லை. நீங்கள் சாப்பிடுங்கள் எனக்கு மன நிலைசரியில்லை என்று கூறிவிட்டு மேசை மீது தலையை வைத்துக் கொண்டு சிந்தித்தான்.

''ஆனந்... இது யாரோ திட்டமிட்டுத்தான் செய்திருக்கினம். உங்களின்ர வேலைக்குக் கொள்ளி வைக்க பாக்கினம் நீங்கள் ஐயா விடம் நடந்ததைச் சொல்லுங்கோ'' என்று கூறிவிட்டு தனது பணியை செய்ய முயற்சித்தான் சுரேஸ்.

எதுவுமே செய்ய முடியாது பாரம் நிறைந்த தலையை மேசை மீது வைத்துக்கொண்டான்.

மறுநாள் பல முகங்கள் ஆனந்தைக் கண்டும் காணாதவர்கள் போல் விலகிச் செல்ல ஆரம்பித்தனர். நேற்றுவரை ஒட்டி உறவாடி ஒன்றாக உண்டு களித்தவர்கள் ஆனந்துக்கு வரும் பாதிப்பு தங்களையும் பாதிக்கும் என எண்ணி விலகிச் செல்கின்றார்கள். இன்பத்தில் பங்கு கொள்ளும் மனிதர்கள் துன்பத்திலும் பங்கு கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்பதை உணர்ந்து கொண்டான் ஆனந். அலுவலகத்தில் ஒரு நிமிடமும் கழிவது ஒரு வருடம் கழிவது போல் இருந்தது.

''ஆனந்... ஆனந்'' என்று கதைத்தவர்கள் இன்று ஆனந்தமே இல்லாத ஆனந்தின் முகத்தைக் கண்டு நகைத்தனர். ''உவருக்கு வரத்தான் வேண்டும். இவர் தான் ஏதும் காசு கீசு வாங்கிக் கொண்டு ஏதாவது செய்தாரோ'' என்று நாக்கைப் பலவாறு புரட்டிப் புரட்டி பேசினார்கள். ஒவ்வொருவருடைய கதையும் ஆனந்தின் மனதில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் இருந்தது.

வானத்தில் இருள் திரண்டது. இடி இடித்தது. மின்னல் மின்னியது. ஆனந் தனது எதிர்காலம் சூனியமாக மாறப் போகின்றதே என்ற சிந்தனையுடன் கல்லாக அமர்ந்திருந்தான். ''ஆனந்... ஆனந் என்று அவசர அவரசமாக யாரோ அழைக்கும் குரல் கேட்டு நிமிர்ந்தான். ''உங்களை உடன் பெரியஐயா வரட்டாம்'' என்று கூறினான் ராஜ். திகைப்படைந்த ஆனந் மனதில் சுமையுடன் நான் செய்யாத தவறுக்குத் தண்டனை அனுபவிக்கப் போகின்றேனே என மனம் நொந்தவாறு வேதனையுடன் தூக்கு மேடைக் கைதி போல் பெரியவரின் அறையை அடைந்தான்.

''தம்பி என்ன நடந்தது? அந்தப் பைலை எங்கே வைத்தீர்? நன்றாக எல்லா இடமும் மீண்டும் தேடினீரா? இது ஒரு பெரிய பிரச்சினையாக வரப்போகின்றது'' என அவர் கூறிக் கொண்டு சென்ற போது ஆனந் மௌனமே உருவாகக் காட்சியளித்தான். சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதிக்குப் பின் புயல் அடிக்கும் என எண்ணினான் ஆனந். ''சரி நீர் ஒன்றுக்கும் யோசியாதீர். என்னால் இயன்றவரை உம்மைப் பாதுகாப்பேன் ஒன்றுக்கும் பயப்படாமல் இரும்'' என்றார் பெரியவர். அப் போது ஆனந் பெரியவர்கள் என்றும் பெரியவர்கள் தான் என எண்ணிக்கொண்டான். வானம் தன் சுமையை இறக்க மழை பொழிந்தது. ஆனந்தின் கண்கள் கண்ணீர் பொழிந்தது.

# மதுவின் கதை

மாலை வேளையாகிக் கொண்டிருந்தது. அரசடிப் பிள்ளையார் கோவில் பூசையை முடித்துக் கொண்டு குருக்களும் வீட்டை போய் விட்டார். மேய்ச்சலுக்குப் போன மாடுகளும் வீடு திரும்பிக் கொண்டிருந்தன. சில மாடுகள் முன்னாலிருந்த குளத்தில் உள்ள தப்புத் தண்ணீரை இறங்கிக் குடித்து விட்டு வந்தன. கோவிலுக்கு முன்னாலிருந்த அறுவடையான வயல் வெளியில் தான் அவை புல் மேய்ந்தன. பெயரளவில் தான் புல்வெளி கோடைகால மழை நீண்ட நாட்கள் இல்லாததனால் புல்லெல்லாம் காய்ந்து விட்டன.

கோவிலின் முன் மண்டபத்தில் சிலர் காற்று வாங்கிக் கொண்டிருந்தனர். அங்கே தீராந்தியில் கொழுவிவிடப்பட்ட கம்பியில் ஒரு லாம்பு விடி விளக்கிற்காக எரிய விடப்பட்டிருந்தது. காற்றின் விசைக்கேற்ப லாம்பும் அசைந்தாடிக் கொண்டிருந்தது.

மண்டபத்தின் ஒரு பகுதியில் ஒதுக்குப் புறமாக சிவகுமாரனும் வேறு மூவரும் சீட்டாடிக் கொண்டிருந்தனர். பந்தயம் கட்டி அவர்கள் சீட்டாடுவதில்லை. பொழுதுபோக்காக சீட்டாடுவதால் அயலில் உள்ளோர் கோவில் வாசலில் நடந்தாலும் இதை அதிகம் பொருட்படுத்துவதில்லை. இருந்தாலும் இது ஒரு தவறான செயல்தான்.

''சரி மச்சான் நான் போறன்'' என்று சொல்லிக் கொண்டு சிவா எழும்பினான். ''நில்மச்சான், இடையில் ஏன் முறிக்கிறாய், இந்தக் கடைசி ஆட்டத்தை முடிச்சுப் போட்டுப் போவன்'' என்றான் ஒருவன். மற்ற இருவரும் கையில் சீட்டை வைத்துச் சரிப்படுத்திக் கொண்டிருந்தனர். பாலு கூறியதை சிவா கேட்காமல், பொக்கற்றினுள் கையை விட்டு பீடியையும் நெருப்புப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு எழும்பி சைக்கிளை நோக்கி நடந்தான். கோவில் வாசலில் நின்று ஒரு தரம் பிள்ளையாரை வணங்கி விட்டு, சைக்கிளையெடுத்துக் கொண்டு பீடியை வாயில் வைத்து, நெருப்பெட்டியையெடுத்து பீடியைப் பற்றவாயிலே பீடிப்புகை படர சைக்கிளில்ஏறிய சிவா நேராகக் கள்ளுத் தவறணைக்குப் போய் இருந்த அரைவெறியுடன் இன்னும் சிறிது ஊத்திப் புதுப்பித்துக் கொண்டு வீடு நோக்கி விரைந்தான்.

''வேலியம்பலம், படலை சங்கடம்'' என்று தன்னுள் புறுபுறுத்துக் கொண்டு, படலையில் சைக்கிளை விட்டிறங்கி, சைக்கிளை உருட்டிக் கொண்டு உள்ளே போனான். சைக்கிளை உட்புறமாக வேலியுடன் சாத்தி விட்டு தள்ளாடிக் கொண்டு வந்தான்.

மடியிலே ஒருவயதுக் குழந்தை படுத்திருக்க, மற்றொரு நாலுவயதுப்பெண் பிள்ளைக்கு தலையிலுள்ள பேனைப் பார்த்துக் கொண்டு முற்றத்திலே மாலா இருந்தாள். மாலாதான் சிவாவின் மனைவி.

சிவா கப்பலில் வரும்பொருட்களை லொறிக்கு ஏற்றியிறக்கும் வேலை செய்பவன். காபரில் வேலையென்று சொல்வார்கள். சுழற்சி முறையில் தான் வேலை கிடைக்கும். வேலை மிகவும் கஷ்டமானாலும் நல்ல சம்பளம் கிடைக்கும், என்பதனால் பலபேரும் போகமுடியாத நிலை ஏற்படும் உழைக்கும் பணத்தில் பெரும் பகுதியை சிவா குடித்துக் கும்மாளம் போட்டுக் கரைத்து விடுவான். வெறி கூடியவேளைகளில் தெருவோரம் மயங்கி விழுந்து கிடந்து, பின் நினைவு திரும்பியபின் தான் நடுச்சாமத்தில் வீடு போவான். அந்த நேரங்களில் சில நண்பாகள். அவனது பொக்கற்றில் இருப்பதை சுருட்டிவிடுவதும் உண்டு. மறுநாள் தனது பணம் முழுவதையும் மாலாதான் எடுத்துப் போட்டாள் என்று சண்டை போடுவான். எப்போதாவது நல்ல குணம் வந்தால் மட்டும் வீட்டிற்குத் தேவையான, மாலா பிள்ளைகள் கேட்ட பொருட்களை வேண்டி வருவான். சில தினங்கள் வீடு சந்தோஷமாக இருக்கும்.

பத்து வருடங்களுக்கு முன், தான் காதலிச்ச மாலா என்ற இந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். இருபகுதியினரினதும் பெற்றோரின் முழு விரும்பமின்றிக் கல்யாணம் செய்து கொண்டதனால் இவர்களின் பெற்றோர்கள் நேரடியாக இவர்களுக்கு உதவுவதில்லை. மாலாவுக்குத் திருமணம் நடக்கும் போது வயது இருபத்தொன்று, சிவாவுக்கு முப்பந்தைந்தாகி விட்டது. இந்த வயது வேறுபாடுதான் பெற்றோரின் வெறுப்பிற்குக் காரணமாகும். பிரசவம் நடந்த போது மட்டும் மாலாவின் தாய் உதவினாள்.

மாலாவின் பெற்றோர் இப்போது வன்னியில் அவர்களின் வீட்டில்தான் மாலாவும், சிவாவும் குடித்தனம் நடத்துகின்றனர்.

''மாலா'' ''மாலா'' பசிக்குது சோத்தைப்போடு என்று கூறிக் கொண்டு முன்னாலிருந்த வாளிக்குள் இருந்த தண்ணீரில் கையை வைத்துக் கழுவினான். பையன் கெட்டாலும் ஆசாரம் ஏனோ கெடவில்லை என்பது போலிருந்தது.

''உழைச்சுப் போட்டதிறத்திலை அவருக்குப்பசிவேறை, குழந்தைக்குப் பால்மா இல்லை, சீனி இல்லை'' என்று புறுபுறுத்தாள் மாலா.

''என்னடி, என்னடி.... சொல்லுகிறாய்''... என்றவன் அந்த வாளியைத் தூக்கி தண்ணீர் முழுவதையும் அவளுக்கு அபிடேகம் பண்ணினான்.

மடியிற் கிடந்தபிள்ளையை அதிகம் நனையாதபடி மாலா தூக்கிப்பிடித்துக் கொண்டாள். பக்கத்திலிருந்த மூத்தபிள்ளை விறுவென எழுந்து குழந்தையை வாங்கிக் கொண்டு அப்பால் போய் விட்டாள். இந்தப் பிஞ்சு உள்ளத்துக்கு இதுவெல்லாம் பழகிப் போய் விட்டது. குழந்தை வீறிட்டலறிக் கொண்டிருந்தது. குழந்தையைத் தூக்கியபடி வீட்டு விறாந்தையில் போய் உட்கார்ந்து கொண்டாள் சிறுமி.

''ஊத்து, நல்லாஊத்து, உதுதான் சரி, உன்ன நம்பி கழுத்தை நீட்டியதற்கு இது வேணும்,'' என்றாள் மாலா.

''என்னடி'' என்றவன் வாளியை வீசி விட்டு மாலாவின் தலைமயிரைப் பிடித்துக் கொண்டான். காலாலும், கையாலும் உதையும் அடியும் விழுந்தது. பிள்ளைகளிரண்டும் சத்தம் போட்டுக் குளறியதுகள்.

அடித்து முடித்து விட்டுச் சிவா மூத்த மகளைக் கூப்பிட்டான். ''ஏன்ரி வசந்தி விளக்கைக் கொழுத்தேல்லை'' என்று கூறியபடி மாலாவை விட்டு விட்டு நெருப்புக் குச்சியை எடுத்துத் தட்டியபடி விளக்கை எடுத்தான். அதுவும் வெறியில் கை தவறி விழுந்தது.

சிவா கையை விட்டவுடன் மாலா விருக்கென எழுந்து'' நான் செத்துப் போறேன், '' என்று கூறிக் கொண்டே கிணற்றடியைநோக்கி ஓடினாள். விளக்கும் கீழே விழவும் சிவாவும் தடுமாறி நிலத்தில் விழுந்தான். கிடந்தபடி ''போடிபோ கெதியாய்ச் செத்துத் தொலை'' என்று கத்தினான்.

மாலா போய் ஒரு நிமிசம் கழியகிணற்றிற்குள்ளே ''தொமார்'' என்ற சத்தம் கேட்டது.

விழுந்தவனுக்கு மண்ணிலிருந்த ஈரமும்பட, ''சாகப்போகிறேன்'' என்று ஓடிய மாலா, கிணற்றடியிலிருந்து ''தொப்'' என்று விழுந்த சத்தமும் சிவாவை ஒரு நொடியில வெறி போதையை மறைக்கச் செய்தன. ''ஐயோ மாலா'' என்று குளறினான்.

மனதிலே பலவிதமான எண்ணங்கள் தோன்றின. மெதுவாக எழுந்து உடுப்பைச் சரிசெய்து கொண்டு, கிணற்றடியை நோக்கிப் போனான். மெதுவாகப் போய் கிணற்றைச் சுத்திச் சுத்தி கிணற்றினுள்ளே பார்த்தான். ''மாலா'', ''மாலா'' என்று கூப்பிட்டுப் பார்த்தான். பதில் இல்லை ஓரிரு நட்சத்திரங்களின் பிம்பங்கள் மட்டும் அவன் கண்களுக்குத் தோன்றின. வேறெவும் அவன் கண்களுக்குத் தெரியவில்லை ''ஐயோ மோசம் போனேனே'' என்று மனதுக்குள் எண்ணியபடி கிணற்றடியால் மெதுவாகத் திரும்பினான். நேரம் போய்க்கொண்டிருந்தது.

எல்லாப் பக்கமும் இருட்டி விட்டது. சில்வண்டுகளும் இரையத்தொடங்கி விட்டன. அளவுக்கு அதிகமான பயம் அவன் மனதிலே குடிகொண்டது. ''நாளைக் காலையில் மரணவிசாரணை, பிரேதபரிசோதனை, காரணம் நான் தான், என்னால்தான் மாலா தற்கொலை செய்து கொண்டாள். நான்தான் அடித்துப் போட்டுக் கிணற்றில் போட்டதாக ஊர்பேசும். இவ்வளவும் நடக்க வேலியால் புதினம் பார்த்திருப்பார்கள் அயல்வீட்டினர்'' என்று எண்ணியபடி வீட்டிற்கு வந்தான்.

மாருதி

அக்கம்பக்கத்து வீட்டாரும் இந்தக் குடிகாரனின்சண்டையில் தலையிடுவதில்லை. ''இப்போ அடிபடுவார்கள் நாளைக்கு ஒன்றாக இருப்பார்கள்'' என்று நினைத்துக் கொண்டு மாலா விடம் நாளைக்கு எல்லாத்தையும் அறியலாம் என்று கூறியபடி அன்றும் இருந்து விட்டார்கள்.

பசிக்களையாலும் அழுதகளைப்பாலும் பிள்ளைகளிரண்டும் இருந்த இடத்திலேயே ஒன்றையொன்று அணைத்தபடி படுத்துக் கிடந்தன. கள்ளமில்லாத இளசுகள். சிவாவின் மனதிலே ஒரு உறுதி இப்போது அவனது போதையெல்லாமஅற்றுப் போயி

(15ஆம் பக்கம் பார்க்கவும்)




## ஊசி போல உடம்பு இருந்தால்...!



உங்கள் எடை கூடிவிட்டதா?

“எப்படிக் குறைப்பது? எந்த முறையைப் பின்பற்றுவது?”, இப்படி யோசனையிலேயே நேரம் வீணாகிக் கொண்டு இருக்கிறதா?

இதோ, உங்களுக்காக எடையைக் குறைக்கும் ஏழு எளிய வழிகள் :–

1. உடற்பயிற்சி : வாரம் 5 முறையாவது தவறாமல் செய்ய வேண்டும். உடற்பயிற்சியால் கொழுப்பு குறைகிறது. இதனால் எடை குறைவதோடு, பல நோய் களிலிருந்தும் பாதுகாப்புக் கிடைக்கிறது.

2. பசித்தால் மட்டுமே சாப்பிடவும் :– “அப்படித்தான் செய்கிறேன்” என்று கூறுவ தற்கு, முன் யோசிக்கவும். எத்தனை முறை வயிறு நிறைய சாப்பிட்ட பிறகு ஐஸ்கிரீம், இனிப்பு என்று சாப்பிட்டிருப் பீர்கள்? எடையை மேலும் கூட்டவே இது உதவுகிறது!

3. எதைச் சாப்பிடலாம் என்று தெரிந்து கொள்ளவும் : “நான் 4 பிஸ்கெட்டும் ஒரு கிளாஸ் ஜூஸ் மட்டும் குடிச்சேன்” என்று நீங்கள் சொல்லலாம். நீங்கள் சாப்பிட்ட பிஸ்கெட்டு களிலும் ஜூஸிலும் எத்தனை கலோரிகள் இருந்தன என்று தெரியுமா? எதைச் சாப்பிட்டால் நல்லது என்பதை அறிந்துக் கொள்வது மிகவும் முக்கியம்.

4. தண்ணீர் தண்ணீர்:– ஒவ் வொரு நாளும் குறைந்தபட்சம் 8 கிளாஸ் தண்ணீர் குடிக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முன் தண்ணீர் குடிப்பதால் சாப்பிடும் அளவும் குறையும். அத்தோடு உடலில் உள்ள நச்சுப் பொருட்களையும் இது சுத்தம் செய்கிறது.

5. உட்கொள்ளும் அளவு : மதியம் அதிகமாக சாப்பிட்டுவிட்டால், இரவில் உட்கொள்ளும் அளவைக் குறைக்கவும். காலையில் சாப்பிட் டதைவிட, மதியம் சற்றுக் குறை வாகவும், இரவில் அதைவிடக் குறைவாகவும் சாப்பிடுவது நல்லது.

6. ரிலாக்ஸ் ப்ளீஸ் : தினமும் நாம் சந்திக்கும் பிரச்சனைகள், சில சமயங்களில் நம்மை அளவுக்கு அதிகமாக சாப்பிடத் தூண்டலாம். அதனால் தினமும் 15 நிமிடங்கள் ரிலாக்ஸ் செய்ய எடுத்துக் கொள் ளவும்.

*இதோ உங்களுக்காக சில டிப்ஸ்.*

7. “நான் குண்டு” என்று யோசிப்பதை தவிர்க்கவும் : நீங்கள் இப்போது எப்படி இருக் கிறீர்கள் என்பதைப் பற்றிய நினைப்பை விட்டு, மேற்கண்ட வழிகளைப் பின்பற்றினால் எப்படி மாறுவீர்கள் என்பதை யோசிக் கவும்.

“அய்யோ! நான் குண்டு...” என்ற கவலை உங்களுக்கு இருக் கின்றதா என்று தெரிந்து கொள்ளவும்.

இன்னும் என்ன தாமதம்? உங்கள் எடைக் குறைப்பை இப்போதே ஆரம்பியுங்கள்!

மதனா.

## சேலை கட்டும் பெண்ணுக்கொரு...!

நீங்கள் பார்ட்டி அல்லது விழாவிற்கு செல்வதானால் புடை வைத் தலைப்பை மடிக்காமல் ஒரு பக்கத்தில் மட்டும் தோளில் ‘பின்’ செய்து கொள்ளுங்கள்.

புடைவை அணியுமுன் அது சரியாக அயன் செய்யப் பட்டிருக்கிறதா என்று பார்க்கவும்.



கஞ்சி போட வேண்டியிருந்தால், போடப்பட்டிருக்கிறதா என்று பார்க்கவும்.

பருமனான பெண்கள் ஜார்ஜெட், சிஃபான் அணியுங் கள். ஆர்கன்ஸா வேண்டாம், ஏனெனில் அதில் மேலும் பரு மனாகத் தோன்றலாம்.

குள்ளமான பெண்கள் மெல்லிய பிரின்ட், சிறிய போர்டர் போட்ட புடைவைகளை அணியவும். பெரிய பெரிய பிரின்ட்கள், பெரிய போர்டர் உள்ள புடைவைகளில் அவர் கள் மேலும் குள்ளமாகத் தோன்றுவார்கள்.

மெலிந்த பெண்கள் ஆர்கன்ஸா, காட்டன், டிஸ்ஸு, டசர் போன்ற புடைவைகளை அணிந்தால் அவர்கள் நிறைந்த தோற்றம் அளிக்கலாம்.

புடைவையின் தேர்வு, தங்கள் நிறம், காலம், மற்றும் நேரத்துக்கு ஏற்ப செய்ய வேண் டும். கோடையில் ஷிபான், காட்டன் அல்லது கிரேப் அணி யலாம்.


குளிர்காலத்தில் சில்க், கிரேப் போன்றவற்றை அணி யலாம்.

மழை நேரத்தில் சிந்தடிக் புடைவைகள் அணியலாம்.

மாநிறமான பெண்கள் மிக லைட் நிறங்களை தேர்வு செய்யக்கூடாது. அவர்கள் நிறத்திற்கு அது நேர் மாறாகத் தோற்றமளிக்கும். ப்ரைட் நிற புடைவை அவர்களுக்கு ஏற்றது.

*சுதா.*

## பயத்தம் பருப்பு பாயாசம்



தேவையான பொருட்கள் :

**பயத்தம் பருப்பு :- 100 கிராம்**
**சீனி :- 175 கிராம்**
**ஏலக்காய்: - 7**
**முந்திரிப் பருப்பு:- 35 கிராம்**
**பால் :- 1/4 லீற்றர்**

- பயத்தம் பருப்பை இளவறுப்பாக வறுத்து, தண்ணீர் விட்டு, நன்கு கழுவவும்.
- சுமார் ½ லிட்டர் தண்ணீரை கொதிக்கவிட்டு, களைந்த பருப்பை போட்டு கரைய விடவும்.
- நன்றாகக் கரைந்தபின், சீனி போட்டு, கரைந்த பின், பாலை விடவும்.
- பாலை விட்டால், சற்று அடுப்பில் வைத்து எடுக்கவும்.

வறுத்த முந்திரியையும், ஏலப் பொடியையும் போடவும்.

*மீனா.*

## சின்னச் சின்ன பாடங்கள்



**வாழ்க்கையின் இன்ப துன்பங்கள் நமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தருகின்றன. பட்டால் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்றில்லை. மற்றவர்களின் அனுபவங்கள் சில பாடங் களை நமக்குக் கற்றுத் தருகின்றன.**
***இதோ! உங்களுக்கு சில பாடங்கள்.***

✡ **கேட்பதையெல்லாம் நம்ப வேண்டாம். இருப்பதையெல்லாம் செலவழிக்க வேண்டாம். விரும்பும் அளவு தூங்க வேண்டாம்.**

✡ **நிதானமாகப் பேசுங்கள், விரைவாக சிந்தியுங்கள்.**

✡ **உங்களுக்குப் பதில் சொல்லப் பிடிக்கவில்லையென்றால் கேள்வி கேட்பவரைப் பார்த்து ‘‘எதற்காகக் கேட்கிறீர்கள்?’’ என்று புன்னகையுடன் கேளுங்கள்.**

✡ **தோற்றாலும் அதில் கற்ற பாடத்தை கோட்டை விட வேண்டாம்.**
✡ **உறவினர்களை வைத்து ஒருவரை எடை போடாதீர்கள்.**
✡ **மற்றவர்களின் இலட்சியங்களை ஊக்குவியுங்கள்.**
**சண்டை போடும் நேரத்தில் பிரச்சினை பற்றிப் பேசுங்கள். நபர்களைப் பற்றியல்ல.**

*ரேவதி.*

## குழந்தைகளை சாப்பிட வைப்பது எப்படி...?



சாப்பிடாமல் அடம் பிடிப்பது குழந்தைகளின் சுபாவம். அதை மாற்ற முடியாமல் திண்டாடுவது அம்மாக்களின் சுபாவம் என்றாகி விட்டது. அடம் பிடிக்கும் குழந்தை களை ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகளை சாப்பிட வைப்பது சுலபமானதல்ல. மணிக்கணக்கில் நீடிக்கும் சாப்பிடும் நேரங்களை குறைக்க வேண்டுமா? தொடர்ந்து படிக்கவும்.

*குழந்தைகள் முடி வெடுக்கட்டும்*

எதையாவது சமைத்துவிட்டு “இதை சாப்பிடப் போறியா இல்லையா?” என்று குழந்தை களை மிரட்டுவதை மறந்து விடுங் கள். நாளை அல்லது அடுத்த ஒரு வாரம் உங்கள் குழந்தைகள் எதை சாப்பிட விரும்புகிறார்கள் என் பதைக் கேட்டு சமைத்தால் அவர்கள் வேண்டாம் என்று சொல்ல வாய்ப்பு இருக்காது. அவர்கள் கேட்பதெல்லாம் சமைக்க நேரமில்லை என்றால் அவற்றை விடுமுறை நாட்களில் சமைப்பதாகக்கூறலாம்.

இந்த வம்பே வேண்டாம் என்று நினைப்பவர்கள் 2 அல்லது 3 உணவு வகைகளிலிருந்து ஒன்றை தேர்ந்தெடுக்கும்படி குழந்தைகளிடம் கேட்கலாம். குழந்தைகளிடையே எதை சாப்பிட வேண்டும் என்ற சண்டை ஏற்படலாம். அப்படி ஏற்படாமல் இருக்க



“குழந்தைகளிடையே உருவாகும் போட்டி “யைத் தடுப்பது எப்படி என்று தெரிந்து கொள்ளுங் கள்.

*சமையலில் குழந்தைகள் உதவட்டும்*

நீங்கள் சமைக்கும்போது உங்கள் குழந்தைகளின் உதவி யை நாடுங்கள். அவர்கள் வய திற்கேற்ப சமையலில் உங் களுக்கு உதவும்படி கேட்டுக் கொள்ளுங்கள். பரிமாறும் போது, குழந்தை உதவியதை மறக்காமல் அனைவரிடமும் சொல்லுங்கள். நீங்களும் மற்றக் குடும்பத்தினரும் குழந்தையைப் பாராட்டுங்கள். இப்போது குழந்தை முகம் சுளிக்காமல் சாப்பிடுவதைப் பாருங்கள்!

வித்தியாசமாக சாப்பிடட்டும் :– பெரியோர்கள் சாப்பிடுவதைப் போலவே குழந்தைகள் சாப்பிட வேண்டும் என்று நினைக்க வேண்டாம்.

(தொடரும்......)

# மரண விளையாட்டு

அரவிந்த் எல்லோரையும் ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு ''யாருக்கும் வேறு ஏதாவது சந்தேகம் உண்டா? ''என்றதற்கு இல்லையென்பதற்கு அறிகுறியாக அனைவரினதும் தலைகள் அசைந்தன. அப்போது வாசலில் புஜிரோ ஒன்று கிறீச்சிட்டு நிற்கும் சத்தம் கேட்டது. விஜய் தன்னருகில் இருந்த பிஸ்டலை எடுத்துத் தயாரானான். அரவிந்த் அவனைப் பேசாமல் இருக்கும் படி சைகை காட்டிவிட்டு வரும் நபரைக் கவனிக்கலானான். பஜிரோவில் இருந்து திடகாத்திர ஆசாமி ஒருவர் இறங்கி வந்து கொண்டிருந்தார். வந்த ஆசாமியின் முகத்தில் வெளிச்சம் பட்டதும் யார் என்பதைப் புரிந்து கொண்டு ''சேர் நீங்களா?'' என்றான். ஆம் அங்கே பொலிஸ் கமிஷனர் தேவராஜ் சிவிலுடையில் தோன்றினார். ரம்யா விறைத்து நின்று சல்யூட் அடித்தாள்.

''ஓ.கே எல்லோரும் புறப்படுங்கள். உங்களுக்காக விமானம் காத்து நிற்கிறது. வேறு யாரையும் அனுப்பினால் திட்டம் சிதறிவிடும் என்பதால் நானே புறப்பட்டு வந்தேன். உம் புறப்படுங்கள்'' எனப் படபடவென்று கூறியவர் வந்த வழியே விடுவிடுவென்று திரும்பினார்.

''விஜய், ரஞ்சித் ஆகியோர் முதலில் பஜிரோவில் ஏறினார்கள். அரவிந்த், அர்ஜுன், ரம்யா, ப்ரியா ஆகியோர் பின்னர் தங்கள் உடமைகளுடன் ஏறினார்கள். பஜிரோ ஏயர் போர்ட்டை நோக்கிக் காற்றாய்ப் பறந்தது.

இருபது நிமிடக் கரைசலில் பஜிரோ ஏயர் போர்ட்டை அடைந்து தன் வேகத்தைப் பூச்சியமாக்கியது.

அரவிந்தும், அர்ஜுனும் பின் கதவைத் திறந்து முதலில் குதித்தார்கள். தொடர்ந்து மீதிப் பேர் இறங்கி ஸ்கை மாஸ்ரர் பிளேன் நின்ற இடத்திற்கு விரைந்தார்கள். விமானத்தின் ஏணிப்படியைஅடைந்து கமிஷனர் தேவராஜ் கைகுலுக்கி வழியனுப்பிவிட அரவிந்த் முதலில் ஏற மற்றவர்கள்தொடர்ந்து ஏறினார்கள். எயர் போர்ட்டில் அலாரம் 12தடவை அடித்து ஓய்ந்தது. தேவராஜ் கை காட்ட விமானம் புறப்பட்டது.

அரவிந்த் முதலானோர் இரு மாதங்களில் உயிர் ஆபத்தான சாகசமான மரண விளையாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அதன் விளைவு....

* * *

ராம்தாஸின் பங்களாவில் முக்கிய புள்ளிகள் எல்லோரும் ரீ.வி ஸ்கிறீனிற்கு முன்னால் நின்று கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் ஸ்கிறீனில் எலெக்ரன் கற்றைகள் அப்துல் ரகீம் திரையில் தோன்றினான் ''என் நம்பிக்கைக்குரிய அடிமைகளே கவனமாகக் கேளுங்கள், எமக்குப் பெருந்தலையிடியைக கொடுத்துக் கொண்டிருக்கும் அந்த டிடெக்டிவ் நாய் எம்மையெல்லாம் அழிப்பதாகக் கங்கணம் கட்டிக்கொண்டு எம்மைத் தேடிப்புறப்பட்டு விட்டதாகச் சற்று முன்னால் தகவல் வந்தது. அரவிந்த் சாதாரணமானவன் அல்ல. அவனுடன் இருப்பவர்களும் அவ்வளவு அற்பசொற்பமானவர்கள் அல்லர்.. நாம் சந்தித்த எதிரிகளுள் இவர்கள் தாம் மிக்க புத்திசாலிகளும், ஆபத்தானவர்களும் கூட. எமக்கு நிகரான எதிரிகளை இப்போது எதிர்க்கப் போகிறோம். ஆகவே எல்லோரும் அலேட்டாக இருங்கள். எல்லாப் பக்கமும் பாதுகாப்பைப் பலப்படுத்துங்கள். முக்கியமாகக் காட்டுப் பிரதேசம் கவனத்திலிருக்கட்டும். ராம்தாஸ், அவர்கள் முதலில் உன் தளத்தைத் தான் தாக்கப் பார்ப்பார்கள். அதிலேயே நீ நல்ல பாடம் கொடுத்தாய் என்றால் பின்னர் தலை காட்ட மாட்டார்கள்.



ஆனால் அந்த அரவிந்தையும். அர்ஜுனையும் முறியடிப்பது அவ்வளவு சுலபமல்ல. அவன் அரவிந்த் எப்போது என்ன செய்வான் என்று அவனுடன் கூட இருப்பவர்களிற்கே தெரியாது. நீங்கள் தான் அவதானமாகச் செயற்பட வேண்டும். உங்கள் இடம்தான் அவனின் முதல் குறி'' என்ற கூறி முடித்ததும் திரையிலிருந்து விலகினான்.

அரவிந்த் அப்போது அப்துல் ரகீமை மட்டுமல்ல தன்னோடு இருந்தவர்களையும் கூடச் சற்றே ஏமாற்றினான். தன் திட்டத்தைச் சிறிது மாற்றினான். அதன் விளைவு....

* * *

ஸ்கை மாஸ்ரர் இந்தியாவின் மேற்குப் பகுதியை நெருங்கியது. பைலட் அரவிந்தின் பக்கம் திரும்பிச் ''சேர் நீங்கள் இறங்க வேண்டிய இடம் நெருங்கிவிட்டது. ரெடியாகுங்கள்'' என்றான்.

அரவிந்த் சற்று நேரம் யோசிப்பது போல் பாவனை செய்துவிட்டு ''பைலட் நாங்கள் இந்த இடத்தில் இறங்கப்போவதில்லை. இதோ இங்கே தான் இறங்கப் போகிறோம்'' என்று படத்தை விரித்து ஒரு புள்ளியைச் சுட்டிக் காட்டினான்.

''சேர் இந்த இடம் பாகிஸ்தானின் தீவிரவாதிகள் தங்கியிருக்கும் இடம். ஆனால் எங்களுக்குக் கட்டளை இந்தியாவின் மேற்குக் கரையில் தான் உங்களை இறக்கச் சொல்லி''

''எஸ் நீங்கள் கூறுவது சரிதான், ஆயினும் இந்தியாவில் இறங்காமல் நேரடியாகப் பாகிஸ்தானிலேயே இறங்குவோம். ஏனெனில் எதிரிகள் எம்மை இந்தியாவில் தான் எதிர்பார்ப்பார்கள்.'' என்றான்.

இது வரையில் இவர்களது உரையாடல்தனை உன்னிப்பாகக் கவனித்து வந்த ரம்யா, அரவிந்தை நோக்கி, ''அரவிந்த் சேர் எமது திட்டப்படி முதல் குறி அப்துல் ரகீமின் ஆயதத்தளம் தானே. அப்படியாயின் இப்போது ஏன் திட்டத்த மாற்றிவிட்டீர்கள்?

அரவிந்த் இப்போது அப்படியே ஒரு முழுச் சுழற்சியில் ரம்யாவை நோக்கிக் கொண்டு ''ரம்யா நான் முதலில் வெளிப் படையாகத் திட்டமிட்டது அப்படித் தான். ஆனால் எனது உண்மையான திட்டம் அதுவல்ல பொய்யான ஒரு திட்டம் எதிரிகளைச் சென்றடையட்டும் என்று தான் அதனை அவ்வாறு வெளிப்படையாகத் திட்டமிட்டுக் கொண்டேன். உண்மையான திட்டத்தைப்

## மாயவன்

பாகிஸ்தானில் இறங்கிய பின் தான் கூறுவேன்.''

விஜய் அர்ஜுனை நோக்கிவிட்டு அவ்வாறே அரவிந்தை நோக்கித் திரும்பியவாறு ''சேர்...'' என்று ஏதோ கூற ஆரம்பிக்கவும் அரவிந்த் அவசரமாக அவனை இடைமறித்து ''விஜய் இனி எமக்குள் எந்த வேற்றுமையும் கிடையாது. இந்த மரியாதையெல்லாம் தேவையில்லை. நாம் ஒன்பது பேரும் ஒன்றாக இந்த அபாயகரமான மரணவிளையாட்டில் இறங்கிவிட்டோம். எமக்குள் எந்தப் பாகுபாடும் வேண்டாம். நீ சாதாரணமாகப் பெயரைச் சொல்லியே கூப்பிடலாம். நீ மட்டுமல்ல இனி எல்லோரும் பெயரைச் சொல்லியே அழைக்கலாம். உம் இனி சொல், என்ன கேட்கப் போகிறாய்?''

''அரவிந்த் எதிரிகள் எமது திட்டத்தை ஒட்டுக் கேட்கிறார்கள் என்பதை எவ்வாறு கண்டு பிடித்தாய்?'' என்றான் விஜய்.

''விஜய் இப்போது அழைத்தாயே அது க்ரெக்ட் இதோ பார் இதுதான் எனது திட்டம் மாறுவதற்குக் காரணமாக இருந்தது.'' என்று கூறி ஐந்து சதவடிவில் ஒருபொருளை எடுத்துக் காட்டினான் அனைவரும் பார்த்தறியும் படி.

''டேய் அரவிந்த் இதனை எங்கு கண்டுபிடித்தாய்?'' என்றான் அர்ஜுன்

''உன் வீட்டில தான் என்று ஒரு குண்டைத்தூக்கிப் போட்டான்.

''என்ன?'' என்றவாறு எல்லோரும் ஒரே கணத்தில் குரலெழுப்பினார்கள் அர்ஜுனைத் தவிர. அதனைத்தொடர்ந்து சில கண நேர அமைதி நிலவியது. அரவிந் அந்த மௌனத்தைக் கலைத்தவாறு, ''அர்ஜுன் நான் உன் வீட்டுக்குப் போன் பண்ணியவுடன் வந்து நீங்கள் எல்லோரும் இருந்து அறையினுள் நுழையும் போது சுவரிலிருந்த வோல்க்குளொக் 4 மணியைக் காட்டியவாறு நின்று

## தொடர்கதை

போயிருந்தது. அதனைச் செற் பண்ண எடுத்தேன். அதன் பின்புறம் பற்றரியிலிருந்து வயர்க்னெக்சன் ஒன்று செல்வதைக்

## அங்கம் 22

கண்டேன். அந்த கனெக்சன் இந்த மைக்ரோ பக்கிங் இன்ஸ்ருமென்டுக்குத் தான் சென்றது. பற்றரியில் இருந்து கரண்ட் இதற்குச் சென்றதால்தான் குளாக் நின்று விட்டது என்பதையும் புரிந்து கொண்டேன். ''என்று நிறுத்தியவன் தொடர்ந்து'' மீதியை ஊகித்துப் புரிந்து கொண்டதால் தான் என் திட்டத்தை மாற்றிக் கூறினேன். அப்படி இருந்தும் எனக்கொரு சந்தேகம். அர்ஜுன் உனக்கு இந்த மைக்ரோ பக்கிங் இன்ஸ்ருமன்ட்பொருத்தப்பட்டிருப்பது முன்னரேயே தெரியுமா?''

''எஸ் அரவிந்த் முதலிலேயே கண்டு விட்டேன். அதனால் தான் உன் திட்டத்திற்கு ஆமாப் போட்டேன். இந்த மைக்ரோ பக்கிங் இன்ஸ்ருமன்ட் பின்னர் கழற்றுவோம் என்று விட்டிருந்தேன். ஆனால் நீ முந்திக் கொண்டு விட்டாய்?''

''டேய் நான் ஒரு வேளை இதைக் கவனிக்க வில்லையானால்?''

''அரவிந்த் உன் கண்ணிலிருந்து எதுவும் தப்பாது என்று எனக்குத் தெரியும்'' அப்படி நீ ஒருவேளை கவனிக்கவில்லை தானும். நானே திட்டத்தை மாற்றி மாற்றிக் கூறிப் பின் சந்தர்ப்பம் கிடைக்கும் போது உனக்கு எச்சரித்திருப்பேன்''

''பைலட் சேர் பெற்றோல் தாராளமாகஇருக்கிறது தானே?''

''எஸ் சார் உங்களைப் பாகிஸ்தானிலேயே இறக்கி விடுகிறேன்'' என்றார்.

''தட் இஸ் ஓ.கே உம் எல்லோரும் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தயாராகுங்கள்'' என்று கூறினான் அரவிந்த்.

மற்றும் இன்னொரு மறைப்பில் எண்முனை கூர்ப்புக் கொண்ட சுரிக்கன் மூன்று ஆகியவற்றையும் எடுத்துக் கொண்டவன் பரசூட் பெல்ற்களை மாட்டினான்.


அர்ஜுன் தோள்களிற்குக் குறுக்காகத் தோட்டாமெல்ற் அணிந்து ரெட் ஐ மிஷின்கன், போன்றவற்றையும் அதில்பொருத்தும் விஷம் செறிந்த மிகச் சிறிய அம்புகளையும் எடுத்தான். T - 56, A-K 47 வகைக் கன்களையும் அவற்றிற்கான தோட்டாக்களையும் எடுத்து மாட்டித் தன்னை ஒழுங்குபடுத்திக் கொண்டவன் பரசூட் பெல்ற்களை மாட்டிக் குதிக்கத் தயாரானான்.

ரம்யாவும், ப்ரியாவும் தோள்களில் நவீன வில்களும். அம்புகளும்சகிதமாக ஸ்டென் கன்கள், தோட்டா பெல்ற்கள், 5mg துப்பாக்கிகள், பைனாக்குலர்கள், பல்வகைக்கத்திகள் போன்ற தம்மால் உச்சளவாகத் தாங்கக் கூடிய பொருட்களை எடுத்துக் கொண்டதும் பரசூட் பெல்ற்களை அணிந்து குதிக்கத் தயாரானார்கள்.


விஜய், ரஞ்சித், எட்வேட், ஜெகன்,அபிநாஷ் ஆகியோர் மிஷின் கன்கள், புல்லட்ஸ், வயர்லெக்ஸ் செட்கள், கண்ணி வெடிகள், 900km சுற்றளவிற்கு ஒலி பரப்புத்திறன் கொண்ட நவீன ரேடியோ கருவிகள், கையெறி குண்டுகள், கூடாரம் அடிக்கத் தேவையான பொருட்கள் போன்றவற்றையும், உணவுப் பொதிகள், தண்ணர்க் கேன்கள் போன்றவற்றினையும் எடுத்துக் கொண்டு பரசூட் பெல்ற்களையும் தங்களையும் இணைத்துக் கொண்டார்கள்.

'அரவிந்த் சேர் ரெடியா?' என்று பைலட் குரல்கொடுக்கவும் 'ஓ.கே ரெடி' என்று பதில் குரல் வந்ததும் விமானம் படிப் படியாகத் தன் உயர்ததினின்றும் குறைந்து 2500 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது.

(தொடரும)



# கம்பியூட்டர்க் கல்வி



## இன்ரநெற்றும் குழந்தைகளும்



தாங்களே பிழையான சுய முடிவுகளை எடுக்கக் கூடும்.

பெற்றோர்கள் இன்ரநெற்றைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியவை இன்னும் உள்ளன. ரீவியில் படங்களை ''வயது வந்தவர்களுக்கு மட்டும்'' என்று வகைப்படுத்துவதைப் போலவே இன்ரநெற்றிலும் வயது வந்தவர்களுக்கு மட்டுமான வெப் பக்கங்கள் உள்ளன. அவற்றில் பாலியல் சம்பந்தமான படங்கள், கட்டுரைகள் உள்ளன. உங்கள் குழந்தைகள் இன்ரநெற்றில் வலம் வரும் போது இந்தப் பக்கங்களையும் சந்திக்க நேரலாம். இந்தப் பக்கங்கள் அவர்களுக்கு உகந்தவையல்ல. இன்ரநெற்றில் ஒரு விடயத்தைப் பற்றித் தேடுவதற்கு **Search Engine**கள் துணை புரிகின்றன. **YAHOO, LYCOS, INFOSEEK, ALTAVI STA** போன்றவை பிரபலமான**Search Engine**உதாரணமாக உங்கள் குழந்தைகள் **SHORT STORIES** என்ற விடயத்தை தேடும் போது **ADULTSTORIES** என்ற வெப் பக்கங்களும் அவர்களுக்குக் கிடைக்கக் கூடும். இவ்வாறான விரும்பத்தகாத வெப் பக்கங்களை வடிகட்டி நல்ல விடயங்களை மட்டும் தருவதற்கு என நிறைய **Filter Program** கள் இருக்கின்றன. ஆனால் இவைகள் எல்லாம் பூரணமானவை அல்ல. சில நல்ல விடயங்களைக் கூட அவை வடிகட்டி விடக்கூடும். ஆகவே குழந்தைகள் இன்ரநெற்றை உபயோகிக்கும் போது உடனிருந்து வழி நடாத்துவது தான் வடிகட்டலை விடச் சிறந்தது.

### பெற்றோர்களுக்கான அறிவுரைகள்

1. உங்களுடைய தனிப்பட்ட விபரங்களை (விலாசம்,வயது, தொலைபேசி இலக்கம், குழந்தையின் பாடசாலைப் பெயர், குழந்தையின் படம்) இன்ரநெற்றின் பொதுப் பக்கங்களுக்கு வழங்க வேண்டாம்.

2. இன்ரநெற்றை உபயோகிக்க அறிந்து கொள்வதன் மூலம் குழந்தைகளின் செயற்பாட்டில் பங்கு கொண்டு வழி நடாத்துங்கள்.

3. உங்கள் குழந்தைகள் அவர்களுடைய இன்ரநெற் நண்பர்களை உங்கள் மேற்பார்வையின்றி நேரடியாக சந்திக்க அனுமதிக்க வேண்டாம். இவ்வாறான ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்படுவதாயின் அது ஒரு பொது இடத்திலும் உங்கள் மேற்பார்வையுடனுமே நடத்தல் அவசியம்.

4. அநாமதேய அல்லது அறிமுகமில்லாத **E.Mail** களுக்கு பதிலளிக்க வேண்டாம் என உங்கள் குழந்தைகளுக்கு அறிவுறுத்துங்கள்.

5. தேவையற்ற **e.mail**கள் அல்லது படங்கள் அல்லது பயமுறுத்தல்கள் உங்களுக்கு அனுப்பப்பட்டால் அவை பற்றி உங்களுடைய இன்ரநெற் சேவை வழங்கும் நிறுவனத்திற்குத் தெரியப்படுத்துங்கள்.

6. குழந்தைகள் இன்ரநெற் உபயோகிக்கும் நேரங்களை அவதானியுங்கள். உங்கள் கண்காணிப்பு தவிர்க்கப்படுவதாக நீங்கள் உணர்ந்தால் அல்லது பின்னிரவு நேரங்களில் அவர்கள் இன்ரநெற்றை உபயோகிப்பார்களாயின் பிரச்சினைகள் இருக்க வாய்ப்புண்டு.

7.குழந்தைகளுடைய இன்ரநெற் நண்பர்களைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

8. கம்பியூட்டரைப் பொதுவான இடத்தில் வையுங்கள். குடும்ப அறையானது **(Family Room)** மிகவும் நல்லது.

9. குழந்தைகள் **e.mail Account** வைத்திருப்பார்களாயின் அதை பொதுவானதாக்கி நீங்களும் உபயோகியுங்கள்.

(தொடரும)

# இந்தியக் கிரிக்கெ[கா]ட்டில் ஓயாது கர்ஜித்த கபில்!

இயல்பாகவே இருந்த திறமையுடன் தானாக உபயோகப்படுத்திய உத்திகளையும் வைத்து தன்னை ஒரு தலை சிறந்த பந்து வீச்சாளராகக் கபில் வெளிப்படுத்திய பாங்கினைக் கடந்த வாரம்ஆராய்ந்தோம்.அதே நேரம் உலகின் அற்புதமான சகல துறைக் கிரிக்கெட் வீரர் என்ற சாதனையை அவர் அடையக்காரணமான துடுப்பாட்ட, தடுப்பாட்ட விபரங்களையும் அவதானிக்கின்றபோதே கபில்தேவ் என்ற கிரிக்கெட் வீரரின் பூரணத்துவத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

முன்பே கூறியது போல ஹரியாணா அணிக்காகப் பதினொராவது துடுப்பாட்டக்காரராகக் களமிறங்கிய கபில், கவாஸ்கர், விஸ்வநாத், வெங்சகார் போன்றோர் ஆடிய அன்றைய பலம்மிக்க இந்தியத் துடுப்பாட்ட வரிசையில் ஏழாவது வீரராக உள் நுழைந்து படைத்த வரலாறுகள் மறக்க முடியாதவை. டெஸ்ற் போட்டிகளில் வேகவேகமாக ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்திவிட்டு எதிரணியைத் துடுப்பாடப் பணிக்கப் போகும் சந்தர்ப்பங்களிளெல்லாம் ''சிவமணியின் ட்றம்ஸ் இசையென''ச் சுழன்றாடியவர், ஆரம்பத்திலேயேஇலக்குகள் வீழ்ந்து அணி தடுமாறுகின்ற போது ''குன்னக் குடியின் வயலினிலிருந்தெழும் மெல்லிய கீர்த்தனை''யாக நிதானித்தார். அவ்வாறே அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகும் ஒரு நாள் ஆட்டங்களில் கபிலின் வேகத்திற்கு மைக்கேல் ஜாக்ஸன் தோற்றார் போங்கள்!

கபில்தேவின் -out-swinger களில் அடிபட்டு - ஆடிப்போய் - ஆட்டமிழந்த எதிர்த்தரப்பு ஆட்டக்காரர்கள் அவரது துடுப்பின் ஆக்ரோஷத்தையும்சகித்துக் கொண்ட சந்தர்ப்பங்கள் அனேகம். அவற்றுள் ஒரு சுவாரசியமான சம்பவத்தை இங்கு நோக்குவோம். 1990ஆம் ஆண்டு, லோட்ஸ் மைதானம். இந்திய - இங்கிலாந்து அணிகளிற்கிடையேயான டெஸ்ற் போட்டியில் அணித்தலைவர் கிரஹாம் கூச்சின் முச்சதத்துடன் 653/4 என்ற நிலையில் இந்தியாவைத் துடுப்பெடுத்தாட அழைக்கின்றது இங்கிலாந்து. அஸார், சாஸ்திரியின் சதங்களோடு ஒருவாறு 430 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இந்தியாவின் ஒன்பதாவது இலக்கு வீழ்கின்றது. ஒருபுறம் கபில் காத்திருக்க, மறுபுறம் பந்துவீச்சு, துடுப்பாட்டத்தில் முரளி, மக்ராத் வகையறாவைச் சேர்ந்த நரேந்திரா ஹிர்வானி களமிறங்குகின்றார்.

இன்னும் 23 ஓட்டங்களைப் பெற்று **Follow - on**இனைத் தடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் இந்தியா இருந்தது. என்ன நிகழப் போகின்றதோ என எல்லோரும் எண்ணியிருக்க, எடிஹெம்மின்ஸ் வீசிய ஓவரின் இறுதி நான்கு பந்துகளையும் எதிர்கொள்கின்றார் கபில். ஹிரீகரிகோட்டாவிலிருந்து புறப்பட்ட செயற்கைக் கோளை அதன் ஓபிற்றலில் நிலைநிறுத்த இந்தியாவின் இன்றைய குடியரசுத் தலைவர் அன்று என்ன பாடுபட்டாரோ தெரியாது. ஆனால், இந்த நூற்றாண்டின் சிறந்த இந்தியக் கிரிக்கெட் வீரர் அன்று தொடர்ச்சியாக அனுப்பிய நான்கு ''ராக்கெட்''களும் லோட்ஸ் அரங்கின்; **long-on** எல்லைக்கு ''டாட்டா'' காட்டிச் சென்ற காட்சி என்றுமே பசுமையானது. அந்த நான்கு சிக்ஸ்ஷர்களுடன் **Follow -on** இல் மட்டுமன்றி போட்டியிலும் இந்தியா தப்பிக் கொண்டது.

## கொற்றமாய் நிமிர்ந்து...

குருளையாய் தவழ்ந்து, கர்ஜித்து எழுந்த கபில்தேவ் என்னும் சிங்கம் இந்தியக் கிரிக்கெட்டின் கொற்றமாய்த் திகழ்ந்த காலம் இந்தியன் கிரிக்கெட் வரலாற்றிலேயே ஒரு பொற்காலமெனில் அது மிகையன்று. ஆம்!, 1983 இல் உலகக்கிண்ணத்தை வென்றெடுத்ததன் மூலம் பாரதத்தில் மட்டுமன்றி இந்தப் பாரினிலேயே ஒப்பற்ற ஓர் தானத்தை அவர் பெற்றுக் கொண்டார். அ.தி.மு.க.என்றால் ஜெயலலிதா,ஜெயலலிதா என்றால் அ.தி.மு.க. (!) என்பது போல் கிரிக்கெட்டிற்கும் மேற்கிந்தியாவிற்குமிடையே ஒரு பிரிக்கமுடியாப் பிணைப்பிருந்த காலமது.



1983 உலகக் கிண்ணத்துடன் கபில்தேவ்

ஏற்கனவே இரண்டு கோப்பைகளைக் கொஞ்சி விளையாடிய கிளைவ்லொயிட்டின் தலைமையில் முறையே துடுப்பாட்டதிலும் பந்து வீச்சிலும் உலகின் முதற்தர நிலையிலான விவியன் ரிச்சாட்ஸ், மைக்கேல் ஹோல்டிங் போன்ற வீரர்களின் வலுவுடன் மேற்கிந்தியா திடமாக இருந்தது.

மேற்படி பின்னணியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 183 ஓட்டங்களை மட்டுமே பெற்று, மூன்றாவது தடவையாகவும் ஜெயிப்பதன் மூலம் உலகக் கோப்பையைக் கரீபியணிற்குக் கொண்டு செல்லும் லொயிட்டின் கற்பனைக்கு மேலும் வளம் சேர்த்திருந்தது. ஆனாலும் ''பொதுவாக என்மனது தங்கம்; ஒரு போட்டியென்று வந்துவிட்டால் சிங்கம்!'' என எழுந்த கபிலின் மனோதிடத்துடன் ஏனைய வீரர்களின் ஆத்மபலமும் இணைந்து கொள்ள மேற்கிந்தியா மண்டியிட்டது. ஆட்டத்தின் கதாநாயகனாகத் தெரிவான அமர்நாத்தின் சகலதுறைச் சாதனையை மறக்க முடியாவிட்டாலும் கபில்தேவ் பிடித்த ஒரு பிடியே போட்டியின் போக்கையே தீர்மானித்தது என்பதும் மறுக்கப்படவொண்ணாததே. தனியொருவராகவே ஆட்டத்தின் தலைவிதியை மாற்றவல்ல விவியன் ரிச்சாட்ஸ் தவறுதலாக நேரங் கணித்துத் தூக்கியடித்த பந்தை - மிக நீண்ட தூரம் - பின்புறமாக ஓடிச் சென்று - அத்துணை அழுத்தத்திற்கும் பரபரப்பிற்கும் மத்தியில் அவர் அலாக்காகக் கையகப்படுத்தியமை, களத்தடுப்பில் மட்டுமன்றி சூழ்நிலைகளின் நெருக்குதல்களிற்கு முகங்கொடுக்கக்கூடிய திறமையையும் வெளிப்படுத்தியது.

அதே உலகக்கிண்ணத் தொடரிலேயே செய்து கொண்டிருந்த போதே மேற்சொன்ன குற்றச்சாட்டு எழுந்திருந்தது. அதனைத் தொடர்ந்து சர்வதேச ரீதியிலான கிரிக்கெட் சம்பந்தங்களிற்கெல்லாம் ஒரு முழுக்குப் போட்டார் கபில். தான் இந்தியக் கிரிக்கெட்டினை இராஜாங்கம் செய்த காலங்களில் புதுமுக வீரர்களாக அறிமுகமான சிறீகாந்த், அஸார் போன்றவர்கள் பின்னர் அணித் தலைவர்களாக ஆகிய போது அவர்களுடன் கபில் காட்டிய ஒத்துழைப்பு அபாரமானது. அதிலும் தான் கண்ட அணித்தலைவர்களிலேயே அற்புதமானவர் சிறீகாந்த், எனக் கூறியதன் மூலம் தனது பெருந்தன்மையை மேலும் ஒருபடி உயர்த்திக் காட்டினார். இந்த ஒப்பற்ற ஆல் - ரவுண்டர்.

## பெற்றார் பெரும்புகழ்

இக்கட்டுரைத் தொடரில் ஏலவே குறிப்பிடப்பட்டவாறு இந்தியக் கிரிக்கெட் சரித்திரத்திற்கும் கபில்தேவ் என்ற பெயரிற்கும் இடைப்பட்ட நெருங்கிய தொடர்பை எண்ணற்ற உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டலாம். சுமார் 15 வருடங்களாக நீண்ட தனது கிரிக்கெட் சரிதத்தில் ஆக ஒரேயொரு டெஸ்ற் போட்டியையே - அதுவும் தேர்வாளர்களின் தில்லுமுல்லுகளால் கபில் தவறவிட்டிருந்தார். மறுபுறம் முன்பே ஆடப்பட்டிருந்த ஏழு போட்டிகளைத் தவிர அவரது காலத்தில் இந்தியா கலந்து கொண்ட 238 ஒருநாள் சர்வேதசப் போட்டிகளில் 13 இனை மட்டுமே தனது ஆக்ரமிப்பிற்கு (!) உட்படுத்தாது விலக்களித்திருந்தார். இவ்விரு தரவுகளும் ஒரு தேசிய அணிக்காக் ஒரு கிரிக்கெட் வீரர் செலுத்தியிருக்கும் பங்களிப்பின் அதியுன்னதத்தை அறியத்தருவதுடன் இன்னொரு முக்கிய விடயத்தையும் வெளிக்காட்டுகின்றன.

ஓர். அணி பெரிதும் நம்பியிருந்த வேகப்பந்து வீச்சாளராக, அதிரடித் துடுப்பாட்ட வீரராக, உத்வேகம் மிக்க களத்தடுப்பாளராக ஓய்வு ஒழிச்சலின்றி சிம்பாப்வேயிற்கு எதிரான முக்கிய போட்டியொன்றில் வெறும் பத்து ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நான்கு இலக்குகளை இந்தியா இழந்திருக்க அணித்தலைவா களமிறங்கினார். பரிதாபம்!. 17 ஓட்டங்களில்

க.சேந்தன்

மற்றைய விக்கெட்டும் வீழ்ந்தது. வெட வெடத்துப் போவாரோ கபில்? இல்லை, வெளுத்து வாங்கினார். உற்சாகப் பூரிப்பில் மிதந்த சிம்பாப்வே பந்து வீச்சாளர்களின் உள்ளம் வேக - இந்தியாவின் முதலாவது ஒரு நாள் சதத்தை - அதுவும் ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்களைப் பெற்று பூர்த்தி செய்வதோடு இலாவகமாக அணி வெற்றி பெறவும் உதவினார். இவ்வாறு '78 இலிருந்து 94' வரை இந்தியக் கிரிக்கெட் அணியின் ஒவ்வோர் அசைவிலும் கபிலின் நிழலும் சேர்ந்தே ஆடியது.

ஆட்டத்தில் காட்டிய அபரிமிதமான ஈடுபாட்டைத் தவிர தனது அணி சார்பான விடயங்களிலும் கபில்தேவ் முன்னணி வகித்தார். இலட்சியத் தலைவராக வழி நடத்தியதன் மூலம் இளம் வீரர்களை ஊக்கப்படுத்தினார். ''**Ku ku**''எனச் செல்லமாக அழைக்கப்பட்ட கபில், ஒரு விளையாட்டு வீரனிற்கிருக்க வேண்டிய கட்டுக் கோப்பிலும் தன்னொழுக்கத்திலும் அதிக கவனஞ் செலுத்தினார். மும்பாய் ஒருநாள் போட்டியில் வென்றதைத் தொடர்ந்து தனது சேர்ட் (**shirt**) டைக் கழற்றி.்.பிளின்ரோப் காட்டிய ''சேட்டை''யை நட் - வெஸ்ற் தொடர் இறுதியாட்ட முடிவில் கங்குலி பிரதிபலித்ததறகாகக் கபில் அவரை விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அப்பேர்ப்பட்டவர் கூட ஆட்ட நிர்ணய சதி வழக்கின் போது மனோஜ் பிரபாகர் மூட்டி விட்ட (வ/ல) ஞ்சப் ''புகை''யில் சிக்கி - மூச்சுத்திணறி - கண்கலங்கி நின்றதும் பின் மத்திய புலனாய்வுப் பணியகத்தின் (**C.B.I.**)துரித விசாரணையில் விடுவிக்கப்பட்டதும் காலத்தின் ஜாலமாகும்.

இந்தியத் தேசிய அணியின் பயிற்றுவிப்பாளராகக் கிடைத்தவாய்ப்பைப் பயன்படுத்தி, தான் திட்டமிட்டு வைத்திருந்த பல கற்பனைக் கருக்களிற்கு ஒப்பனை தொடர்ந்து இவ்வாறு பிரகாசிக்க அவர் உடல் வளமும் உதவியிருக்கின்றதே என்பதே மலைப்பிற்குரிய அந்த மற்றைய விடயமாகும். வெறுமனேஒரு சிறியளவிலான தசைப் பிடிப்பிற்கே ''குய்யோ முறையோ!'' என ஆர்ப் பாட்டம் செய்து அற்ப சிகிச்சைகளிற்காக அதிக சலுகை களுடன் வெளிநாடு பறக்கத் திரியும் இன்றைய ஆட்டக் காரர்களுடன் ஒப்



விஸ்டன் விருதுடன் கபில் குடும்பம்

பிடுகையில் கபில் கபில்தான். நீண்ட தூர மிதமான வேக ஓட்டப் பயிற்சிகள் மூலம் தேக ஆரோக்கியத்தைப் பேணியதாகக் கூறியவர், வேகப்பந்து வீச்சாளர்களின் இன்றியமையா வளமான புஜங்களையும பலமானவைகளாகப் பார்த்துக் கொண்டார்.

கபில்தேவ் ஆடிய அதே காலத்தில் இங்கிலாந்தின் இயன்போத்தம், பாக்கிஸ்தானின் இம்ரான்கான் போன்றவர்களும் கிரிக்கெட் உலகின் பெருஞ் சவால் மிக்க சகலதுறை மன்னர்களாக மின்னினர். அவர்களிடையேயும் கபிலின் பெறுபேற்றுத் தரவுகளே சிறந்தவைகளாக விளங்கின. இப்படியான ஜாம்பவான்கள் மத்தியில் கபில் நன்மதிப்பும் பெற்று உயர்ந்தார். ''(வேகப்பந்திற்குச் சாதகமான) இங்கிலாந்து, நியூசிலாந்து ஆடுகளங்களில் ஆடியிருந்தால் குறைவான போட்டிகளிலேயே 500 இலக்குகளை வீழ்த்தியவராகக் கபில்தேவ் இருந்திருப்பார்'' என இம்ரான் பாராட்டியமைசுண்டு கவனிக்கற்பாலது.

எப்படியோ இந்தியக் கிரிக்கெட் வானில் ஒரு ஜொலிப்புமிக்க நட்சத்திரமாகக் கபில் மாறி விட்டார். கவாஸ்கரிற்குப் பிறகு சச்சின், சந்திரசேகர் - பேடிக்குப் பிறகு கும்ப்ளே - ஹர்பஜன் எனப் பல ''வாரிசுகள்'' வந்த போதும் கபில்தேவின் பின் காலியான அந்த ஆல் - ரவுண்டர் தானத்தை ஓரளவேனும் நிவிர்த்தி செய்யவல்ல ஒருவர் இன்னும் உருவாகாததிலிருந்தே இந்த நூற்றாண்டின் தலை சிறந்த இந்தியக் கிரிக்கெட் வீரரிற்கான விஸ்டனின் விருது ஏன் கபிலிற்குச் சொந்தமான தென்பது தெற்றெனத் தெளிவாகின்றதன்றோ?

* * *


| கபில்தேவின் சாதனைப் பட்டியல் | டெஸ்ற் போட்டிகள் | ஒருநாள் போட்டிகள் |
|---|---|---|
| போட்டிகளின் எண்ணிக்கை | 131 | 225 |
| ஓட்டங்கள் | 5248 | [illegible]782 |
| சதங்கள் | 8 | 1 |
| அரைச்சதங்கள் | 27 | 14 |
| அதிகூடிய ஓட்டம் | 163 | ஆ.இ.175 |
| இலக்குகள் | 434 | 253 |
| சிறந்த வீச்சு | 9/83 | 5/43 |
| பிடிகள் | 64 | 71 |

## ஜோக்ஸ்



கொடிகட்ட வெச்சிருந்தேன். உங்களிற்கு வேற கயிறே கிடைக்கலையா?

''அரிச்சந்திரன் கதையிலிருந்து நமக்கு என்ன தெரியுது?''
''முதல்லேயே ஒரு பொய்யைச் சொல்லியிருந்தா, அவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டாம்!''






## நாடுகளும் அவற்றின் தேசிய விளையாட்டுகளும்



- இந்தியா - ஹொக்கி, கபடி
- இலங்கை - எல்லே
- துருக்கி - மல்யுத்தம்
- பாகிஸ்தான் - ஹொக்கி
- அவுஸ்திரேலியா - கிறிக்கெட்
- ஜப்பான் - கராத்தே, யூடோ
- ஸ்கொட்லாந்து - காற்பந்து
- ஸ்பெயின் - ஜல்லிக்கட்டு
- கனடா - ஹொக்கி

வி. உரேஸ்.
சென் ஜோன்ஸ் கல்லூரி.

வலம்புரியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மூத்த பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தச் சிறுவர் பாடல் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

## வெண்புறாவே! வெண்புறாவே!!

வெண்புறாவே வெண்புறாவே
விரைந்து ஓடி வா
விண்ணிலிருந்து மண்ணை நோக்கி
விரைவில் பறந்து வா

சின்னஞ்சிறு பாலர் நாங்கள்
சிறிது நேரம் உன்னிடம்
சில கதைகள் சொல்லவேண்டும்
சீக்கிரமாய்ப் பறந்து வா

ஊரினிலே குண்டுச் சத்தம்
உறவுகளின் அழுகைச் சத்தம்
ஆரிடம் இதைச் சொல்வது
அமைதிப் புறாவே விரைந்து வா

அகதி முகாம் வேண்டாம் இங்கு
இடம் பெயர்வும் வேண்டாம்
அமைதி மட்டும் வேண்டும்
அமைதிப் புறாவே வா வா

சண்டைகள் எமக்கு வேண்டாம்
குண்டுச் சத்தமும் இங்கு வேண்டாம்
சாந்தியே என்றும் வேண்டும்
சமாதானமே வேண்டும் வேண்டும்

அழகிய தீவினிலே நாம்
ஆனந்தமாய் வாழ வேண்டும்
அமைதிப் புறாவே வந்திடு
அமைதியை அள்ளித் தந்திடு

ப. பங்கஜமலர், கோண்டாவில்.

## சிவபெருமான்




எஸ்.எஸ்.ராஜ்குமார்,
மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

## கங்காரு



சூ.நஜீவ்,
அருணோதயக் கல்லூரி.

## முயல்



அ.சஞ்ஜீவ்,
டிறிபேக் கல்லூரி.

அன்பில்லாதவர்கள் - நீரற்ற மேகத்திற்கும், பழமற்ற மரத்திற்கும் சமமானவர்கள்.

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந் தீட்டத்தயார் தானே?



## சென்றவார விவேகப் புதிருக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | 3 | 8 | 6 |
| 8 | 6 | 1 | 3 |
| 6 | 8 | 3 | 1 |
| 3 | 1 | 6 | 8 |

தெ.ஹர்சன்,
யா.மத்தியகல்லூரி.

## இவ்வார விவேகப் புதிர்

| | | |
|---|---|---|
| | 4 | |
| 12 | 20 | 28 |
| | 36 | |

இடைவெளியாக உள்ள 4 மூலைக் கட்டங்களிலும் ஏதோ ஒரு எண்ணைப்புகுத்தினால் கூட்டும் போது விடையாக 60 (அறுபது) வரும் எங்கே மூளைக்கு வேலையைக் கொடுங் கள் பார்க்கலாம்.

(விடை மறு இதழில்)

## அரண்மனைக் கோமாளி



ஒரு காலத்தில் ஓர் அரசனின் அரண்மனையில் ஒரு கோமாளி இருந்தான். அவன் மன்னனின் அன்பைக் கவர்ந்திருந்தான். அதனால் உயர் அதிகாரிகளை அவமதித்தான். இதனால் எல்லோருக்கும் அவன் மீது கோபம் ஏற்பட்டது. அவன் வரம்பு மீறிச் சென்று விட்டான். அரசரையே பரிகாசம் செய்து அவமதித்து விட்டான். மோபமடைந்த அரசன் கோமளிக்கு மரண தண்டனை விதித்தான். கோமாளி அரசனின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட் டான். அரசரோ மனம் மாற வில்லை. ஆனால் எந்த வகையில் தான் சாக வேண்டுமென்பதைக் கோமாளியே முடிவு செய்யலாம் என்றார். முதுமை காரணமாகத் தான் இறக்க வேண்டும் என்றான் கோமாளி. அந்த உரிமையை மன்னரால் மறுக்க முடியவில்லை. கோமாளி தனது மதியால் உயிர் பிழைத்தான்.

T.ஜெனந்திகா,
செட்டிக்குளம் மகா வித்தியாலயம்.

## துன்ப மூட்டை!

ஒரு ஊரிலே ராஜு என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் எப்போதும் தன்னுடைய கவலைகளை எண்ணிக் கலங்கியபடியே இருப்பான். எல்லோரையும் விடத்தானே அதிகம் துன்பத்தைச் சுமப்பதாக எண்ணி மனம் வருந்திய அவன், இறைவனிடம் சென்று ''இறைவா! என்னுடைய துன்பங்களையெல்லாம் நீ இன்னொருவரிடம் கொடுத்து விட்டு, அந்த இன்னொருவருடைய கவலைகளை எனக்குத்தா'' என்று வேண்டினான்.

அன்று இரவு அவன் தூங்கும் போது ஒரு அசரீரி கேட்டது. 'அன்பானவர்களே! நீங்கள் எல்லோரும் உங்கள் உங்கள் துன்பங்களை ஒரு மூட்டையாகக் கட்டி ஊர் எல்லையில் இருக்கும் கோவிலுக்குக் கொண்டு வாருங்கள்'' என்று.

உடனே ராஜு எழுந்து தன் துன்பங்களை ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்து, வீட்டிற்கு வெளியே வந்தான், அதிர்ந்தான். வீதியில் எல்லோரும் ஆளுக்கு ஒரு மூட்டையைத் தூக்கிக் கொண்டும், தூக்க முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டு செல்வதையும் பார்த்தான்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இவனுடைய மூட்டையை விட மற்றவர்களின் மூட்டை பெரியதாக வேறு இருந்தது. இப்போது அவன் நினைத்தான் ''கடவுளே! இப்போது இருக்கும் சூழ்நிலையைப் பார்த்தால் என்னுடைய மூட்டையே பரவாயில்லைப் போலிருக்கிறதே'' என்று.

அப்போது கோயிலில்



மீண்டும் அசரீரி கேட்டது. ''எல்லோரும் உங்கள் மூட்டைகளைச் சுவரில் தொங்க விடுங்கள். தீடீரென்று விளக்குகள் அணையும்! மணி அடிக்கும். அது தான் அடையாளம். அந்த நேரத்தில் நீங்கள் உங்கள் துன்ப மூட்டைகளை விட்டு விட்டு இன்னொருவருடைய மூட்டையை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் பின் மீண்டும் விளக்குகள் எரியும்.''

அசரீரியை அடுத்து விளக்கு அணைந்தது. மணி அடித்தது. மீண்டும் விளக்கு எரிந்தது. அப்போது பாாத்தால் எல்லோரும் அவரவர்கள் துன்ப மூட்டைகளை இறுக்கிப் பிடித்தபடியே இருந்தார்கள்.

அப்போது ராஜு அருகிலிருந்தவரைப் பார்த்துக் கேட்டான். ''நீங்கள் ஏன் உங்கள் மூட்டையை இறுகப்பிடித்தபடி இருக்கிறீர்கள்?'' என்று. அதற்கு அவர் ''நீயும் என்னைப் போலத்தான் இருக்கிறாய். எங்களுடைய துன்பங்களைப் பற்றி எங்களுக்கு ஓரளவாவது தெரியும். அதனால் எங்களுடைய கவலைகளைச் சாமளிப்பது சுலபம். ஆனால் மற்றவர்களுடைய கவலை என்ன வென்றே தெரியாமல், அதனை அதிகம் சுமப்பது கடினம்தானே?'' என்று கேட்டார்.

ராஜுவும் உண்மையை உணர்ந்து . தன்னுடைய மூட்டையுடன் சந்தோஷமாக வீடு வந்து சேர்ந்தான்.

**சிறுவர்களே கதையைப் படித்தீர்களா! வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கும் துன்பங்களிற்காக மனம் தளர்ந்து விடாதீர்கள். இறை சிந்தனையோடும், பொறுமையோடும் உங்கள் துன்பங்களை வெல்லுங்கள்.**

தொகுப்பு:- சுஜா

## படிப்பதே எங்களின் பொறுப்பு



படிப்பு அதுவே
மாணவர் எங்கள்
இதயத் துடிப்பு
படிப்பில் வேண்டும்
ஒரு பிடிப்பு
அதுவே எமக்கு
என்றும் சிறப்பு
படிப்பில் வேண்டாம்
ஒரு வெறுப்பு
படிக்கும் வயதில்
கல்வியே எம் உறுப்பு
துடிப்போடு படித்தால்
துலங்கிடும் வாழ்வில் சிறப்பு!

த.அஜந்தகுமார்,
நெல்லியடி ம.ம.வி.

## கல்வி

* கவலை அற்ற எதிர் காலத்திற்குக் கல்வியே நிகழ் காலம்.
* பிறப்பு அன்னையால் சிறப்பு கல்வியால்.
* எடுக்கக் குறைவது செல்வம் கொடுக்க வளர்வது கல்வி.
* வாழ்க்கைப் பிரச்சனையை சமாளிக்க உதவுவதே கல்வி.
* கல்வியே எமக்கு உயிர்.
* அறிவை மேலும் கூர்மையாக்க உதவுவதே கல்வி.

ஜீ.நிலானி,
நெ.மெ.மி.த.க. பாடசாலை.

## சமத்துவம்



'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதைவெறும் தேர்தல் கோஷமாக்கி விடாமல் நடைமுறையில் அமுல்செய்து அதன் காரணமாகவே துப்பாக்கிக் குண்டுகளைப் பரிசாகப் பெற்ற செயல் வீரர் ஆபிரகாம்லிங்கன். மரக்கட்டை வீட்டிலிருந்து வெள்ளை மாளிகைக்கு, உழைப்பாலும், உண்மையாலும், உயர்ந்த உத்தமர். முதல் முறை தேர்தலுக்கு நின்று தோற்றார். தேர்தல் பிரசாரத்தின்போது ''நீங்கள் எனக்கு வாக்களித்தால் நன்றியுள்ளவனாக இருப்பேன்... வாக்களிக்காவிட்டால் அப்பொழுதும் உங்களுக்கு என் நன்றி குறையாது என்றார்.'' அடிமை வியாபாரத்தை ஒழித்த லிங்கனுக்கு அமெரிக்கா மட்டுமல்ல; மனிதப் பண்புள்ள மக்கள் அனைவருமே நன்றி பாராட்டக் கடமைப் பட்டவர்கள்.

தொகுப்பு:- நீர்வை மணி

## இவரைத் தெரியுமா — பரிசுப் போட்டி இல:— 25



**படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?**

அமர்க்கள நாயகன் இவர். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர் வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**'இவரைத் தெரியுமா போட்டி இல:- 25'**
**"சங்குநாதம்"**
*இல.15,வெள்ளாந்தெரு,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல:— 25**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..................................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-..................................

அனுப்புபவரின் முகவரி :-..................................
..................................
..................................

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 24**
**சரியான விடை**





**நடிகை தேவயானி**

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 24 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

**முதற்பரிசு :—** ஜெ.சாந்தரூபன்
கம்பளிகப்பான்,
அல்வாய் வடமத்தி,
அல்வாய்.

**இரண்டாம்பரிசு:—** த.கபிலன்
444/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம்பரிசு:—** சி.கிருஷ்ணமதி
உடுவில் கிழக்கு,
இணுவில்.

**சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-**
*க.இரஞ்சினி யாழ்ப்பாணம், சி.சுதர்சினி கொடிகாமம், இ.சங்கீதா கண்டிவீதி, மு.கிருசாந் வரணி, சி.நவரெத்தினம் ஆனைப்பந்தி, நா.வசீகரன் நாவாந்துறை, ம.சைலஜா கரவெட்டி, வி.யனுஷ்யா யாழ்ப்பாணம், வ.ராகா யாழ்ப்பாணம், ப.கேசிகா வேலணை, ம.துவாரகீசன் ஆனைப்பந்தி, யோ.கலாரஞ்சினி சரசாலை.*

## மதுவின் கதை....

*(10ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

இருட்டிலே தட்டுத்தடுமாறி கைவிளக்கை எடுத்து, நெருப்புப் பெட்டியையும்தேடி எடுத்து விளக்கைக் கொழுத்தினான்.

தான் வீட்டில் வைத்திருக்கும் பீடி ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான். பீடியை நன்றாக உறிஞ்சிப் புகையைவிட்டான். குறைப்பீடியை எறிந்து விட்டு, குழந்தைகளுக்குக் கிட்டப்போய் குனிந்து இரண்டையும் மாறிமாறிக் கொஞ்சினான். அதுகள் புரண்டுபடுத்தன. ''பீடிமணக்குதப்பா'' என்று இனி சொல்லமாட்டாய் என்று பெரியவளின் முகத்தைப்பார்த்து நினைத்தான். வெளியே சைக்கிள் கரியலில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தெடுத்துக் கொண்டு விறாந்தையைக் கடந்துகொண்டு கதவைத் திறந்து கொண்டு தாயறை வீட்டுக்குள் போனான்.

நேரம் எட்டு மணியைத் தாண்டியிருந்தது. கைவிளக்கு மங்கிமங்கி எரிந்து கொண்டிருந்தது. மண்ணெண்ணை இல்லையோ! யாரறிவார்? சில் வண்டிரைச்சலுடன் பயங்கரமான இரவாக இருந்தது.

சிவாவை ஏமாற்றிய மாலா கிணற்றுக்குள்ளே ஒரு பெரியகல்லை உருட்டிப் போட்டு விட்டு பற்றைக்குள் பதுங்கி இருந்த மாலா, சிவா வெறியில் கிடப்பான் என எண்ணிக்கொண்டு மெதுவாக எழுந்து வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தாள். கைவிளக்கும் அப்போது தான் அணைந்திருந்தது. எரிந்ததற்கு அடையாளமாக திரி எரிந்த இடம் சில விநாடி சிவப்பாக இருந்தது.


''அதுக்கிடையில் அணைஞ்சு போச்சு'' என்று எண்ணியவள் மெதுவாகப் போய் தான் வைத்திருக்கும் டோச்லைற்றை தடவி எடுத்தாள். லைற்றை எடுத்து நெருப்புப் பெட்டியையும் லாம்பையும் எடுத்து லாம்பைப் பற்ற வைத்தாள். ஒளியைத் தீண்டினாள். விறாந்தை முழுக்க வெளிச்சம் பரவியதும் குழந்தைகள் உறங்குவது தெரிந்தது.

சிவாவைத் தேடியது மாலாவின் கண்கள். தாயறைக் கதவு திறந்து கிடந்தது. உள்ளே படுத்துக்கிடப்பான் என எண்ணியபடி லாம்புடன் உள்ளே போனாள்.


ஒருகணம் அவள் அதிர்ந்து போனாள்! இதயமெல்லாம் வெடித்துச் சுக்குநூறாகியது! வாயடைத்துப் போனாள்!. குழறமுடியவில்லை...!!

ஆம் அங்கே சிவா தூக்குக் கயிற்றிலே தொங்கிக் கொண்டிருந்தான். நாக்கு நீண்டு கொண்டிருந்தது. தன்னுடைய விசர்த்தனமாக வேலையால் மாங்கல்யம் பறிபோனதை அவள் உணர்வாளா? சிவா ஏன் இப்படி அவசரப்பட்டாய்? எல்லாம் மதுவின் கதைதான்.




க.ராஜா
வயது - 22
31-A, முதலாம் குறுக்குத்தெரு,
வவுனியா.
பத்திரகை, T.V, வானொலி.




சோ.நிரஞ்சன்
வயது - 15
182, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கவிதை, கதை, வானொலி,
பத்திரிகை.



T.கேசவன்
வயது - 20
13/5^A, அடப்பங் குளம்,
வவுனியா.
வானொலி, கிரிக்கற்




நா.ஜெனார்த்தனன்
வயது - 15
23, B.A தம்பிலேன்,
யாழ்ப்பாணம்.
கவிதை, கதை, வானொலி,
கரம் விளையாடுதல்



த.ஜெனந்திரன்
வயது - 10
13/5^A , அடப்பங் குளம்,
வவுனியா.
கிரிக்கற், சிறுகதை வாசித்தல்.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 26




*அனுப்ப வேண்டிய முகவரி*

**குறுக்கெழுத்துப் போட்டி இல -26**
***'சங்குநாதம்'*,**
***இல:- 15, வெள்ளாந்தெரு,***
***வண்ணார்பண்ணை,***
***யாழ்ப்பாணம்.***

*பெயர்* :- ..................................................
*விலாசம்* :- ..................................................
..................................................
..................................................

.............✂ *இங்கே வெட்டுக*.............................................

## இடமிருந்து வலம்

(1) வானமும் நிலமும் சந்திப்பது போல் தோன்றும் இடம் (4) ஒரு வகை இசைக் கருவி (5) சராசரி இருக்க வேண்டிய தரத்திலும் குறைவு (6) 'இல்லாள் இதில் இருக்க இல்லாத தொன்றில்லை' என்றொரு பழமொழியுண்டு (7) நிலம் (9) ஓடம் (11) பள்ளம் (12) பழமை

## மேலிருந்து கீழ்

(1) சுறுசுறுப்பும், உற்சாகமுமில்லாத தன்மை (2) மனச்சோர்வு ஏற்படும் போது வதனத்தில் ஏற்படும் மாற்றம் (3) அழகு கெட்டது (4) பிச்சையெடுப்பது (8) நோய் (9) மித்திரி (10) எருது

**குறுக்கெழுத்துப்போட்டி இல.25 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**

**1.ஒப்பனை 4. பற்று 5. திருப்பணி 9. பரமானந்தம்**

**மேலிருந்து கீழ்**

**1. ஒத்திகை 2. படைப்பு 3. வறுமை 4. பணிவு 6. வீரம் 7. மனம் 8. வதம்**

**பரிசு பெற்றோர் பெயர் விபரம்**

**முதற் பரிசு :~** த.சுஜந்தினி
5 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.

**இரண்டாம் பரிசு :~** ந.ரஞ்சிதா
இல.14, அன்னசத்திரலேன்,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு :~** சா.துலஷ்சி
30, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.


**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்.**

***மோ. மயூரி திருநெல்வேலி, க.அனுஷன் மானிப்பாய், பே.தினேஸ்குமார் உரும்பிராய், கு.பாலகிருஷ்னா சுழிபுரம், கே.அரசேஸ்வரன் யாழ்ப்பாணம், கோ.சுபேதா நல்லூர், ரா.ராகவி உடுப்பிட்டி, லோ.கீர்த்திகா கொட்டடி, பி.திவ்யா ஆனைப்பந்தி, M.தர்சினி திருநெல்வேலி, இ.சாருகி சாவகச்சேரி, வெ.சுகந்தினி நீர்வேலி, சசி சித்தன்கேணி, , இ. அருந்ததி கோண்டாவில், த. பிரதீபன் யாழ்ப்பாணம்.***

**குறிப்பு:~**

குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல.26" எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி 24-08-2002. பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |




## காயத்ரி ஜெயராமன் - விமல் காதலுக்கு ஸ்ரீமன் முட்டுக்கட்டை

பிரபல கம்ப்யூட்டர் சென்டர் முழுக்க அழகான இளம் பெண்களும், ஆண்களும் நிறைந்திருக்க, பிரபாகர் தன் நண்பன் முத்துவுடன் ஒரு கம்ப்யூட்டரில் 'சாட்டிங்' செய்து கொண்டிருக்கிறான். அப்போது அங்கு வருகிறாள் ஸ்ரீ. "இன்னைக்காவது உன் காதலை பிரபாகர்கிட்ட சொல்லிடு" என மனசு சொல்ல, ஸ்ரீ ஆசையோடு பிரபாகரிடம் தன் காதலைச் சொல்ல வருகிறாள். ஸ்ரீயைப் பார்த்த பிரபாகர், "ஹலோ ஸ்ரீ" என்று இன்முகத்துடன் வரவேற்கிறான். தன் நண்பனை மருத்துவமனையில் சேர்க்க [illegible] கொடுத்த செயினை, "நாளைக்கு தருகிறேன்" என்கிறான். அதற்கு ஸ்ரீ, பரவாயில்லை பிரபாகர் – எங்க வீட்ல நான் அந்த செயின் தொலைஞ்சி போச்சுன்னு சொல்லிட்டேன்' என்கிறாள். அதைக் கேட்ட பிரபாகரின் நண்பன் முத்து சந்தோஷப்படுகிறான். ஸ்ரீ பிரபாகரிடம், "உங்ககிட்ட பர்சனலா பேசணும், பிரபாகர்" என்கிறாள். அவளைப் பேசவிடாமல் தடுத்த முத்து, எதுவா இருந்தாலும் நீங்க நாளைக்குப் பேசிக்குங்க... இப்ப எங்களுக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கு' எனக்கூறி பிரபாகரை இழுத்துக் கொண்டு வெளியே செல்கிறான், முத்து. ஸ்ரீ தன் காதலைச் சொல்ல முடியவில்லையே என தவித்து நிற்க... "கட்" என்றார் டைரக்டர் புவி.

இப்படியொரு காட்சி, "சேலையூர் சென்டரில்" தயாரித்து வெல்லாம்" கப்பட்டது.

வேளச்சேரி அருகே உள்ள சி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சத்யா மூவி மேக்கர்ஸ் வரும் "நீ வரும் பாதை படத்திற்காக படமாக் பிரபாகராக "விமலும்", "காயத்ரி ஜெயராமனும்", முத்துவாக "ஸ்ரீமனும்" நடித்தனர். "படத்தின் தலைப்பே காதல் கதைன்னு சொல்லுது ?" என்றோம் இயக்குநரிடம். காதல்தான்...



வழக்கமான காதல் இல்லை. தவிர... தமிழ் சினிமாவுக்கே உரிய சில மரபுகளையும் இதில் உடைத்திருக்கிறோம். ஒரு வரிதான் கதை, மொத்தப்படமும் ப்ளேலதான் நிக்கும். சுருக்கமா சொல்றதுன்னா... காதல் கோட்டையோட செகண்ட் பார்ட்னு சொல்லலாம்!" என்கிறார்.

தயாரிப்பு கிருஷ்ணமூர்த்தி, எம்.வி. கோவிந்தராஜ் இசை பரத்வாஜ் ஒளிப்பதிவு எஸ். ஆர். கணேஷ் தயாரிப்பு நிர்வாகம் பி.கே. செல்வம் கதை, திரைக்கதை, இயக்கம் புவி இணைத் தயாரிப்பு டி.சி. பாண்டியன் பாடல்கள் பழனிபாரதி, தாமரை, சிநேகன் நடனம் பிருந்தா, லலிதாமணி, கூல் ஜெயந்த் சண்டைப் பயிற்சி ஆர்.கே. முரளி படப்பிடிப்பு வேகமாக, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## வில்லனுக்கு குட்பை சொல்லிவிட்டு கதாநாயகனாகிறார் கரண்!

கமலஹாசன் நடித்த 'நம்மவர்' படத்தில், வில்லனாக அறிமுகமானவர் கரண். தொடர்ந்து பல படங்களில் அவர் வில்லன் வேடத்தில் நடித்தார்.

வில்லனாக நடிக்க வந்த வாய்ப்புகளை உதறிய கரண் இனிமேல் கதாநாயகனாக மட்டுமே நடிப்பது என்ற முடிவுக்கு வந்திருப்பதாகச் சொல்லியிருந்தார். இப்போது அந்த வாய்ப்பு வந்திருக்கிறது. படத்துக்கு பெயர் 'கஜேந்திரா'. இந்த படத்தை விஜயேந்திரா புரொடக்ஷன் சார்பில் புதுவை சித்தர், விஜயேந்திரா ஆகிய இருவரும் தயாரிக்கிறார்கள்.

இதில் கரண் ஜோடியாக புதுமுகம் ஒருவர் அறிமுகம் ஆகிறார். கதை, வசனம், பாடல்கள் புதுவை சித்தர் திரைக்கதை, டைரக்ஷன் அலெக்ஸ்பாண்டியன் இசை ஜே. தருண் ஒளிப்பதிவு ராஜராஜன் எடிட்டிங் ஜெய்சங்கர் கலை மோகன்ராஜ் தயாரிப்பு மேற்பார்வை வி.ஜி.பி. முத்து இந்த படத்தின் இயக்குநர் அலெக்ஸ்பாண்டியன், "ஆண்களை நம்பாதே", "மை இந்தியா" ஆகிய படங்களை டைரக்ட் செய்தவர்.






## 3 பிரமாண்டமான அரங்குகளில் கவிதாலயாவின் அல்பம்

கே. பாலச்சந்தர் வழங்க கவிதாலயாவின் ஆதிபகவன் பிலிம்ஸ் தயாரித்து வரும் படம் "ஆல்பம்". இந்த படம் வேகமாக வளர்ந்து வருகிறது.

ஜீவாவின் முற்போக்கு சிந்தனை, அமைதி. . . கண்ணியம். . . நடை. . . உடை. . . அத்தனையையும் ரசிக்கிறாள் விஜி. தோழிகளுடன் விளையாட செல்வதற்காக சைக்கிளில் சென்று கொண்டிருந்த விஜி, நேராக ஜீவா நடந்து வருவதைப் பார்த்து அவன் அருகே போய் நிற்கிறாள்.



உம் மனசுல என்ன நினைச்சிட்டிருக்க. . ? எப்ப பாத்தாலும் உம்முனு முகத்தை வெச்சிகிட்டிருக்கேன்னா பரவாயில்ல. . . உன் நண்பர்கள்கிட்ட மட்டும் நல்ல வீரபாண்டிய கட்டபொம்மன் மாதிரி வீரா வசனம் பேசற. . . அதுவும் எட்டு ஊருக்கும் கேட்கறமாதிரி. . . என்னை பாத்தா மட்டும் ஏன் உனக்கு இந்த அமைதி. . ? என்று படபடவென பேசினாள். அவளையே முறைத்து பார்த்து கொண்டிருந்தான் ஜீவா. சரி. . சரி. . இப் நான் விளையாட போறேன்.

அதுக்காவது 'பெஸ்ட் ஆப் லக்'ன்னு சொல்லக்கூடாதா? என்று வெட்கத்தில் கேட்கிறாள். "பெஸ்ட் ஆப் லக்" என்று ஜீவா சொல்ல. . . ஆனந்தத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் விஜி ஓடினாள்.

தத்தளிக்குதே தாவி குதிக்குதே. . . தாமரை பூ ஒண்ணு தாவணியில் கலக்குதே. . . ஒரு வழி பாதையில் உரச உரச விலகியது ஏன், ஒரு விழி பார்வையில் மூச்சுதிணற செய்து ஏன், ஓயாமல் ரத்தம் கொதிப்பது ஏன்? என்று இருவரும் கற்பனையில் பாடினார்கள்.

பார்த்திபாஸ்கர் எழுதிய இந்த பாடலை சாதனாசர்க்கம், திப்பு, கார்த்திக் பாடியுள்ளார்கள். இதில் ஜீவாவாக ஆர்யன் ராஜேஷ், விஜியாக ஸ்ருதிகா நடித்தார்கள். ஏவி.எம். வாஹினி ஸ்டுடியோக்களில் உள்ள மூன்று பிரமாண்டமான அரங்குகளில் படமாக்கப்பட்டது ஆர்யன் ராஜேஷ், ஸ்ருதிகா, பாலசந்திரமேனன், விஜயகுமார், சரிதா, கருணாஸ், லட்சுமி மற்றும் பலர் நடிக்கிறார்கள்.



## கல்லூரி விழாவில் ஷெரீன் கடத்தல்

கேட்டரிங் பயிற்சி கல்லூரியில் ஒன்றாக படிப்பவர்கள் ஜெயாவும், பிரீத்தியும். இருவருமே நடன பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்கள்.

தங்களது கல்லூரியில் நடந்த உலக பெண்கள் தின கொண்டாட்டத்தின் போது ஜெயாவும், பிரீத்தியும் நீயா, நானா என்ற ரீதியில் "ஜின் ஜின்னா ஜின்ஜின்னா ஜீன்ஸைப் போட்டு நாம ஆடுற ஆட்டமோ அதிர்வேட்டு" என்று கவர்ச்சிகரமாக உடையணிந்தபடி போட்டி போட்டு ஆடிப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

அந்த விழாவுக்கு தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கவும், பரிசு வழங்கவும் வந்திருந்த கிருஷ்ணா, புலிகேசி, விஜயன் ஆகிய மூவரும் பிரீத்தியின் உடையையும், அவளின் அங்க அசைவுகளையும் பார்த்து கிறங்கிப் போனார்கள். நடனத்துக்கு இடையே கரண்ட் கட் ஆனது. மீண்டும் மின்சாரம் வந்தபோது பார்த்தால், பிரீத்தி கடத்தப்பட்டிருந்தார். விழாவுக்கு வந்திருந்த கிருஷ்ணா, புலிகேசி, விஜயன் மூவரும் மாயமாக மறைந்து போயிருந்தார்கள். அதைப் பார்த்து ஜெயா அதிர்ச்சி அடைந்தார்.

இப்படியொரு காட்சி ரத்னா பிலிம்ஸ் தயாரிக்கும் அமுதா துரைராஜின் "ஜெயா" படத்துக்காக பத்து லட்சம் ரூபாய் அரங்கில் படமானது. ஜெயாவாக ரம்யா கிருஷ்ணன், பிரீத்தியாக ஷெரீன், புலிகேசியாக "தலைவாசல்" விஜய், கிருஷ்ணாவாக பாபுராஜ், விஜயனாக பெப்சி விஜயன் நடித்தனர். மற்றும் ஸ்ரீமன், ரமேஷ்கண்ணா, கருணாஸ், மனோரமா, வாணிவிஸ்வநாத், அம்பிகா, திரிலோக், அனுமோகன், சூரிய காந்த், மதன்பாப், குமரிமுத்து ஆகியோரும் நடிக்கிறார்கள்.

ஒளிப்பதிவு கே.வி. மணி பாடல்கள் பா. விஜய், பழனிபாரதி, தாமரை, நியூட்டன், கபிலன் இசை பரணி எடிட்டிங் வி.டி. விஜயன் தயாரிப்பு மேற்பார்வை குமார் நடனம் பிருந்தா, பிரசன்னா, சிவசங்கர் அசோக்

கதை, திரைக்கதை, வசனம் அமுதா துரைராஜ் டைரக்ஷன் ரத்னா ராஜ், கலாநாதன் தயாரிப்பு ஆர்.சி. வெங்கடாத்ரி.



இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.